விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 26 ஞாயிற்றுக்கிழமை (11.08.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 235

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தகவல்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-7204)
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# எழுக தமிழ் எழுச்சிப் பேரணி

# செப்ரெம்பர் 16 இல்



## பொது அமைப்புகள் பேராதரவு நேற்றைய கூட்டத்தில் முடிவு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை நடத்துவதென நேற்று நடைபெற்ற பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (15ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலை மாணவர்கள் பேரணியில் அணிதிரள்வர்

### மாணவர் ஒன்றியச் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் 16ஆம் திகதி நடைபெறவுள்ள எழுக தமிழ் எழுச்சிப்பேரணிக்கு யாழ்பல்கலைக்கழக மாணவர்ஒன்றியம்தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. 15

## ஒழுக்கமும் கட்டுப்பாடும் பிரபாகரனிடம் நிறைந்திருந்தது

### மகிந்த ராஜபக்ஷ புகழாரம்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்திருந்ததென மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 03

## எழுக தமிழ் பேரணிக்கு ரெலோ ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் 16 ஆம் திகதி தமிழர் தாயகம் தழுவியதாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு ரெலோ தனது பூரண ஆதரவை வெளியிட்டுள்ளது. அதே வேளை பேரணிக்கான ஏற்பாட்டுக்குழுவில் தனது கட்சி சார்பில் இரு பிரதிநிதிகளையும் நியமித்துள்ளது.

நேற்று நடைபெற்ற பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

### எதிர்வரும் சில தினங்களில்

## வடக்கில் பலத்த காற்றுடன் அடை மழை பெய்யலாம்

### 9 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் எதிர்வரும் சில தினங்களுக்கு வடக்கு உட்பட நாட்டில் பல பாகங்களில் பலத்த காற்று மற்றும் அடை மழையுடனான சீரற்ற காலநிலை நீடிக்கும்என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்தோடு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன் 15

### முல்லைத்தீவில்

## பாரவூர்தி குடைசாய்வு

### ஒருவர் உயிரிழப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - சிலாவத்தை பகுதியில் மீன்கள் ஏற்றிச் சென்ற பாரவூர்தியொன்று குடை 15



### திருமலைக்கு சுற்றுலா சென்றவேளை

## வவுனியா மாணவன் உட்பட இருவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(குருமன்காடு)

திருகோணமலை குச்சவெளி கடலில் நீராடச் சென்ற வவுனியா மாணவன் உட்பட இருவர் நீரில் மூழ்கி நேற்று உயிரிழந்துள்ளனர்.

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் இருந்து சிலர் வாகனம் ஒன்றில் குச்சவெளிப் பகுதிக்கு சுற்றுலா சென்றுள்ளனர். இதன்போது குறித்த கடல் பகுதியில் பெண்கள், ஆண்கள் என சுற்றுலா சென்றவர்கள் நீராடிக் கொண்டிருந்த போது மாணவன் உட்பட இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர்.

அங்கு நின்றவர்கள் குறித்த இருவரையும் மீட்க முயன்ற போதும் அது பயனளிக்காத நிலை 15

### சங்கீதக் கதிரை போன்றே

## எமது நாட்டு அரசியல் இடம்பெறுகின்றது – சஜித்



(சாவகச்சேரி)

எமது நாட்டு அரசியலில் தற்போது சங்கீதக் கதிரை போன்ற விளையாட்டு இடம்பெற்று 15

## எதிரணி வேட்பாளரை தோற்கடிக்கக் கூடியவரே ஐ.தே.க ஜனாதிபதி வேட்பாளர் – ரவி

(கொழும்பு)

எதிரணி வேட்பாளரை தோற்கடிக்கக்கூடிய, பலமிக்க ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க தீர்மானித்துள்ளதாக 15

## இன்னல்படும் தமிழ் மக்களின் விடிவிற்காகவே போராடுகின்றோம்

### எழுக தமிழ் பேரணியில் கலந்துகொள்ளுமாறு நீதியரசர் விக்னேஸ்வரன் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்னல் படும் தமிழ் மக்களின் விடிவிற்காகவே நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். எனவே தமிழ் மக்களுக்காக நடைபெறும் எழுக தமிழ் பேரணியில் கலந்து கொள்ளுமாறு நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார். 04

### ஜனாதிபதி வேட்பாளராக

## கோத்தபாய ராஜபக்ஷ இன்று அறிவிக்கப்படுவார்

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின்தலைமை பதவியை இன்று மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்கிறார்.

இன்று மாலை 3 மணிக்கு சுகததாச அரங்கில் நடைபெறும் பொதுஜன பெரமுனவின் 15

# தமிழர் பிரச்சினையை நீட்டித்து அரசியல் ஆதாயம் தேடிக்கொள்ளவே கூட்டமைப்பு விரும்புகின்றது – ஜே.வி.பி

(கொழும்பு)


நல்லாட்சி அரசாங்கத்திற்கு கூட்டமைப்பு எதற்காக ஆதரவு வழங்கியதோ அந்த நோக்கங்கள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

அவ்வாறிருக்க இன்னமும் அரசாங்கத்தின் மீது எவ்வித விமர்சனங்களுமின்றி அநாவசியமாக கூட்டமைப்பு அரசாங்கத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் எதிர்வரும் தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்குவதன் ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்க்கும் நோக்கங்களைப் பெருமளவில் அடைந்து கொள்ள முடியாது என்றே நாங்கள் கருதுகின்றோம் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

தமிழ் பிரதிநிதிகள் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி தமிழர் பிரச்சினைக்கு தீர்வைப்பெற முற்பட்ட அதேவேளை, அப்பிரச்சினையை நீட்டித்து அரசியல் ஆதாயம் தேடிக் கொள்ளவும் விரும்பினார்கள்.

தனிநாடு, தனி நிர்வாகம் என்பதை அவர்கள் ஒரு அரசியல் சுலோகமாகவே



பயன்படுத்தினார்கள் என்று தமிழர் பிரதிநிதிகள் தொடர்பில் கடுமையான விமர்சனத்தை முன்வைத்திருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதிகமானோரின் விருப்பத்துடன் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வினைப் பெற்றுத் தருவேன் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்நிலையில் நல்லாட்சி அரசாங்கத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியமை தொடர்பிலும், இனிவரும் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கூட்டமைப்பு ஆதரவு வழங்குமாக இருந்தால் அதன் பலாபலன்கள் குறித்தும் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம-3)

# நாய் குறுக்கே பாய்ந்ததில் விபத்து: இருவர் படுகாயம்

## கீரிமலைப் பகுதியில் சம்பவம்

வீதியின் குறுக்கே நாய் பாய்ந்ததில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்துக்கு முன்பாக இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் ஏழாலை மயிலங்காட்டைச் சேர்ந்த 36 வயதுடைய இராசதுரை செந்தீபன் என்பவர் வீதியின் குறுக்கே பாய்ந்த நாயுடன் மோதுண்டு கை மற்றும் தலைப் பகுதியில் பலத்த காயங்களுக்குள்ளாகி மயங்கிய நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இடம் பெற்ற மரணச்சடங்கின் இறுதிக்கிரியை செய்வதற்காக கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்துக்கு சென்ற வேளையே இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெல்லிப்பளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-78)

## தேர்தலில் வெற்றி பெறுவதற்கு

# எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை – ஜே.வி.பி

கோத்தபாய ராஜபக்ஷவுக்கோ அல்லது ஐக்கிய தேசிய கட்சிக்கோ தேர்தலில் போட்டியிடுவதற்கான பெரும்பான்மை இல்லை. இதன் காரணமாகவே அவர்கள் ஏனைய கட்சிகளை இணைத்துக் கொண்டு கூட்டணி அமைக்கும் முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எனினும் இம்முறை மக்கள் ஆட்சி மாற்றமொன்றை எதிர்பார்த்திருக்கிறார்கள். மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப அரசியல் புரட்சியொன்று ஏற்படும் என்று தாமும் எதிர்பார்ப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

உத்தேச ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி வேட்பாளர் ஒருவரை களமிறக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. அது குறித்து வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம-3)

# மாநகர முதல்வர் பயன்படுத்தும் வாகனத்தை ஒப்படைக்குமாறு

## ஆளுநர் சுரேன் ராகவன் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை முதல்வர் பயன்படுத்தும் உத்தியோகபூர்வ வாகனத்தை மீள ஒப்படைக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் எழுத்துமூலமான கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்.மாநகர முதல்வர் பயன்படுத்தி வரும் உத்தியோகபூர்வ வாகனம் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பயன்படுத்திய உத்தியோகபூர்வ வாகனமாகும்.

குறித்த வாகனத்தை தற்காலிகமாக யாழ்.மாநகர சபை முதல்வருக்கு வழங்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## எனது தந்தை எம்மோடு இருந்திருந்தால்

# 2000ஆம் ஆண்டிலேயே சகலருக்கும் வீடு கிடைத்திருக்கும் – சஜித் பிரேமதாஸ

எனது தந்தையார் ரணசிங்க பிரேமதாஸ எம்மோடு இருந்திருந்தால் 2000ஆம் ஆண்டிலேயே யாவருக்கும் வீடு கிடைத்திருக்கும் என வீடமைப்பு நிர்மானத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ யாழில் வைத்து தெரிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை தென்மராட்சி-மந்துவில் பகுதியில் இடம்பெற்ற மாதிரிக் கிராம திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

எனது தந்தை ரணசிங்க பிரேமதாஸ பூமியில் வாழ்ந்த காலத்தில் அவருக்கு இருந்த இலக்கு 2000ஆம் ஆண்டில் நாட்டு மக்கள் சகலருக்கும் வீடு கிடைக்க வேண்டும் என்பதே. ஆனால் 1993 மே மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற கோர சம்பவம் மூலம் எனது தந்தை என்னை விட்டுச் சென்று விட்டார். அதன் காரணமாக யாவருக்கும் வீடு என்ற திட்டம் தடைப்பட்டது. அதன்பிறகு 2015 ஜனவரி 08ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட பெரிய மாற்றம்தான் புதிய ஜனாதிபதி மற்றும் பிரதமர் உருவாக்கம். அந்த மாற்றத்தினூடாக யாவருக்கும் வீடு என்ற விடியல் பயணம் மீண்டும் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

2025இல் யாவருக்கும் வீடு (செமட்ட செவண) என்பதே எனது இலக்கு. செமட்ட செவண வேலைத்திட்டம் ஊடாக இருபதாயிரம் வீடுகளை உருவாக்கிக் கொடுப்பதே எனது நோக்கம். எனது நோக்கத்தை நான்கு திட்டங்களாக வகுத்துள்ளேன்.

முதலாம் கட்டமாக 2500 வீடுகள். இரண்டாம் கட்டமாக 5000 வீடுகள், மூன்றாம் கட்டமாக 10.000 வீடுகள். இறுதிக் கட்டமாக 2500 வீடுகள் அமைத்துக் கொடுப்பதே எனது திட்டம். முதலாவது திட்டத்தை 2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முடிக்க தீர்மானித்திருந்தேன்.

ஆனால் திறமையான அதிகாரிகளின் செயற்பாடு காரணமாக 2019 ஜூலை 15ஆம் திகதியே வெற்றிகரமான முறையில் முதலாவது திட்டம் நிறைவடைந்துள்ளது.

இன்று 2548 வீடுகள் நாடளாவிய ரீதியாக நிர்மானிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன. நான் இலக்கை நோக்கி வேலை செய்வேன். எனக்கு தொலைநோக்கு சிந்தனை உண்டு. எனது இலக்கை நிறைவேற்ற கால அவகாசம் ஒன்றினையும் வகுத்து வைத்திருப்பேன்.

எதிர்வரும் நவம்பர் மாதம் உங்கள் எல்லோருக்கும் ஒரு வாய்ப்பு வருகின்றது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி என்னை ஆதரிக்கும் பட்சத்தில் ஒட்டுமொத்த இலங்கைக்கும் வீட்டுத்திட்டத்தை வழங்கி வைப்பேன் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (ம-30)

**காணி விற்பனைக்கு**

பலாலி வீதி கோண்டாவில்
ராஜா பிளாஸாவுக்கு
அண்மையில் உடைந்த வீட்டுடன்
2 1/4 பரப்புக்காணி
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (C-7256)

077 213 2956

**கேள்வி அறிவித்தல்**

வடமராட்சி புற்றளை சித்தி விநாயகர் ஆலயம் 05.09.2019 அன்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டு மீள்கட்டுமானம் செய்ய இருப்பதனால் அதனை ஒப்பந்த அடிப்படையில் கட்டித் தருவோர் தேவைப்படுகின்றனர்.

எனவே ஒப்பந்தக்காரர்கள் 20.08.2019க்கு முன்னர் கீழ்க்காணும் முகவரியுடனோ, தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

தலைவர்,
ஆலய பரிபாலன சபை
புற்றளை, புலோலி.
T.P:0778097352

(7257)

**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1994, மிதுனலக்கினம் லக்கினத்தில் சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன் 6½ கி.பாவம் Bio Medical Science முடித்த பெண்ணிற்கு ஏற்ற மணமகன் தேவை. (9860)

077 873 0129
VIBER 075 041 0325

**பராமரிப்பும் வைத்திய சேவையும்**

வயோதிப நோயாளர்கள், வயோதிபர்கள், சத்திரசிகிச்சைக்குட்பட்டவர்கள் போன்றோருக்கான பராமரிப்பும் வைத்தியசேவையும் உரியமுறையில் வழங்கப்படும். (9860)

077 873 0129

**துரித தபால்கள் பொதிகள் சேவை**

DHL மூலம் அனுப்பப்படும் பொதிகள்
3 வேலை நாட்களில்
ஒப்படைக்கப்படும்



திருமுருகன் கொம்நெற்
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
0777 554 528
(C-7109)

**Visa Consultancy Service**

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.
(Tourist Visa, Visit Visa, Sponsor Visa, Student Visa, Work Visa)
(C-7108)

NALTC 134, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
070 375 0002

# புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்திருந்தது

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த புகழாரம்

- அரசை காப்பாற்றுவதை மட்டுமே கூட்டமைப்பு செய்கிறது
- அரசியல் தீர்வுக்காக தமிழ் மக்களுடன் பேச்சு நடத்துவேன்
- காஷ்மீரில் நடந்ததையும் 13 ஐயும் கருத்தில் கொண்டு இரண்டு வருடங்களில் தீர்வைக் காண்பேன்





(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு போரிட்டார். பிரபாகரனிடம் ஒழுக்கம் நிறைந்து காணப்பட்டது. அதனை நான் பார்க்கின்றேன். அடிக்க வேண்டும் என்றால் அடிப்பார். இல்லையென்றால் அடிக்காமல் விடுவார். ஒரு ஒழுக்கமும் கட்டுப்பாடும் அவரிடம் இருந்தது என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வு என்று வரும் போது இந்தியாவின் காஷ்மீரில் நடந்த நிலைமையைக் கருத்தில் கொண்டே நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவற்றைப் புரிந்து கொண்டே அரசியல் தீர்வுத் திட்டத்தை தேட வேண்டும். ஆனால் 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு இரண்டு வருடங்களில் அரசியல் தீர்வைக் காண்பேன்.

அரசாங்கத்தைக் காப்பாற்றுவதை மட்டுமே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செய்கின்றது. வேறு எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை. தீர்வையும் பெறவில்லை.

அபிவிருத்தியையும் பெறவில்லை. கூட்டமைப்பு எவ்வித அர்த்தமும் இல்லாத பணியைச் செய்கின்றது. வடக்கு-கிழக்கிற்கு வீதியை, பாடசாலையை, இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுக்கவில்லை. எதையுமே மக்களுக்குப் பெற்றுக் கொடுக்காமல் அரசாங்கத்தை ஆதரித்தனர்.

மாறாக அவர்கள் தமக்கு பலவற்றை பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவேன். இதற்கு எனக்கு இரண்டு வருடங்கள் தேவைப்படும்.


அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வைக் காண முடியும். அதற்கான சக்தியும் பலமும் எம்மிடம் இருப்பதாக நான் கருதுகின்றேன்.

அரசியல் தீர்வுக்காக தமிழ் மக்களுடனேயே பேச்சுவார்த்தை நடத்துவேன். தமிழ் மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்த எப்போதும் தயாராகவே இருக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொழும்பு தாமரைக் கோபுரத்தால் 5475 மில்.ரூபா வருமானம் இழப்பு

## கணக்காய்வாளர் திணைக்கள ஆய்வில் அதிர்ச்சி





(கொழும்பு)

கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தாமரைக் கோபுரத்தால் இலங்கை அரசாங்கம் 5,475 மில்லியன் ரூபாய் வருமானத்தை இழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

தாமரைக் கோபுரம் அமைந்துள்ள காணியை நகர அபிவிருத்தி அதிகார சபை உரிய முறையில் பெற்றுக் கொள்ளாமை, நிர்மாணிப்பு தொடர்பில் பொறுப்புக் கூறும் நிறுவனம் உரிய காலங்களுக்குள் தீர்மானம் எடுக்காமை மற்றும் ஒப்பந்தக்காரர்களால் மேற்கொள்ளப்பட்ட தாமதம் காரணமாக, 2018 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி வரையில் 5,475 மில்லியன் ரூபாய் வருமானத்தை அரசாங்கம் இழந்துள்ளதாக கணக்காய்வாளர் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

தாமரைக் கோபுர ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டமை மற்றும் மேலதிக கடனாக 1400 மில்லியன் ரூபாய் சீன வங்கியிடம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தாமரைக் கோபுர நிர்மாணிப்புத் திட்டம் 912 நாட்களில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நிர்மாணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)

# கட்சியின் விதிமுறைகளை மீறினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்

## சஜித் அணிக்கு ரணில் அணி எச்சரிக்கை



(பதுளை)

பதுளையில் இடம்பெறும் நிகழ்வில் எந்த உறுப்பினராவது கட்சியின் விதிமுறைகளை மீறினால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் எச்சரித்தார்.

அமைச்சர் சஜித் பிரேமதாஸவை வரவேற்கும் நிகழ்வு ஒன்று நாளை திங்கட்கிழமை பதுளையில் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

இந்த நிகழ்வு தொடர்பாக அமைச்சரும் கட்சியின் பொதுச் செயலாளருமான அகிலவிராஜ் காரியவசத்திடம் கேள்வியெழுப்பப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த அவர், எந்தவொரு நிகழ்வையும் நடத்துவதற்கு கட்சி எதிர்க்காது.

ஆனால் அதில் பங்கேற்கும் கட்சியின் உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அதை மீறும் பட்சத்தில் எவருக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸவை வரவேற்கும் நிகழ்வு தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருக்கு அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ ஏற்கனவே அறிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# லடாக்கில் தேசியக் கொடி ஏற்றுகிறார் டோனி



சுதந்திர தினத்தன்று லடாக்கில தேசியக் கொடியை ஏற்றி வைக்கும் வாய்ப்பை டோனிக்கு வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் டோனி ராணுவ சேவையில் மிகுந்த ஈடுபாடு காட்டியதால் கடந்த 2011-ம் ஆண்டு அவருக்கு ராணுவம் சார்பில் கௌரவம் அளிக்கப்பட்டது.

2011-ம் ஆண்டு சிறிது நாட்களுக்கு அவர் இராணுவ சேவையில் அனுமதிக்கப்பட்டார். அப்போது அவர் ஆக்ராவில் பரசூட்டில் இருந்து குதிக்கும் பயிற்சியை மேற்கொண்டு அதில் தேர்ச்சி பெற்றார்.

சுமார் 8 ஆண்டுகள் இடைவெளிக்குப்பிறகு தற்போது அவர் இந்திய கிரிக்கெட் அணியில் சேர்க்கப்படாமல் ஓய்வு எடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து அவர் மீண்டும் இராணுவ சேவை செய்ய விருப்பம் தெரிவித்தார். அதன் பேரில டோனி இராணுவ சேவைக்கு சேர்க கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 31-ந்திகதி டோனி இராணுவத்தில் சேர்க்கப்பட்டார். அவருக்கு கௌரவ எலட்டினணட் கர்னல் பதவி வழங்கப்பட்டுள்ளது. காஷ்மீரில் உள்ள 106 டிஏ பட்டாலியன் அணியில் சேர்ந்து டோனி ரோந்து பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

வருகிற 15-ந் திகதி வரை இராணுவ சேவையை டோனி மேற்கொள்ள உள்ளார். 15-ந் திகதி அவர் இராணுவ சேவையை நிறைவு செய்யும் முன்பு அன்று சுதந்திர தினத் தேசியக் கொடியை ஏற்றி வைக்கும் வாய்ப்பை டோனிக்கு வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

காஷ்மீரில் இருந்து லடாக் பிராநதியம் தனி யூனியன் பிரதேசமாக உருவாக்கப்பட்டு இருப்பதால், அந்த யூனியன் பிரதேசத்துக்கு முகக்கியத்துவம் அளிக்கும் வகையில் அங்கு முதன் முதலாக டோனி மூலம் தேசியக் கொடியை ஏற்றி வைக்க உள்ளனர்.

# இன்னல்படும் தமிழ் மக்களின்....

எழுக தமிழ் பேரணி தொடர்பில் சி.வி.விக்னேஸ்வரனால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது வருமாறு:

"எழுகதமிழ்" எழுச்சிப் பேரணியை நடத்துவது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை விடுத்துள்ள அறிவிப்பு பல்வேறு மட்டங்களிலும் பெரும் வரவேற்பை பெற்றிருப்பதாக உணர்கின்றேன். தற்போதைய சூழ்நிலையில் இத்தகைய ஒரு நிகழ்வை நடைமுறைப்படுத்துவது மிகவும் அவசியமானது என்றும் அவசரமானதென்றும் இந்த அறிவிப்பு குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பதாகவும் பல்கலைக் கழகசமூகம் முதல் தொழிலாளர் அமைப்புக்கள் வரை எம்மிடம் நேரடியாகத் தெரிவித்திருக்கின்றார்கள்.

வரும் செப்ரெம்பர் மாதம்16 ஆந் திகதி எமது இந்த நிகழ்வை நடத்துவதற்கு ஒரு மாதத்துக்கும் குறைவானகாலமே இருக்கின்றது. நிகழ்வுக்கானஏற்பாட்டுக்குழு ஒன்றை நாம் இன்றே உருவாக்கிப் பொறுப்புக்களை பகிர்ந்து கொள்ளவேண்டும்.

எவ்வாறான குழுவை அமைப்பது, அவர்களின் கடமைகள் என்ன என்பதை எல்லாம் இன்று நாங்கள் தீர்மானிக்கவேண்டும். பொது அமைப்புக்களில் இருந்தும் அரசியல் கட்சிகளில் இருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அதன் பின்னர் ஒழுங்கமைப்புப் பணிகள் இன்று முதல் தீவிரப்படுத்தப்படவேண்டும். பல தரப்புக்களும் இந்த நிகழ்வை உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றன. நாம் இந்த நிகழ்வை மேற்கொள்ளுங்காலம் மிகவும் முக்கியமானது. ஒன்றன் பின் ஒன்றாக தேரதல்கள் வரும் நிலையில் தமிழ் மக்கள் தங்கள் உணர்வுகள், மனோநிலைமற்றும் கோரிக்கைகளை முன்வைப்பது மிகவும் அவசியமானது. அதி அவசரமான கோரிக்கைகளையே உடனடியாக முன்னிறுத்த உள்ளோம். ஆகவே, கடந்த முறையைவிட கூடுதலான மக்களை இம்முறைநாம் அணி திரட்டவேண்டும். கிழக்கு மற்றும் ஏனைய இடங்களில் நாம் தொடர்ந்து செய்ய விருக்கும் "எழுகதமிழ்" பேரணிக்கு எமது முதலாவது பேரணி நிகழ்வு உத்வேகம் ஊட்டும் வகையில் அமையவேண்டும்.

முன்னைய "எழுகதமிழ்" பேரணிகள் நடக்கும் போது நாம் பலர் உத்தியோக பதவியில் இருந்தோம். எமக்குப் பதவி வழி அரச அங்கீகாரமும் பாதுகாப்பும் தரப்பட்டன. இம்முறை நாம் அவ்வாறான அரச அங்கீகாரத்துடன் கூட்டத்தில் ஈடுபடமுடியாது. எனவே எமது மக்களின் பாதுகாப்பு விடயங்கள் எத்தகைய அரச அங்கீகாரத்துடன் நடைபெறப் போகின்றன என்பதை நாம் பரிசீலித்துப் பார்த்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அண்மைய உயிர்த்த ஞாயிறு நடவடிக்கைகளால் நல்லூர் ஆலயத்தில் கூட பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. பேரவைக்கு ஏதேனும் பாதுகாப்புத் தடைகள் விடுக்கப்படுமா என்பதில் நாம் கவனம் செலுத்தவேண்டும்.

எங்கள் பேரணியில் தமிழ் மக்களின் மாபெரும் சக்திகளாக விளங்கும் அனைத்துப் பொது அமைப்புக்கள், சமூக நிறுவனங்கள், மதபீடங்கள், மேற்கத்தைய மற்றும் சுதேச வைத்தியசங்கங்கள், சட்டத்தரணிகள் சங்கங்கள்,பெண்கள் அமைப்புக்கள், ஆசிரிய அமைப்புக்கள், மாணவ அமைப்புக்கள், தமிழர் மரபுரிமைப் பேரவை,தொழிற் சங்கங்கள், வர்த்தகசங்கங்கள், விவசாய, கடற்றொழில் சங்கங்கள், சமாசங்கள் போன்ற அனைத்து அமைப்புக்களும் கட்சிபேதமின்றி செம்ரெம்பர் 16ம் திகதி ஒற்றுமையாய் ஒருங்குசேரவேண்டும். யாவரும் திரண்டெழுந்து தமிழர்களின் எழுச்சிப் பிரவாகத்திற்கு வேகம் கொடுக்க நீங்கள் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். இங்குள்ளநீங்கள் ஒவ்வொருவரும் எம் மக்களை செப்ரெம்பர் 16ந் திகதிய பேரணியுடன் இணைகக் கப் போகும் இணைப்புப் பாலங்கள் என்பதை மறந்து விடாதீர்கள். ஆட்சியாளர்களால் இதுவரை கவனிக்கப் படாத ஆறு விடயங்கள் எமது பேரணியில் வலியுறுத்தப்பட இருக்கின்றன. அவையாவன.

1. எமது பூர்வீக நிலங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் நில ஆக்கிரமிப்பு, பௌத்த மயமாக்கல் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படவேண்டும். இவை சம்பந்தமான மகாவலி அபிவிருத்திச் சபையின் செயல்கள் ஆராயப்பட்டு சபையின் நடவடிக்கைகள் வடகிழக்கைப் பொறுத்தவரையில் உடன் நிறுத்தப்படவேண்டுமா என்பது பரிசீலிக்கப்படவேண்டும்.

2.சர்வதேச போர்க்குற்ற விசாரணையில் தற்போது ஏற்பட்டுள்ள தேங்கு நிலை மாற்றப்பட்டு உடனே சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளை நடத்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

3. தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலைசெய்யப்படவேண்டும். அவர்கள் யாவரும் சர்வதேச சட்டக் கொள்கைகளுக்குப் புறம்பான சட்டமொன்றினால் குற்றவாளிகள் ஆக்கப்பட்டவர்கள் என்பதை உலகறியச் செய்யவேண்டும். குறித்த சட்டம் இன்னமும் கைவாங்கப்படவில்லை.

4. வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமான நம்பத்தகு விசாரணைகள் நடைபெறவேண்டும். பலமாதக் கணக்கில் போராடிவரும் காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களுக்கு குறித்த ஒரு காலத்தினுள் விசாரணைகள் நடைபெறும் என அரசினால் உத்தரவாதங்கள் வழங்கப்படவேண்டும்.

5. வடகிழக்கு மாநிலங்களை இராணுவ மயமாக்கல் நிறுத்தப்படவேண்டும். தற்போது இலங்கை இராணுவத்தின் மூன்றில் இரண்டு பங்கினர் வடகிழக்கு மாகாணங்களிலேயே முகாம் இட்டு உள்ளனர் என்று தெரியவருகின்றது.

6. இடம் பெயர்ந்த எம் மக்கள் அனைவரும் அவரவர்களின் பாரம்பரிய காணிகளில் மீள் குடியமர்த்தப்படவேண்டும்.

மேற்கண்ட ஆறு விடயங்களே எமது பேரணியில் முக்கியமாக கூறப்படப் போகும் விடயங்கள். எமது அரசியல் தேவைகளை ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவை தமதுஅரசியல் முன் மொழிவுகள் ஊடாக யாவருக்குந் தெரியப்படுத்தியுள்ளது. அவற்றை நாங்கள் இனிவரும் "எழுக தமிழ்"பேரணியில் வலியுறுத்துவோம்.

எமது பதாகைகள், சுவரொட்டிகள் ஆகியன மேற்கண்ட ஆறு விடயங்களை இப்போதைக்கு வலியுறுத்தினால்ப் போதும் என்று நினைக்கின்றோம். ஏந்தப்படப் போகும் பதாகைகள், மற்றும் ஒட்டப்படப் போகும்சுவரொட்டிகள் எமதுதணிக்கைக் குழுவொன்றினால் பரிசீலிக்கப்பட்டே அனுமதிக்கப்படவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் நிற்கப் போகும் வேட்பாளர்கள் மேற்படி ஆறு விடயங்களையும் இலகுவாகஅனுமதிக்கமுடியும். அவற்றைச் செய்யுமாறு நாம் அரசை, அரசாங்கத்தை, ஜனாதிபதி வேட்பாளர்களை வேண்டுவது எல்லாவிதத்திலும் நியாயமானது. எனவே இவற்றை 'இம்முறை வலியுறுத்து வோமாக!

சிலர் எமதுபேரணியில் சேர விருப்போரைத் தடுக்கக்கங்கணம் கட்டியுள்ளதாக அறிகின்றேன். ஆனால் சுயநலகாரணங்களுக்காக, கட்சி நலம் சார்ந்து இவ்வாறான தீர்மானங்களை யார் எடுத்தாலும் அது எமது மக்களுக்குச் செய்யும் துரோகமாகவே அமையும். நாம் இங்கு கட்சிகளை வளர்க்க முற்படவில்லை. மக்களை ஒன்று சேர்த்து அரசியல் ரீதியாகப் போராடவே ஒன்றுபடுகின்றோம். ஒன்றுபட்டு எமது இன்னல்ப்படும் மக்களின் விடிவிற்காகப் போராட நினைத்துள்ளோம்.

ஆகவே எமது பேரணியை இவ்வாறாகக் குழப்ப எத்தனிப்போர் சம்பந்தமாக விழிப்பாக இருங்கள். எமக்கு ஒத்துழைப்பு நல்காவிட்டாலும் பரவாயில்லை. உபத்திரவம் தராது இருங்கள் என்று அவர்களிடம் நல்லமுறையில் கூறிவையுங்கள். எமதுதமிழ் மக்களின் வருங்காலம் என்பது இப்பேர்ப்பட்ட சிந்தனையுடையவர்களையும் உள்ளடக்கும். நாம் போராடுவது அவர்களுக்காகவுந் தான் என்பதை எவரும் மறத்தல் ஆகாது. அந்த வகையில் அவ்வாறான சிந்தனைகள் எவருக்காவது இருக்குமானால் அவற்றைப் புறந்தள்ளி வைத்துஎம்முடன் சேர்ந்து பயணிக்க அவர்களை உள்ளன்புடன் அழைக்கின்றோம்.

இன்றிலிருந்து நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் கடமையறிந்து, குறிக்கோள் அறிந்து ஒட்டுமொத்த வடகிழக்கு தமிழ் மக்கள் சார்பில் உங்களால் இயலுமான மட்டில் ஆதரவு வழங்குவீர்களாக என்று கோரி அடுத்து எமது ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட முற்படுவோமாக என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம.3.10)

# இந்தியா- மேற்கிந்தியதீவுகள் 2வது ஒரு நாள் போட்டி இன்று

இந்தியா மேற்கிந்தியதீவுகள் மோதும் 2-வது ஒரு நாள் போட்டி போர்ட் ஆப் ஸ்பெயினில் இன்று நடைபெறவுள்ளது.

இந்தியா மேற்கிந்தியதீவுகள் அணிகள் இடையேயான கிரிக்கெட் தொடர் மேற்கிந்தியதீவில் நடைபெற்று வருகிறது.

20 ஓவர் தொடரை இந்தியா 3-0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது. அமெரிக்காவில் நடந்த முதல் 2 ஆட்டத்திலும் முறையே 4 விக்கெட் மற்றும் 22 ஓட்டங்களில்வெற்றி பெற்றது. கயானாவில் நடந்த 3-வது போட்டியில் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இரு அணிகள் இடையேயான 3 ஒரு நாள் போட்டித் தொடரில் கயானாவில் நடந்த முதல் ஆட்டம் மழையால் பாதியில் இரத்துச் செய்யப்பட்டது.

இந்தியா -மேற்கிந்தியதீவுகள் அணிகள் மோதும் 2-வது ஒரு நாள் போட்டி போர்ட் ஆப் ஸ்பெயினில் இன்று (11-ந்திகதி) நடைபெறவுள்ளது. இலங்கை நேரப்படி இரவு 7 மணிக்கு இந்த ஆட்டம் தொடங்குகிறது.

இந்திய அணி வெற்றியுடன் ஒரு நாள் தொடரை தொடங்கும் ஆர்வத்தில் உள்ளது. 4-வது வீரர் வரிசையில் ஷ்ரேயாஸ் அய்யருக்கு வாய்ப்பு கிடைக்கும். 5-வது வரிசையில் கேதர்ஜாதவ் ஆடுவார்.

மழையால் பாதிக்கப்பட்ட முதல் போட்டியில் இடம் பெற்ற வீரர்களே இன்று இடம் பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாற்றம் எதுவும் செய்யப்பட மாட்டாது என்று தெரிகிறது.

மேற்கிந்தியதீவுகள் அணி 20 ஓவர் தொடரில் ஏற்பட்ட தோல்விக்கு ஒரு நாள் தொடரில் பதிலடி கொடுக்கும் ஆர்வத்துடன் இருக்கிறது.

இரு அணியிலும் இடம் பெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் 11 வீரர்கள் விபரம்:-

இந்தியா:விராட்கோலி (அணித்தலைவர்), ரோகித்சர்மா, தவான், ஷ்ரேயாஸ் அய்யர், கேதர் ஜாதவ், ரிஷப்பந்த், ஜடேஜா, புவனேஷ்வர் குமார், குல்தீப் யாதவ், முகமது ஷமி, கலீல் அகமது.

மேற்கிந்தியதீவுகள்: ஹோல்டர் (அணித்தலைவர்), கிறிஸ்கெய்ல், லீவிஸ், ஹோப், ஹெட்மயர், பூரன், ரோஸ் டன் சேஸ், ஆலன், பிராத் வெயிட், கேமர் ரோச், கோட்ரெல்.

# கம்போடியாவுடன் இணைந்து பௌத்த மதத்தை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும் - மைத்திரி



(நொம்பென்)

தேரவாத பௌத்த மதத்தை உலகம் முழுவதும் பரப்புவதற்கான ஆன்மீக பிரசார நடவடிக்கைகளில் இலங்கையும் கம்போடியாவும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கம்போடியாவின் தலைநகராகிய நொம்பென்னில் அமைந்துள்ள விகாரையில் நேற்று இடம்பெற்ற மத வழிபாடுகளில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பௌத்தத்தைப் பரப்பும் நடவடிக்கைகளுக்காக இரு நாட்டு தூதரக நட்புறவை வலுப்படுத்த வேண்டுமென் றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் கம்போடியாவில் இலங்கை தூதரகத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்படும் என்றும் கூறினார்.

பௌத்த மதத்தை அடிப்படையாகக்கொண்ட இலங்கைக்கும் கம்போடியாவிற்குமிடையிலான தொடர்பை பொருளாதார, வர்த்தக ரீதியாகவும் வலுவடையச் செய்வதுடன், தேரவாத பௌத்த தர்மத்தை பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதற்கான செயற்பாடுகளிலும் கரங்கோர்க்க வேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்தச் செயற்பாடுகளுக்காக கம்போடிய மன்னர், பிரதமர் மற்றும் அரசாங்கத்தின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, இரு நாட்டு மகாசங்கத்தினரின் பங்களிப்பில் அச்செயற்பாடுகளை முன்னெடுத்து செல்லவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்கும் கம்போடியாவிற்குமிடையிலான முதலீட்டு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக அமைந்ததாகவும், கம்போடிய பிரதமருக்கு இலங்கைக்கான சுற்றுப் பயணமொன்றை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கம்போடிய மகாசங்கத்தினர், கம்போடிய பிரதிப் பிரதமர் உள்ளிட்ட பெருந்திரளான மக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

விகாராதிபதி நாயக்க தேரரால் ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசொன்று வழங்கப்பட்ட அதேவேளை, விகாராதிபதி நாயக்க தேரருக்கு ஜனாதிபதி நினைவுச் சின்னமொன்றையும் வழங்கினார். (இ-7)

# பொலிஸ் உயர் அதிகாரிகள் 50 பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் முதல் சார்ஜன் தர அதிகாரிகள் வரையுள்ள 50 அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன தெரிவித்தார்.

வைத்தியர் ஷாபி மீதான விசாரணை தொடர்பில் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்ட குருநாகல் கோட்டத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி மகிந்த திஸாநாயக்கவுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் நேற்றுத் தெரிவித்தார். (இ-7)

# ரணில் - சஜித் இடையே எவ்வித விரிசலும் இல்லை

## விரைவில் ஜனாதிபதி வேட்பாளர் - ருவான்



(கொழும்பு)

ரணில்-சஜித் இடையே எந்தவித விரிசலும் இல்லை எனவும் கூடிய விரைவில் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்படுவார் எனவும் இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சியால் களமிறக்கப்படும் வேட்பாளர் சவாலாக காணப்பட்டாலும் கட்சி என்ற வகையில் அதற்கு முகம் கொடுக்கத் தயார்.

எதிர்க்கட்சி வேட்பாளருக்கு சவால் விடும் வகையில் எதிர்வரும் ஓரிருநாட்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்படுவார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

**ஜெயம் சரஸ்வதி**

பிறப்பு:- 16.01.1954

இறப்பு:- 29.07.2012



ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்ததமா-உன்
அன்பு முகம் ஏனோ எம் நெஞ்சங்களில்
நிலையாய் வாழுதம்மா
நீ இன்றிய எம் வாழ்வு
நிம்மதி இழந்த வாழ்வே!

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.


# பலத்த காற்றால் 17 வீடுகள் முற்றாகவும் 1,124 வீடுகள் பகுதியளவிலும் சேதம்

## 918 பேர் பாதிப்பு

(கொழும்பு)

கடந்த புதன்கிழமை இரவு முதல் நேற்று முன்தினம், காலை வரை நாடு முழுவதும் வீசிய பலத்த காற்றின் காரணமாக 17 வீடுகள் முற்றாகவும் 1,124 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்ததாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

காற்று காரணமாக 4,918 பேர் பாதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இரத்தினபுரி, வவுனியா, கேகாலை, புத்தளம், அம்பாந்தோட்டை, நுவரெலியா, கம்பஹா, களுத்துறை, காலி, குருநாகல், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தோரே இவ்வாறு பாதிக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட வீடுகள் தொடர்பாக மதிப்பீடு செய்து இழப்பீடுகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் இழப்பீட்டுக்கான ஆவணங்களின் மதிப்பீடு தொடர்பான விபரங்களுக்கு பாதிக்கப்பட்ட மக்கள் அந்தந்த கிராம உத்தியோகத்தருடன் தொடர்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது. (இ-7)

# இராசி பலன்

**மீனம்:** மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மேடம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**இடபம்:** எதிர்பாராத வகையில் சிலருடன் முரண்பாடுகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர் போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**கடகம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையுண்டு, பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், போசன சுகமுண்டு.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், பகையொன்று நட்பாகலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், அலைச்சல்கள் சற்று கூடும்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்

**விருச்சிகம்:** வழிபாட்டால் வெற்றி காண்பீர்கள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்:** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய தேவையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பயணங்கள் கைகூடும்.

கிரகநிலை: ராகு; சூரி, சுக், புத; செவ்; சனி, கேது, சந்; குரு

சந்திராஷ்டமம் ரோகினி

11.08.2019

ஆடி 26, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு

ஏகாதசி பிற்பகல் 2.02 மணிவரை

மூலம் பின்னிரவு 3.08 மணிவரை

சுபநேரம் 9.04-10.34 மணிவரை

இராகுகாலம் 4.34-6.04 மணிவரை


ஏகாதசி விரதம்

அமிர்தசித்தம்

வளவன்

# ஏ-9 வீதியில் பேருந்துகள் மீது திடீர் சோதனை நடவடிக்கை

## "60 வீதமானவை சட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை"



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் வேண்டுகோளுக்கிணங்க ஏ-9 வீதியில் பயணிக்கும் யாழ்.- கொழும்பு மற்றும் கொழும்பு - யாழ்.பேருந்துகள் மீது தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினரால் திடீர்ச்சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மக்களின் நலன் கருதி நேற்று முன்தினம் இரவு மற்றும் நேற்று அதிகாலை வேளைகளில் சுமார் 50 பேருந்துகள் மீது சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது காலாவதியாகிய வாகன சாரதி அனுமதிப்பத்திரம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுமதிப்பத்திரங்கள் இல்லாத வாகனங்கள் உள்ளிட்ட வாகன நடத்துநர்கள் மற்றும் நடத்துநருக்கான அடையாள அட்டைகள் இல்லாத வாகனங்கள் அடையாளம் காணப்பட்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டது.

ஏ-9 வீதியில் அதிகளவில் இடம்பெறும் விபத்துக்களைத் தடுக்கும் முகமாக ஆளுநரின் அறிவுறுத்தலில் முதற்தடவை இடம்பெற்ற இந்தத் திடீர்ச் சோதனை நடவடிக்கையின் போது 60 சதவீதமான பேருந்துகள் சட்டத்தேவைகளைப் பூர்த்தி செய்யாதவையாகவும் மேலும் வீதிப்போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிக்க தவறிய பேருந்துகள் போக்குவரத்தில் பயன்படுத்தப்பட்டமை இனங் காணப்பட்டுள்ளன.

வடமாகாண போக்குவரத்து அதிகார சபையுடன் இணைந்து வடமாகாணத்தில் தொடர்ந்தும் இந்தச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பயணிகள் தங்கள் பிரயாணத்தின்போது தாம் பயணிக்கும் பேருந்துகள் அனுமதிப்பத்திரங்களைக் கொண்டுள்ளனவா? என்பது தொடர்பில் விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

இந்த சோதனை நடவடிக்கையில் ஆளுநர் செயலணியும் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5-7)





**யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா யாழ்ப்பாணம் தொகுதிக்கான துரித ஊரெழுச்சி அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ் வரா வித்தியாலயத்தின் மாணவர்களுக்கான சிறுவர் பூங்காவிற்கான வேலைத்திட்டங்களின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமாகிய மாவை சோ.சேனாதிராசா, யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

# செந்தமிழ் கிராமம் பயனாளிகளிடம் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 244 ஆவது மாதிரிக் கிராமமான செந்தமிழ் கிராமம் வீடமைப்பு மற்றும் கலாசார அமைச்சர் சஜித் பிரேமதாஸவால் நேற்றுப் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.

இந்திய அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட 24 வீடுகளைக்கொண்ட கிராமமே இவ்வாறு பொதுமக்களிடம் கையளிக்கப் பட்டது.

இந் நிகழ்வில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், வீடமைப்பு அதிகாரசபையின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரன் மற்றும் சங்கானைப் பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-10)



# இரு நூல்கள் வெளியீட்டு விழா

(கொடிகாமம்)

கலாபூஷணம் வடவரணி சி.சபாவின் மரணிக்கும் மண்வாசனை, ஓவியமும் சிற்பமும் ஆகிய நூல்கள் வெளியீட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சிட்டிபுரம் கண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள வரணி கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் நதியோர நாணல்கள் இலக்கிய மன்றத் தலைவர் வ.ஜசிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் ம.இரகுநாதன், சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி.வினோஜிதா கௌசிகன், கௌரவ விருந்தினர்களாக நுவரெலியா ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் வி.க.கமலநாதன், ஓய்வு நிலை அதிபர் சி.பவளேந்திரன், ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர் ந.இராசகுமாரன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், வரணி மத்திய கல்லூரி ஆசிரியர் திருமதி. பாலாம்பிகை சிவகுமரன், ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர் ஆ.சதாசிவம், தென்மராட்சி கலாசார உத்தியோகத்தர் கு.றஜீவன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் அ.மதன்ராஜ் ஆகியோர் கலந்து கொள்வர்.(5)



**பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு புலம்பெயர் நாடுகளில் வாழும் யாழ்.மருத்துவர்கள் ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான சுவாச ஊக்குவிப்பு மருத்துவக் கருவியை இங்கிலாந்தில் இருந்து தருவித்து நேற்று முன்தினம் வைத்திய அத்தியட்சகரிடம் கையளித்தனர். இந்நிகழ்வில், புலம்பெயர் வைத்தியர்கள் சார்பாக வைத்திய கலாநிதி பார்த்தீபன் கலந்து கொண்டார்.**

**(படம்:-கொடிகாமம் செய்தியாளர்)**

# இடிந்து விழும் நிலையிலுள்ள மடத்தை புனரமைக்க வேண்டுகோள்

(சாவகச்சேரி)

கைதடி- நுணாவில் வைரவ கோவில் சந்தியில் அமைந்துள்ள பழைமையான மடத்தை புனரமைப்புச் செய்ய வேண்டும் என சாவகச்சேரிபிரதேசசபை உறுப்பினர் அ.மதன்ராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இக்கோரிக்கையை சபையில் முன்வைத்திருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

கைதடி-நுணாவில் சந்தியில் அமைந்துள்ள பழைமையான மடம் இடிந்து விழும் நிலையில் காணப்படுகிறது. பழைமைகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவை. சாவகச்சேரி பிரதேச சபையினர் இவ் விடயம் தொடர்பில் விரைவில் உரிய நடவடிக்கை எடுத்து மடத்தினை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேலும் அவர் தெரிவித்திருந்தார். குறித்த மடத்தினை பொதுமக்கள் பேருந்துத் தரிப்பிடமாகப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# பக்தி கானங்கள்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கந்தரோடை அங்கணாக்கடவை ஸ்ரீ மீனாட்சியம்மன் தேவஸ்தான தேர்த் திருவிழா எதிர்வரும் 14.08. 2019 புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெறும்.

அன்றைய தினம் சுவாமி தேரில் ஆரோகணித்த வேளை ஆலய பிரதான மண்டபத்தில் கலைமா மணி க.லோகேஸ்வரனின் பக்தி கானங்கள் பக்க வாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது. (5)

# இசையரங்கின் ஆறாம் நாள் நிகழ்வு

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி இலங்கை இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் ஆறாம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8.15 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறும். இன்று குழு இசை, இசைக்கச்சேரி என இரு நிகழ்வுகள் இடம்பெறும்.

அரியாலை ஹம்சப்பிரியா இசைமன்ற மாணவர்களின் குழு இசையில் கீபோட், நெறியாள்கை-ஞா.தர்சினி, தபேலா-க.முருகையா ஆகியோரும் இசைக்கச்சேரியில் பாட்டு-ரஜீந்திரன்-சுரசாகித்தியன், வயலின்-எஸ்.திபாகரன், மிருதங்கம்-சு.கமலதாஸ், கெஞ்சிரா-ஞா.வசந்த் ஆகியோரும் பங்கேற்பர். (7)

# கமநல சேவைகள் நிலையத்தின் கட்டாக்காலி மாடு பற்றிய அறிவித்தல்

(கரணவாய்)

கரணவாய் மத்தி கமக்காரர் அமைப்பு பிரிவிலுள்ள தோட்டத்தில் பயிரை அழித்த கட்டாக்காலி பசுமாடு பிடிக்கப்பட்டு கரணவாய் மத்தி அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பசு மாட்டின் உரிமையாளர் உரிய தண்டப் பணத்தினை செலுத்தி 13, ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் பசுமாடு 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் எதிர்வரும் 16 ஆம் திகதி கரணவாய் மத்தி வாசிகசாலை முன்றலில் முற்பகல் 10 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (5-60)

## "மக்கள் நேசிக்கும் வேட்பாளரை நிறுத்துவோம்"

# ராஜபக்ஷ சரணம் கச்சாமி எனக்கூறிக்கொண்டு அண்ணன், தம்பிகள் பின்னால் செல்ல மாட்டோம்



## பந்துலால் பண்டாரி விமர்சனம்

(காலி)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடவும் கட்சியின் தலைமைக்கும் தலைவர்கள் வரிசை உள்ளதாக அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துலால் பண்டாரி கொட தெரிவித்தார்.

காலி நகரில் நேற்று இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சிக்கு வரிசையாக தலைவர்கள் இருக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி ஒரு குடும்பத்தை நம்பி இருக்கும் கட்சியல்ல.

ராஜபக்ஷ சரணம் கச்சாமி எனக் கூறிக்கொண்டு நாங்கள் அண்ணன், தம்பிகள் பின்னால் செல்ல மாட்டோம். மக்கள் நேசிக்கும் வேட்பாளரை நாங்கள் தேர்தலில் நிறுத்துவோம். கட்சிக்குள் வாயை மூடிக் கொண்டிருப்பது கண் தெரியாது என்பதற்கல்ல. கட்சியின் ஐக்கியத்தை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே வாயை மூடிக் கொண்டிருக்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேராத வேட்பாளர் கட்சியின் உதவியுடன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால், "பந்துலால் பண்டாரிகொட வணக்கம் கூறி விட்டு, 5 ஆண்டுகளுக்கு ஓய்வெடுக்க தயார்" எனவும் பண்டாரிகொட தெரிவித்தார். (இ-7)

## அநுராதபுரத்தில் 12 ஆம் நூற்றாண்டுக்குரிய சிறிய பேழை, மோதிரம், காதணி கண்டுபிடிப்பு

(அநுராதபுரம் )

அநுராதபுரம் அபயகிரி தாது கோபுரத்தை அழியாது பாதுகாக்கும் புனரமைப்புப் பணிகளின் போது மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்களில் கிறிஸ்துக்கு பின் 12ஆம் நூற்றாண்டிற்குரிய தங்கத்தால் செய்ததாக நம்பக்கூடிய சிறிய பேழை, மோதிரம் மற்றும் காதணி உள்ளிட்ட தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மத்திய கலாசார நிலையத்தின் அபயகிரி திட்டத்தின் பணிப்பாளர் பேராசிரியர் ரி.ஜீ. குலதுங்க தெரிவித்தார்.

இவற்றுடன் அபயகிரி தாதுகோபுரத்தின் கீழ் பகுதியில் உள்ள வட்டத்தின் முன் பகுதியில் புதைந்து காணப்பட்ட மட்பாண்ட துண்டுகள், பூஜைப் பொருட்கள் கிடைத்தன.

அதற்கு அருகில் பேழையும் கிடைத்தது. மென்மையான தகடுகள், எலும்புகளின் எச்சங்கள், எலும்புகளில் செய்யப்பட்ட வளையலின் பகுதிகள் என்பனவும் கிடைத்துள்ளன.

அபயகிரிய முதல் கட்ட ஆய்வுகளின் பின்னர் இந்தத் தொல்பொருட்கள் மத்திய கலாசார நிலையத்தின் கொழும்பு அலுவலகத்தின் அனுமதியுடன் பேழைக்குள் இருக்கும் பொருள் என்ன என்பதை அறிய எக்ஸ்ரே பரிசோதனை செய்யப்படும்.

தங்க நிறத்தில் இருக்கும் பேழையை திறப்பது மிகவும் சிரமமாக உள்ளது. அது உடைந்து விடக் கூடும்.

இதனால், எமது பிரதான அலுவலகத்தின் அனுமதியுடன் எக்ஸ்ரே பரிசோதனை செய்ய எதிர்பார்த்துள்ளோம். இவை பொலநறுவை காலத்திற்குரியது என கருதப்படுகிறது.

இவை 12ஆம் நூற்றாண்டுக்குரியது என கருதப்படுகிறது. இறுதியாக 12ஆம் நூற்றாண்டில் மஹா பராக்கிரமபாகு மன்னன், இந்த தாதுகோபுரத்தை புனரமைப்பு செய்தார்.

இது தொடர்பான ஆவணங்கள் முதலில் கிடைத்தன. இந்த பேழைக்குள் மற்றுமொரு பேழை வைக்கப்பட்டிருந்தது. அதில் மண் பாத்திரம் இருந்தது எனவும் பேராசிரியர் குலதுங்க தெரிவித்தார். (இ-7)

## ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்ய இரகசிய வாக்கெடுப்பு நடத்தவும்

## ஐ.தே.கவின் 55 எம்.பிக்கள் கையொப்பம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு மற்றும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு என்பன இணைந்து இரகசிய வாக்கெடுப்பின் ஊடாக ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்யமாறு ஐ.தே.கவின் பின்னாசன உறுப்பினர்கள் குழு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மகஜரில் நேற்று முன்தினம் மாலை வரை ஐ.தே. கவின் எம்.பி.க்கள் கையொப்பம் இட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சஜித் பிரேமதாஸ ஆதரவுக் குழுவினர் இந்தக் கையொப்பம் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)


### விற்பனை

காங்கேசன்துறை குருவீதியில் 3 ஆவது காணி குழாய் நல்ல நீர் வசதியுடன் 3 பரப்பு விற்பனைக்குண்டு

காரைநகர் தங்கோடை நாகம்மாள் கோவிலடியில் 73ஆம் இலக்க வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணி குடியிருக்கவோ/விற்பனைக்கோ உண்டு.

நல்ல நீர், மின்சார வசதியுண்டு

075 729 2865
077 081 6988

(9814)

### மணமகன் தேவை

யாழ்.இந்து, உயரம்- 5'-6", மிருகசீரிடம், மிதுனராசி, Accountancy படிப்பு முடித்த மணமகளுக்கு பெற்றோர் 1971-1976 இற்கு இடையில் பிறந்த படித்த அதே தராதரமுள்ள மணமகனை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புக்கு:
071 838 7425

(9780)

### தொண்டர்கள் தேவை

தற்கொலைகளைத் த்டுப்போம்!

*உங்கள் நேரத்தில் ஒரு துளியை, முன்பின் தெரியாத இன்னொருவருக்காகச் செலவிட நீங்கள் தயாரா?*

மற்றவர்களின் துயரக் கதைகளை நாம் அக்கறையாகவும், அன்பாகவும் கேட்கிறோம். மனதில் பாரத்தைச் சுமக்கும் எவருக்கும் ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறோம். நாம் ஊதியம் எதையும் பெறுவதில்லை. இப் புனித சேவையில் எம்முடன் இணையுங்கள். வாரத்தில் நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே.

பயிற்சி நெறி மிக விரைவில்.
உடனே அழையுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**
175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அண்மையில்)
077 900 8776 (மு.ப. 9.00 - பி.ப. 1.00)
(C-7184)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க விவகாரங்கள் அமைச்சு

### அலுவலக இடமாற்றம் தொடர்பான அறிவித்தல்

இல 70, மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் இதுவரை காலமும் இயங்கி வந்த எமது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது 01.08.2019 முதல் புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

புதிய முகவரி:
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை,
பிராந்திய அலுவலகம்,
இல: 86 1/2, நாவலர் வீதி,
(மனோகராச்சந்தி, தேசிய சேமிப்பு வங்கிக்கு மேல், 1 ஆம் மாடி)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 222 0010 பிராந்திய முகாமையாளர்

### மணிவிழாக் காணும் மகத்தான தந்தைக்கு இனிதான வாழ்த்துக்கள்

திரு.விநாசி பொன்னர் வரதராசா

(தலைமைப்பீட அலுவலக உதவியாளர்
- மாவட்ட செயலகம், கிளிநொச்சி)



அன்பும் அரவணைப்பும் கனிவான கண்டிப்பும்
என்றும் குன்றாத இனிதான பண்புகளும்
கொண்டெம்மைக் குறைகளின்றிக் கண்ணியமாய்
கண்ணெனவே காத்தவரே பல்லாண்டு வாழியவே

இன்பமும் துன்பமும் இரண்டறக் கலந்திட்ட
இவ்வுலக வாழ்வினில் இல்லறத்தை இனிதாக்கி
மதிப்புக்குரியவராய் மனிதத்தை மதிப்பவராய்
மணிவிழாக் காண்பவரே மாண்புற வாழியவே

வஞ்சகம் சூதிலாத வெள்ளையான உள்ளமும்
கொஞ்சமும் சலிப்பிலாது ஆற்றிய உம் சேவையும்
என்னென்றும் மனங்களெல்லாம்
மகிழ்வோடு நிறைந்திருக்க
இன்பமொடு பல்லாண்டு பார் புகழ வாழியவே

(C-7247)

உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.

அன்புள்ள
மனைவி, பிள்ளைகள்

# சர்வதேச ஒப்பந்தங்களால் காட்டிக்கொடுத்த அரசுகள்

## ஜே.வி.பி.பரபரப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

**நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்கள் மேற்கொண்டு வந்த சர்வதேச ஒப்பந்தங்கள் மூலம் நாட்டைக் காட்டிக்கொடுத்தே வந்துள்ளன. கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவுடன் செய்து கொண்ட எட்கா ஒப்பந்தத்தை இந்த அரசாங்கம் நீடித்திருக்காவிட்டால் நாட்டுக்கு நன்மை ஏற்படும் வகையில் புதிதாக அதனை மேற்கொண்டிருக்கலாம். ஆனால் இந்த அரசாங்கமும் அந்த ஒப்பந்தத்தை நீடித்து அமெரிக்காவுக்கு நாட்டைக் காட்டிக்கொடுத்திருக்கின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க குற்றம்சாட்டினார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சர்வதேச ஒப்பந்தங்கள் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார்.

வெளிநாட்டு ஒப்பந்தங்களை முழுமையாக நிராகரிக்கவும் முடியாது ஆதரிக்கவும் முடியாது. ஒப்பந்தங்களைச் செய்யும்போது அதில் நாட்டுக்குக் கிடைக்கும் நன்மை தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்படவேண்டும்.

அதேபோன்று செய்துகொள்ளப்போகும் ஒப்பந்தம் தொடர்பாக அமைச்சரவையின் அனுமதி பெறப்படுவதுடன் பாராளுமன்றத்துக்கும் அதனைச் சமர்ப்பிக்கவேண்டும். அப்போதுதான் அதுதொடர்பில் மற்றவர்களின் கருத்துக்களை அறிந்துகொள்ளலாம்.

ஆனால் இந்த நாட்டை ஆட்சி செய்துவந்த அரசாங்கங்கள் சர்வதேசத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் குறித்து யாருக்கும் ஒன்றும் தெரியாது. குறிப்பாக 1995 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா காலத்தில் அமெரிக்காவுடன் சோபா ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அமெரிக்கத் தூதரகத்தால் ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு, அதனை அனுமதிக்குமாறு தெரிவித்து அனுப்பப்பட்டது.

அதேபோல் 2007 இல் மகிந்த ராஜபக்ஷ காலத்தில் கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக அமெரிக்காவுடன் எட்கா ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம் அமைச்சரவைக்கோ பாராளுமன்றத்துக்கோ தெரியாமலே கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தால் நாட்டுக்கு நன்மை இருக்கின்றதா? தீமை இருக்கின்றதா? என்பது தொடர்பில் தேடிப்பார்க்கவில்லை. ராஜபக்ஷவினரின் தேவைக்கு ஏற்றவகையில் அதில் கைச்சாத்திடப்பட்டது.

அத்துடன் கோத்தபாய ராஜபக்ஷ 2007 இல் கைச்சாத்திட்ட எட்கா ஒப்பந்தத்தின் காலம் 10 வருடத்துடன் முடிவடைந்தது. அதாவது கடந்த 2017 இல் இந்த ஒப்பந்தத்தின் காலம் முடிவடைந்தவுடன் அமெரிக்கா மீண்டும் அந்த ஒப்பந்த காலத்தை நீடிக்குமாறு தெரிவித்து அறிவித்ததுடன் இந்த அரசாங்கம் அதனை மேற்கொண்டது.

மேலும் எட்கா ஒப்பந்தம் தொடர்பில் ஜனாதிபதிக்கு ஒன்றும் தெரியாது என இன்று சிலர் தெரிவிக்கின்றனர். ஆனால் 2017 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியே அந்த ஒப்பந்தத்தில் எந்தப் பாதிப்பும் இல்லை என தெரிவித்து அவரின் கையெழுத்துடன் அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருக்கிறார். அதே வருடம் ஒகஸ்ட் மாதம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த ஒஸ்டின் பெர்னாண்டோ ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கின்றார்.

அதனால் 2007 இல் ராஜபக்ஷ அரசாங்கம் நாட்டைக் காட்டிக்கொடுத்ததுபோல் 2017 இல் எட்கா ஒப்பந்தத்தின் காலத்தை நீடித்ததன் மூலம் மைத்திரி, ரணில் அரசாங்கமும் காட்டிக்கொடுத்துள்ளது. அரசாங்கம் இந்த ஒப்பந்தத்தை நீடித்திருக்காவிட்டால் அமெரிக்காவுடன் புதிதாக கலந்துரையாடி நாட்டுக்கு நன்மை ஏற்படும் வகையில் ஒப்பந்தத்தை மாற்றியமைத்துக்கொள்ள முடிந்திருக்கும். அந்தச் சந்தர்ப்பத்தை அரசாங்கம் இல்லாமலாக்கி இருக்கின்றது என அவர் மேலும் குற்றம் சாட்டினார். (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடுவேன்

## மேர்வின் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தானும் போட்டியிடவுள்ளதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா அறிவித்தார்.



தன்னுடைய தலைமையில் உருவாக்கப்பட்ட அரசியல் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்தார்.

வீரதுட்டகைமுனு அமைப்பு மற்றும் தேசிய மக்கள் கட்சி ஆகியன தமது தலைமையில் இயங்கி வருவதாக மேர்வின் தெரிவித்தார்.

இந்த இரண்டு கட்சிகளுக்கும் விவசாயிகள், தொழிலாளர்களின் ஆதரவு உண்டு என அவர் தெரிவித்தார்.

நாட்டில் நிலவி வரும் அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பிலும் தெளிவான அறிவுடைய கட்சியாக தமது கட்சி திகழ்கின்றது என அவர் சுட்டிக்காட்டினார்.

தமது இந்த முயற்சிக்கு மதத் தலைவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறும் எனவும் நாடு தற்பொழுது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து தாம் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7)

## பெண் கொலை

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவருக்கு மரண தண்டனை

(குருநாகல்)

2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் குருநாகல் மேல் நீதிமன்றத்தால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. நீண்ட விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் இந்தத் தண்டனை வழங்கப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

2005 ஆம் ஆண்டு கொகரல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட யக்கல எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணியாற்றிய பெண் ஒருவரை கொலை செய்து பணத்தை கொள்ளையிட்டு சென்றமை தொடர்பில் சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

41 மற்றும் 50 வயதுடைய இருவருக்கே இவ்வாறு குருநாகல் நீதவான் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. (இ-7)

# ஷாபி மீதான குற்றச்சாட்டுக்கு இதுவரை ஆதாரம் இல்லை மாற்று வழியில் விசாரணை

(குருநாகல்)

குருநாகல் வைத்தியர் ஷாபி சிஹாப்தீன், கருத்தடை சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டமைக்கான ஆதாரங்கள் எதுவும் இதுவரை நிரூபிக்கப்படவில்லையெனவும் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவின் உதவி பொலிஸ் அதிகாரி எஸ்.பி. திசேரா நேற்று முன்தினம் நீதிமன்றில் விளக்கமளித்தார்.

இதனையடுத்து, வைத்தியர் ஷாபி, கருத்தடை சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளாரா? இல்லையா? என்பது தொடர்பில் ஆராய்வதற்கு மற்றுமொரு முயற்சியாக, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பீடாதிபதி தலைமையில் விசேட வைத்திய நிபுணர்களடங்கிய நிபுணத்துவ சபையின் அறிக்கையைக் கோரவும் அது கிடைக்கும் வரை அவருக்கு எதிரான வழக்கு ஒத்திவைக்கப்படுவதாகவும் குருநாகல் பிரதான நீதவான் சம்பத் ஹேவாவசம் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கொழும்பு பல்கலைக்கழக நிபுணத்துவ சபையின் அறிக்கையானது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்று என்பதுடன் இதுவே சிறந்த நடைமுறையென்றும் தெரிவித்த அவர், வழக்கை எதிர்வரும் செப்டெம்பர் 12 ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்.

இந்த அறிக்கை விரைவாக கிடைக்கப்பெற்றால், வழக்கு ஒத்திவைக்கப்பட்ட திகதிக்கு முன்னதாக வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியும் எனவும் நீதவான் தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஜேனிகா பெரேரா நீதிமன்றுக்கு இரண்டு கடிதங்களை அனுப்பியுள்ளதுடன், மகப்பேற்று விசேட மருத்துவச் சபையின் தலைவரையும் இந்தப் பரிசோதனைகளுக்கு இணைத்துக் கொள்வதற்கான வேண்டுகோளையும் அதில் அவர் விடுத்துள்ளதாகவும் நீதவான் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை அபிவிருத்தியடைய தேசிய ஒற்றுமை அவசியம்

## ஸ்ரீநேசன் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை அபிவிருத்தி அடைந்த நாடு எனும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் தேசிய ஒற்றுமை மற்றும் தேசிய ஐக்கியம் என்பன கட்டியெழுப்பப்பட வேண்டும் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இலங்கை சுதந்திரமடைந்து 70 ஆண்டுகள் கடந்தபோதிலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்றே கூறப்படுகிறது.

அபிவிருத்தியடைந்த நாடு என்ற சொற்பதத்தை நாம் எப்போது கூறப்போகின்றோம். தேசிய ஒற்றுமை மற்றும் தேசிய ஐக்கியம் என்பன கட்டியெழுப்பப்பட்ட பின்னரே அவ்வாறு கூற முடியும். தேசிய ஒற்றுமை மற்றும் தேசிய ஐக்கியம் என்பன கட்டியெழுப்பப்படாத நிலையில் நாம் செய்யும் அபிவிருத்திகள் தற்காலிக அபிவிருத்தியாகவே இருக்கும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வேண்டும். அதை விடுத்து ஏற்றுமதிகளை செய்தாலும் அவை நிரந்தரமற்ற அபிவிருத்தியாகவே காணப்படும். அபிவிருத்திக்கு முதலில் தேசிய ஒற்றுமையே முக்கியம்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பிரிட்டனிலிருந்து இலங்கை வந்த

# சுற்றுலாப் பயணிகளின் வானில் ஆயுதமா?

# பொலிஸாரின் திடீர் சோதனையால் பதற்றம்!

(ஏறாவூர்)

**பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிகள் பயணித்த வான் மட்டக்களப்பில் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டது. குறித்த வாகனத்தில் ஆயுதங்கள் இருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே நேற்றுச் சனிக்கிழமை காலை இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன் காரணமாக குறித்த பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டிருந்தது.**

இனந்தெரியாத நபரால், 119 அவசர இலக்கத்தினூடாக குறித்த வானின் இலக்கம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டு, அந்த வானில் ஆயுதங்கள் கடத்தப்படுவதாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அவர்கள் தங்கியிருந்த விடுதியைச் சுற்றி வளைத்த பொலிஸார், தீவிர விசாரணைகளை மேற்கொண்டதுடன் வானிலும் தீவிர சோதனைகளை மேற்கொண்டனர்.

எனினும் சந்தேகத்திற்குரிய பொருட்கள் எவையும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் பொலிஸார் அங்கிருந்தவர்களிடம் வாக்குமூலம் பெற்றுத் திரும்பிச் சென்றனர்.

அத்தோடு, சுற்றுலாப் பயணிகள் வந்த வான் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு சோதனையின் பின்னர் விடுவிக்கப்பட்டதுடன், இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரித்தானியாவிலிருந்து யாழ். குடாவுக்கு வந்தவர்கள் மட்டக்களப்புக்கு கடந்த 8 ஆம் திகதி சுற்றுலா சென்றுள்ளனர்.

மட்டக்களப்பு புகையிரத நிலையத்திற்கு முன்பாகவுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த அவர்கள், நேற்று முன்தினம் உல்லைப் பிரதேசத்திற்கு சுற்றுலா சென்று திரும்பினர்.

இதன்போது காத்தான்குடி பகுதியில் கடைகளில் பொருட்கள் கொள்வனவு செய்துகொண்டிருந்தபோது, வெளிநாட்டிலிருந்து வந்த பெண்களின் ஆடை தொடர்பாக சிலர் அங்கு கருத்து வெளியிட்டனர். இதனையடுத்து அவர்களுடன் குறித்த குழுவினர் முரண்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

## ரணில் - சஜித் இணைந்து தேர்தலைச் சந்திப்பார்கள்

### காவிந்த கணிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றி பெறச் செய்வதே ஒரே நோக்கம் எனவும் ரணிலும்-சஜித்தும் ஒன்றாக இணைந்து ஜனாதிபதித் தேர்தலை சந்திப்பார்கள் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரணிலும் - சஜித்தும் நடத்திய கலந்துரையாடலில் எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறக்கூடிய வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது தொடர்பிலேயே ஆராயப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## இலங்கை மாணவர்களுக்கு சீனாவால் புலமைப்பரிசில்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சீனத்தூதரகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வைபவமொன்றில் வைத்து இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷென் சியூ யுவான் 24 இலங்கை மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்களை வழங்கினார்.

சீனப் புலமைப்பரிசிலைப் பெற்றிருக்கும் இந்த மாணவர்களில் 10 பேர் இளமாணிப் பட்டப்படிப்பிற்கும் 14 பேர் மருத்துவம், கட்டடக்கலை, மொழிபெயர்ப்பு, இலத்திரனியல் வர்த்தகம், உளவியல், உணவு விஞ்ஞானம் மற்றும் பொறியியல் துறைகளில் கலாநிதிப் பட்டப்படிப்பிற்கும் தெரிவாகியிருக்கின்றார்கள். இவர்கள் செப்டெம்பர் மாதம் சீனாவிற்குத் தங்களது உயர்கல்வியைத் தொடர்வதற்காகச் செல்லவுள்ளதாகச் சீனத் தூதரகம் அறிவித்தது.

இந்த மாணவர்கள் கல்வி பயிலும் வருடங்கள் முழுவதும் கல்வி, தங்குமிட வசதி, வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவு, மருத்துவக் காப்புறுதி எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக 25 இலட்சம் ரூபா வரை வழங்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் மாதவ தேவசுரேந்திரவும் வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் பெரியசாமிப்பிள்ளை செல்வராஜும், புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களின் குடும்பத்தவரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

## 5 மாணவர்கள் படுகொலை

# சட்டமா அதிபரின் நடவடிக்கையை வரவேற்கிறது மன்னிப்புச் சபை

(கொழும்பு)

திருகோணமலையில் கடந்த 2006 ஜனவரியில் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்ற 5 தமிழ் மாணவர்களின் கொலை தொடர்பாக மீண்டும் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு சட்டமா அதிபர் எடுத்திருக்கும் தீர்மானத்தை வரவேற்றிருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை, விசாரணைகள் பயனுறுதியுடையவையாக இருக்க வேண்டுமானால் சில சீர்திருத்தங்கள் அவசியம் என்றும் தெரிவித்தது.

இந்தக் கொலைகளுடன் தொடர்புடைய வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த 13 வீரர்களை, அவர்களுக்கு எதிராகச் சாட்சியங்கள் இல்லையென்ற காரணத்தைக் கூறி திருகோணமலை மேல் நீதிமன்றம் விடுதலை செய்தமையை அடுத்தே இந்த மீள் விசாரணைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்வதற்கும், இந்தக் கொலைகள் தொடர்பான நீதி கிடைக்கப்பெறுவதற்கும் முழுமையானதும், கண்டிப்பானதும், பயனுறுயுடையதுமான பக்கச்சார்பற்ற விசாரணை அவசியம் என்பதையும் சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30(1) தீர்மானத்தின் பிரகாரம் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் என்பன மீறப்பட்ட சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளை உள்நாட்டு நீதிமன்ற முறைமை ஒன்றினூடாக அல்லது விசேட சட்டவாதி ஒருவரை உள்ளடக்கிய நீதிமன்றப் பொறிமுறை ஊடாக விசாரணை செய்து கொலைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்வதற்கு சர்வதேச சட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கம் கடப்பாடு உடையதாக இருக்கின்றது என்று கூறியிருக்கும் மன்னிப்புச்சபை, திருகோணமலை மாணவர்கள் கொலைகள் குறித்து பயனுறுதியுடைய முறையில் விசாரிப்பதற்கும், பொறுப்புக்கூற வைப்பதற்குமாக சாட்சிகள் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும், சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் தற்போது வசிக்கின்ற நாடுகளிலிருந்து பரஸ்பர சட்ட உதவிகளைப் பெறுவதற்கும் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறது.


திருகோணமலையில் 5 மாணவர்களினதும் சடலங்களைப் புகைப்படம் எடுத்த பத்திரிகையாளரான சுப்பிரமணியம் சுகிர்தராஜன் இச் சம்பவத்திற்கு ஒருசில வாரங்கள் கழித்து கொலை செய்யப்பட்டார் என்பதும், கொலையுண்ட மாணவர்களில் ஒருவரான ரஜிஹரின் தந்தையாரான டாக்டர் கே.மனோகரன் கொலை அச்சுறுத்தல்களை அடுத்து நாட்டைவிட்டுத் தப்பியோட நிர்ப்பந்திக்கப்பட்டார். இந்த வழக்கில் சாட்சியமளிக்கும் பட்சத்தில் தான் பழிவாங்கப்படலாம் என்ற அச்சத்தை அவர் தொடர்ந்தும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொலையுண்ட ஏனைய மாணவர்களின் குடும்பத்தவர்களும் சம்பவத்தில் உயிர் தப்பிய இளைஞர்களும் கூட இலங்கையை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர்களாலும் சாட்சிகளாலும் வெளிப்படுத்தப்பட்ட பாதுகாப்பு அச்சங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், இலங்கைக்கு வெளியே இருக்கும் சாட்சிகளும் பாதிக்கப்பட்டவர்களும் விசாரணைகளில் பங்கேற்பதற்கு வசதி செய்வதற்காக 2015 ஆம் ஆண்டின் குற்றச் செயல் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியங்களின் பாதுகாப்பிற்கான சட்டத்தில் இலங்கை அரசாங்கம் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்றும் மன்னிப்புச்சபை கூறியிருக்கிறது.

சாட்சிகளும், பாதிக்கப்பட்டவர்களும் தற்போது வசிக்கின்ற வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் தூதரகங்களிலிருந்து சாட்சியமளிப்பதற்கு வசதிசெய்வதற்கும் அப்பால் சட்டத்தில் திருத்தங்களைச் செய்யக்கூடியதாக அந்தச் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்றும் மன்னிப்புச்சபையின் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-7)

## டேர்மினேட்டர் விவகாரம்

# பசிலுக்கு விளக்கமளித்த ரணிலுக்கு ரோஹித பதில்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் டேர்மினேட்டர் குறித்த கருத்து தவறானது என்பதை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் சரியாகப் புரிய வைப்பார்கள் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பிரதமருக்கு ஆரம்பத்திலிருந்து பாடசாலை செல்லுமாறு நாம் கேட்டுக் கொள்கின்றோம். சொற்களுக்கு விளக்கம் தெரியாமல் அதனைப் பிரயோகிக்க வேண்டாம் என அவரிடம் வேண்டுகோள் விடுகின்றோம்.



இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மையானவர்களின் விருப்பம் என்னவென்பது தெரியும். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மக்களின் முடிவை வைத்து, தோல்வியடைந்து வீட்டில் இருந்தவாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தச் சொல்லின் விளக்கத்தை யோசித்துப் பார்க்க முடியுமாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கருத்துக்கு விளக்கமளித்து பிரதமர் ஆற்றிய உரைக்குப் பதிலளிக்கையில் ரோஹித மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ஐரோப்பிய நாடொன்றில் இருவர் நீரில் மூழ்கிப்பலி



(நாபோலி)

ஐரோப்பிய நாடொன்றில் இலங்கையர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலி நாபோலி நகரத்திற்கு அருகில் அமைந்துள்ள கடலில் குளிப்பதற்காகச் சென்ற இலங்கையர்கள் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

ஷாந்த ஜயவிக்ரம மற்றும் எல்.எம்.சுஜித் என்ற இருவரே இவ்வாறு உயிரிழந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை சுவிட்சர்லாந்தில் கடந்த ஒரு மாத காலப் பகுதியில் மூன்று இலங்கையர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இதில் சிறுமி ஒருவரும் உள்ளடங்குவார்.

ஐரோப்பிய நாடுகளில் இலங்கையர்கள் அகால மரணத்திற்குள்ளாவது குறித்து பலர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். (ஐ)

# மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திற்கு பாதுகாப்புச் செயலாளர் விஜயம்





(மட்டக்களப்பு)

தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்கான தேவாலயங்களில் ஒன்றான மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திற்கு பாதுகாப்புச் செயலாளர் சாந்த கோட்டேகொட உள்ளிட்ட குழுவினர் விஜயம் செய்தனர்.

குறித்த குழுவினர் நேற்றுச் சனிக்கிழமை இந்த விஜயத்தை மேற்கொண்டு, இராணுவத்தினரால் புனர் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடத்தை பார்வையிட்டனர்.

இந்த விஜயத்தில் பாதுகாப்புச் செயலாளருடன், இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க, கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர உட்பட இராணுவ அதிகாரிகளும் இணைந்து கொண்டனர். (ஐ)


# தேர்தல்களில் தமிழ்ப் பிரதிநிதிகளின் அங்கத்துவம் அதிகரிக்கப்பட வேண்டும்

## இராதாகிருஷ்ணன் வலியுறுத்து

(நுவரெலியா)

தேர்தல்களில் தமிழ்ப் பிரதிநிதிகளின் அங்கத்துவம் அதிகரிக்கப்பட வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்



போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எமது நாட்டில் சிறுபான்மை மக்கள் தங்களுடைய வாக்கு பலத்தால் எங்களை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்ததன் காரணமாக நாங்கள் அவர்களுக்கான அபிவிருத்தியைக் கொண்டுவர முடிந்தது.

எனவே எதிர்காலத்திலும் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படுமானால் எங்களுடைய அபிவிருத்தி, எங்களுடைய உரிமைகளை வென்றெடுப்பது இலகுவாக அமையும்.

பிரதிநிதித்துவம் குறைவடையும் பட்சத்தில் அபிவிருத்தி பாதிக்கப்படும். அதேபோல பல பின்னடைவுகளை சந்திக்க வேண்டிவரும். சிறிய விடயங்களுக்குக்கூட போராட்டங்கள் நடத்த வேண்டிவரும்" என மேலும் தெரிவித்தார். (இ-7)

# சீன நாட்டுப்பிரஜை நீரில் மூழ்கிப் பலி!

- (மாத்தறை)

மாத்தறை - மடிஹ கடற்கரையில் நீராடிக் கொண்டிருந்த சீனப் பிரஜையான பெண்ணொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை குறித்த பெண் கடற்கரையில் நீராடிக் கொண்டிருந்த வேளை, அலையில் இழுத்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

30 வயதான அவர், சீன நாட்டைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 70 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 240 | 200 | 300 |
| தக்காளி | 100 | 120 | 110 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 110 | 120 |
| கோவா | 80 | 80 | 60 | 80 |
| கரட் | 120 | 140 | 120 | 160 |
| பூசணி | 100 | 50 | 50 | 80 |
| புடோல் | 50 | 60 | 60 | 120 |
| வாழைக்காய் | 80 | 120 | 110 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 110 | 125 | 120 |
| பாகற்காய் | 150 | 150 | 150 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 60 | 100 |
| பயற்றங்காய் | 60 | 70 | 50 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 80 | 70 | 50 | 80 |
| கறிமிளகாய் | 150 | 160 | 210 | 200 |
| முருங்கைக்காய் | 60 | 100 | 100 | 100 |
| போஞ்சி | 150 | 160 | 100 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | [illegible] | 50 | 60 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 300 | 300 | 310 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 26 | 20-40 |
| இராசவள்ளி | 250 | 160 | 150 | 240 |
| வெங்காயப்பூ | 200 | 180 | 100 | 200 |
| முள்ளங்கி | 60 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 120 | 40 |

# தமிழர் படுகொலையின் 27 ஆம் ஆண்டு நினைவு தினம்





(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - மைலந்தனை புணாணைத் தமிழர் படுகொலை 27 ஆம் ஆண்டு நினைவு தினம் மைலந்தனை பொதுமக்களால் நேற்று முன்தினம் நினைவுகூரப்பட்டுள்ளது.

இதன்போது மைலந்தனை பொதுமக்கள் மற்றும் வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் கு.குணசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளதுடன், மலர் தூவி ஈகச்சுடரேற்றி மௌன இறை வணக்கத்துடன் அஞ்சலி செலுத்தப்பட்டது.

1992.08.09 அன்று மட்டக்களப்பின் எல்லைக் கிராமமான மைலந்தனை, புணானையில் இலங்கை இராணுவத்தால் அப்பாவித் தமிழ் உறவுகள் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மயிலிட்டிப்பக்கம் நுழைவாயில் மாற்றம்

# 2000 ஏக்கர் காணிகளை

# அபகரிக்கத் திட்டம்!



## டக்ளஸ் எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

**பலாலி விமான நிலையத்தின் நுழைவாயிலை மயிலிட்டிப்பக்கம் மாற்றும் நடவடிக்கை 2 ஆயிரம் ஏக்கர் தனியார் காணிகளை அபகரிக்கும் ஓர் திட்டம் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா குற்றம் சாட்டினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெளிநாடுகள் மற்றும் முகவர் நிறுவனங்கள் அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்களுடன் செய்து கொள்கின்ற ஒப்பந்தங்களுக்கு நாடாளுமன்றத்தின் அனுமதியைச் பெற்றுக் கொள்ளும் சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வளவு காலமும் இழுபட்டுக் கொண்டிருந்த பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்திப் பணிகள் அண்மையில் திடீரெனத் தொடங்கப்பட்டது.

இந் நிலையில் மயிலிட்டிப் பக்கமாக விமான நிலையத்தின் நுழைவாயிலைத் திருப்புவதற்கும் ஏற்கனவே மயிலிட்டிக் கடற்கரைப் பகுதியை அமெரிக்கக் குழு ஆய்வு செய்தமை தொடர்பிலும் பல்வேறு சந்தேகங்கள் தோன்றுகின்றன.

இலங்கையில் அமெரிக்க பாதுகாப்புத் தரப்பினருக்கும் சிவில் பிரஜைகளுக்கும் 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட வியானா உடன்படிக்கையின் பிரகாரம், தூதுவராலயங்களில் நிர்வாக மற்றும் தொழில்நுட்பச் சபையினருக்கு உரித்தான வரப்பிரசாதங்கள், சலுகைகள் மற்றும் அனுமதிகளை வழங்குமாறு கோரப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டாலும் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயம் மேற்படி திட்டத்தின் ஊடாக இலங்கை அரசிடம் கோரியுள்ளதாகத் தெரிய வருகின்ற வரப்பிரசாதங்கள் வேறு வகையாகும்.

அந்த விடயங்களை இங்கே முழுமையாகக் கூறுவதற்கு நேரம் போதாது என எண்ணுகின்றேன். என்றாலும் அமெரிக்க தூதுவராலயம் கோரியுள்ள வரப்பிரசாதங்களை நன்கு ஆராய்கின்றபோது, அவர்கள் இலங்கையில் அமெரிக்கப் படைத்தளமொன்றை அமைப்பதையே கோருகின்றனர் என்பது தெளிவாகின்றது.

அத்தகைய வரப்பிரசாதங்களை வழங்குவதன் ஊடாக இலங்கையின் இறைமை, தேசிய பாதுகாப்பு அனைத்தும் பாரதூரமான நிலைக்குத் தள்ளப்படுவதுடன், இலங்கையின் அண்டைய நாடுகளுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகள் தொடர்பிலும் அதன் ஊடாக இந்த நாட்டுக்கு - நாட்டு மக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகள் தொடர்பிலும் நாம் சிந்திக்க வேண்டும்.

அமெரிக்கா இலங்கையுடன் மட்டுமல்ல உலகிலேயே நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுடன் இந்த சோபா ஒப்பந்தத்தைச் செய்து கொண்டுள்ளது என நீங்கள் கூறலாம்.

இந்த ஒப்பந்தம் காரணமாக அந்தந்த நாடுகளிலே இன்றைய நிலையில் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் உருவாக்கி இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைத் தேடிக் கொள்வதற்கு அந்த நாடுகளால் இயலாமல் இருப்பதற்குக் காரணம், இந்த சோபா ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் என்றே கூறப்படுகின்றது.

இந்த விடயத்தை உறுதிப்படுத்துகின்ற' கட்டுரையொன்று **Australian Woman renews plea for Japan's government to amend U.S. Forces agreement after rape ordeal'** எனும் தலைப்பில் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதி ஜப்பான் ரைம்ஸ் - **Japan Times** பத்திரிகையில் வெளி வந்திருக்கின்றது.

எமது பகுதிகளிலே கிருசாந்திமார், கோணேஸ்வரிகளின் கதைகள் இன்னமும் கண்ணீருடன் நினைவுகூரப்பட்டு வருகின்ற நிலையில், இந்த ஒப்பந்தத்திற்கும் வழிவிட்டால், காலம் பூராகவும் இத்தகைய கண்ணீர்க் கதைகளையே நாங்கள் சுவாசித்துக் கொண்டிருக்க வேண்டி வரும் என்பதையே நான் இங்கு ஓர் எச்சரிக்கையாக எடுத்துக் கூறுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# கந்தபுராண எழுச்சி விழா ஆறாம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்வுகள் வரிசையில், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா 2019" நிகழ்வின் ஆறாம் நாள் நிகழ்வுகள் இன்று மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் பத்தமேனி, சித்தி விநாயகர் ஆலயப் பிரதம குரு 'சிவஸ்ரீ முத்து பிரசன்னா குருக்கள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி.ஹேமலோஜினி குமரன் தலைமையில், யாழ். பல்கலைக்கழக முதுநிலை உதவி நூலகர் பிரம்மஸ்ரீ க.நவநீதகிருஷ்ண சர்மா பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாணம் SOND நிறுவனப் பணிப்பாளர் த.செந்தூரராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க இடம்பெறும்.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விழிசிட்டி ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை, தவளக்கிரி முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மற்றும் பன்னாலை ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஏ.அனுசாந்தனின் "சுக்கிரன் உபதேசம்" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். சிறப்புச் சொற்பொழிவின்போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கள் உள்ளடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டுச் சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோருக்குப் பரிசில்களும் வழங்கப்படும்.

உற்சவகால ஆறாம் நாள் நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாக ஞான ஏந்தல் மா.ந.பரமேஸ்வரனின் திருப்புகழ் இசைக் கச்சேரி நிகழ்வும் இடம் பெறும். (இ-7)

# பஜனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்வுகள் வரிசையில், நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் ஆறாம் நாள் உற்சவ தினத்தை முன்னிட்டு, நல்லூர் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த திருமதி. புஸ்பமலர் யோகநாதனின் மாணவர்களின் பஜனை நிகழ்வு இடம் பெறும். (இ-7)




## நன்றியுடைய

பேயனாய்ப் பேர் கெடுத்துப்பிணி
துயர்களில் அழுந்தி வருந்தினேன்!
நாயகனில்லை நான் நன்றியுடைய
நாயாய் உன்புகழ் பாடினேன் நல்லூரா!
தாயெனக் கண்ட தமிழே முருகா
மானம் காப்பது மனித குணமே!
தாயாய்த் தந்தையாய் அனைத்துமாய்
நிற்கும் அகிலாண்ட நாயகனே!

*இ.ஜெ.பாலன்*

## ஆறுமுகமே அழகிய வேலே...

அறிவின் ஆழமும் அதன் கூர்மையும்
அர்த்தமாம் உன் வேல் முருகா
அமிர்தமாம் தமிழின் கடவுளே குமரா
ஆறுமுகமும் ஆறு பொருள் தரவே
அவதரித்த நெற்றிக்கண்ணன்
பொறியே சண்முகா
தந்தைக்கு உபதேசம் செய்த குகனே
தரணியெங்கும் ஒலிக்குது உன் புகழே
நல்லையம்பதி வாழ் அழகிய வேலவா
நன்மைகள் பெருகவே வருக வருகவே..

*கு.யசிதீபன்*

## வேண்டும் வரங்கள் ஈந்திடுவான் நல்லைக் கந்தன்

*நல்லூர் கந்தனை கரம் கூப்பினால்*
*வேண்டும் வரங்கள் ஈந்திடுவான்*
*காசுக் கந்தன் என்று நாமம்–ஆனால்*
*கூசாமல் அள்ளிக் கொடுப்பான் வரங்கள்*
*சூரனைப் போரில் வென்ற திருவோன்*
*தொந்தி வயிற்றுக் கணபதிக்கோ இளையவன்*
*வள்ளி தெய்வானையுடன் நல்லையில் உறைபவன்*
*நாட்டு மக்கள் துயர் துடைத்திடுவான் வெகுவிரைவில்*

***கந்தையா–கனகசபை***
***சண்டிலிப்பாய்.***

## சந்தக் கவியில் நல்லைக் குமரன்!

*பூவார் மலர் சூடும் புலப்*
*பொழிலே வுய ரெழிலே*
*மூவா முத லோனே பதி*
*மூலா முரு கோனே*
*நோவா தெமைக் காவாய், உமை*
*நோக்கு மிறை யோனே*
*நாவால் தமிழ்ப் பாவாற் கமழ்*
*நல்லைக் கும ரோனே*

***கலாபூஷணம், சந்தக்கவிஞர்.***
***நவ.பாலகோபால்***

# கல்லாறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரம் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் மடக்கிப் பிடிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லாறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரம் ஒன்று பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் கடந்த வியாழக்கிழமை பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பிரிவிற்குட்பட்ட கல்லாறு பிரதேசத்தில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறு மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுவது தொடர்பில் பிரதேச செயலாளர் மற்றும் கிராம அலுவலர் மற்றும் கிராம மட்ட பொதுஅமைப்புக்களாலும் பொது மக்களாலும் பொலிஸாருக்கு பல தடவை தகவல்களை வழங்கிய போது பொலிஸார் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவோரை கைது செய்யாத நிலையே தொடர்ந்து காணப்பட்டது.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை பகல் பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன் கிராம அலுவலர் மத்திய சுற்றாடல், அதிகார சபை அதிகாரிகள் கல்லாறுப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒரு உழவு இயந்திரத்தினையும் அதன் சாரதியினையும் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சட்டரீதியற்ற முறையில் அங்கீகரிக்கப்படாத இடங்களில் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் கரையோரப் பகுதிகள் மிக மோசமாக பாதிப்படையக்கூடிய நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த மாதம்18 ஆம்திகதி முற்பகல்10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதனால் இயற்கை சமநிலை பாதிக்கப்படுவதுடன் வயல் நிலங்கள், ஆறுகள், வீதிகள் என்பனவும் சேதமடைந்து வருகின்றன.

இந்த சட்டவிரோத மணல் அகழ்வினை கட்டுப்படுத்துவது தொடர்பில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அதனடிப்படையில் எதிர்காலத்தில் சட்டவிரோத மணல் அகழ்வினை கட்டுப்படுத்துவதற்கான முழுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இக்கூட்டத்தில் பொலிஸார் தெரிவித்திருந்ததுடன் முக்கிய இடங்களில் பொலிஸ் காவலரண்களை அமைப்பதாகவும் பொலிஸார் உறுதியளித்தாலும் இதுவரை எந்த இடங்களிலும் காவலரண்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்பது சுட்டிக்காட்டத்தக்கது. (9-315)




## கலையரங்கு அமைக்க 20 மில்லியன் மதிப்பீடு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கலையரங்கு அமைப்பதற்கு இருபது மில்லியன் ரூபா தேவைப்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் முக்கிய பாடசாலையான இப்பாடசாலையில் கலையரங்கு பெருங்குறையாக உள்ளது.

பாடசாலையின் மண்டபம் ஒன்றே நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. அது மாணவர்களுக்கு மட்டும்போதுமானதாக உள்ளது. பெற்றோர்களையும் மாணவர்களையும் சேர்த்து நிகழ்வு நடத்துவதற்கு இடவசதிகள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

பாடசாலைகளுக்கு வரும் அரசியல்வாதிகளிடமும் அதிகாரிகளிடமும் பாடசாலையில் கலையரங்கு அமைப்பது தொடர்பாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. சில அரசியல்வாதிகளின் கோரிக்கைக்கமைவாக பாடசாலை நிர்வாகத்தினால் கலையரங்கு அமைப்பதற்கான செலவாக இருபது மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (9-350)

## ஏழு மீனவர்களும் விடுதலை

(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஏழு இந்திய மீனவர்களை மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா விடுதலை செய்துள்ளார். கடந்த மாதம் 28ஆம் திகதி தலைமன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாக தெரிவித்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

1979 ஆம் ஆண்டு 59ஆம் இலக்க வெளிநாட்டு மீன்பிடி களங்கள் சட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட 2018ஆம் ஆண்டு முதலாம் இலக்க கடற்றொழில் சட்டத்தின் வெளிநாட்டு மீன்பிடி களங்கள் நான்காவது பிரிவை மீறிய குற்றச்சாட்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனையும் இதே சட்டத்தில் ஐந்தாவது பிரிவில் இலங்கை எல்லைக்குள் பணிப்பாளர் அனுமதிப்பத்திரம் இன்றி மீன், இறால் பிடித்தமைக்கு மேலும் இரு வருட ஒத்திவைக்கப்பட்ட கடூழிய சிறைத் தண்டனையும் விதித்து இவ் இந்திய மீனவர்களை நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா விடுதலை செய்தார். (ஜ-285)

## உதய நகரில் நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஊரகம் நோக்கிய சேவைகள் எனும் தொனிப் பொருளில் கரைச்சி பிரதேசம் பூராகவும் நடைபெற்று வரும் நடமாடும் சேவைகள் நேற்று உதயநகர் வட்டாரத்தில் உதயநகர் மேற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் உள்ளூராட்சி சபைகளினால் பொதுமக்களுக்கு செய்யப்படும் பணிகளான கழிவகற்றல் சேவைகள் வீதி விளக்கு சேவைகள், வீதிகள், மயானங்கள் புனரமைப்பு, சித்த ஆயுர்வேத வைத்திய சேவைகள் வியாபார நிலையங்களுக்கு உரிமம் வழங்கல், நாய்களுக்கு தடுப்பூசி கருத்தடை உரிமம் வழங்கல், கட்டட அனுமதி வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல், ஆதன அறவீடுகள், பொது மக்கள் முறைப்பாடுகள் மேலும் பல சேவைகளை உள்ளடக்கியதாக நடைபெற்று வருகிறது.

குறித்த சேவையில் கனகபுரம் உதயநகர் மேற்கு, கிழக்கு, விவேகானந்தநகர் ஆகிய கிராமங்களை சேர்ந்த மக்கள் பயன் பெற்றனர். (9)

## நட்டாங்கண்டல்-பாலம்பிட்டி வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் நட்டாங்கண்டலில் இருந்து மன்னாரின் பாலம்பிட்டி வரையான வீதியினைத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நட்டாங்கண்டலில் இருந்து பாலம்பிட்டி வரையான பதினாறு கிலோ மீற்றர் வீதி 2009ஆம் ஆண்டிற்கு முன்னர் மக்களின் பாவனையில் இருந்தது. மாந்தை கிழக்கு வழியாக மடுவுக்குச் செல்லும் பக்தர்கள் நட்டாங்கண்டல் பாலம்பிட்டி வழியாக மடுவைச் சென்றடைந்தனர்.

குறித்த வீதி தற்போது பற்றைகளினால் மூடப்பட்டிருப்பதன் காரணமாக மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலைமையில் உள்ளது என கடந்த வாரம் நடைபெற்ற மாந்தை கிழக்கின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளினால் தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தின் இணைத்தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி.சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா மீள் குடியேற்ற அமைச்சில் இருந்து 10 இலட்சம் ரூபா நிதி பெற்றுத் தருவதாகத் தெரிவித்த நிலையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் குறித்த நிதியினைப் பயன்படுத்தி வீதியினைத் தற்காலிகப் புனரமைப்பு செய்வதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து எதிர்வரும் 31 ஆம் திகதி வரை மடுவிற்கு மேற்படி வீதியினைப் பயன்படுத்தி பக்தர்கள் செல்வார்கள் என்பதன் அடிப்படையில் வேகமாக இவ்வீதி புனரமைக்கப்படவுள்ளது. (9-350)

# கரைச்சி பிரதேச சபையினால் வழங்கப்படும் குடிநீர் சீரில்லை

## பொதுமக்கள் முறைப்பாடு

(அக்கராயன்)

கிளிநொச்சி மேற்கில் ஆறு கிராம அலுவலர் பிரிவுகளில் நாள்தோறும் 30 ஆயிரம் லீற்றருக்கும் அதிகமான குடிநீர் தேவைப்படும் நிலையில் கரைச்சி பிரதேச சபையினால் ஒன்று விட்ட ஒரு நாளுக்கு 15 ஆயிரம் லீற்றர் குடிநீரே விநியோகிக்கப்படுவதாக பொது மக்கள் கிராம அலுவலர்களிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம், அக்கராயன், கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம், கோணாவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தற்போது கடும் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி கிராமங்களுக்கான குடிநீர் விநியோகத்தினை மேற்கொள்வதாக பொறுப்புகளை ஏற்றுக் கொண்ட கரைச்சி பிரதேச சபை அதற்கான நிதியினையும் மாவட்டச் செயலகத்தில் இருந்து பெற்றுக் கொள்கின்றது.

ஆனால் மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில் எவ்வளவு குடிநீர் விநியோகிக்கப்படுகின்றது.

அதன்தேவைப்பாடுகள்என்ன? மக்களுக்கு நிறைவாக குடிநீர் கிடைக்கின்றதா? என்ற வெளிப்படையான தகவல்கள் எதையும் கரைச்சி பிரதேச சபை வெளிப்படுத்தவில்லை. ஆனால் மேற்படி ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலும் குடிநீர் நெருக்கடி தலைவிரித்தாடுகின்றது.

ஒழுங்காக குடிநீர் விநியோகம் இடம்பெறவில்லை என்ற தகவல்கள் கிராம அலுவலர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டு அத்தகவல்கள் கரைச்சி பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில் குடிநீர் விநியோகம் ஒழுங்காக நடைபெறுகின்றதா? என்ற விபரங்களை மக்களிடம் இருந்து பெற்று குடிநீர் விநியோகத்தினை சிறப்பாக முன்னெடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-350)

# திறன் வகுப்பறை திறப்பு விழா



(கிளிநொச்சி)

கிளி/பன்னங்கண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறன் வகுப்பறைத் திறப்புவிழா கடந்த மாதம் பாடசாலை முதல்வர் திருமதி.லோகநாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கனடாவின் மொன்றியல் மாநகரிலுள்ள தமிழ் உறவுகளால் உருவாக்கப்பட்ட "வன்னி வளத்துக்கான புதிய சந்தர்ப்பங்கள்" நிறுவனத்தினரின் நிதியுதவியோடு புதிதாக அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையை மாணவர்களின் பயன்பாட்டிற்காக கையளிக்கும் மேற்படி நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் கலந்து கொண்டார்.

மேற்படி நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் த. குருகுலராசா, பிரதிக்கல்விப் பணிப்பாளர் பாலசிங்கம் வாசுதேவன், ஆரோபண இளைஞர் இல்லத்தின் இயக்குநர் வண பிதா யூட் அமலதாஸ் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.இரவீந்திரன், ஓய்வுநிலை அதிபர். க.இராஜேந்திரம், கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் அ.சத்தியானந்தன் ஆகியோரோடு, அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9)

முதலில் தன்னைத் மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்பவன் மட்டுமே, உலகை மாற்றத் தகுதி உடையவன்.
– நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எம் தமிழ் இனத்துக்காக அனைவரும் ஒன்றுபடுவோம்

2009 மே 18ஆம் திகதிக்குப் பின்னர் திட்டமிட்ட வகையில் தமிழினத்தை வேரறுக்கின்ற முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

கடலில் மிதக்கின்ற பனிக்கட்டியானது பத்தில் ஒன்பது பகுதி கடல் நீரில் மறைந்தும் பத்தில் ஒரு பகுதி கடல் மட்டத்தின் மேலாகவும் தெரியும்.

இதுபோலத்தான் தமிழினத்துக்கு எதிரான சதிவேலைகள் திரைமறைவில் மிகவும் நுட்பமாகவும் இரகசியமாகவும் திட்டமிட்டும் நடந்து வருகிறது.

குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்ற பேச்சுக்கே இடமிருக்கக்கூடாது என்ற அடிப்படையில், வடக்கு கிழக்கு முழுவதிலும் சிங்களக் குடியேற்றங்களை அமைத்து சிங்கள இனத்தின் பரம்பலை இங்கு ஏற்படுத்துகின்ற மிகப் பெரும் திட்டங்கள் கனகச்சிதமாக நிறைவேற்றப்படுகிறது.

தமிழர்களின் பிரதேசம் என்ற பேச்சு எதிர்காலத்தில் இருக்கக்கூடாது என்ற ஒரே நோக்கில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் திட்டமிட்ட குடியேற்றங்களும் பௌத்த விகாரைகளை அமைப்பதுமான செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடந்து கொண்டே இருக்கின்றன.

இதற்கு மேலாக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அரச நிறுவனங்களில் சிங்கள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகின்ற கபடத்தனம் உச்சமாக நடந்தேறுகிறது.

அதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஆட்சி நடத்துகின்ற அரசாங்கத்தில் மேற்போந்த திட்டமிட்ட ஆக்கிரமிப்புகள் நடக்கின்றன எனும்போது தமிழினத்தின் இருப்பு என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது.

இத்தகைய மோசமான சூழ்நிலையை நாம் தெரிந்திருந்தும் அதுபற்றிக் கவனம் செலுத்தாமல், அரசியல் இலாபங்களுக்காகவும் சுயநலன்களுக்காகவும் எங்களின் சிந்தனைகளைத் திசைதிருப்பியுள்ளோம்.

இத்தகைய போக்குகள் ஒரு சிலருக்குத் தற்காலிகமான இலாபங்களைத் தருமேயன்றி, நீண்டகாலத்தில் இருந்ததையும் இழந்து தமிழ் இனத்தையும் நடுத்தெருவில் விட்ட பாவச் செயலுக்கு நாம் ஆளாக வேண்டி வரும்.

எனவே நாட்டில் அடுத்தடுத்து இடம்பெறவுள்ள தேர்தல்களை அடிப்படையாகக் கொண்டேனும் எங்கள் இனத்துக்கான விமோசனத்தை நாம் பெற்றாக வேண்டும்.

இந்த உறுதிமொழியை தமிழ் அரசியல் கட்சிகள் எடுத்தாக வேண்டும். இதைவிடுத்து தேர்தலும் அதனூடான பதவிகளுமே எங்கள் இலக்கு என்றால் எம்மினத்தின் எதிர்காலம் ஆரோக்கியமாக இருக்காது என்பது நிறுதிட்டமான உண்மை.

இவை யாவற்றுக்கும் மேலாக, இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்கள் விழிப்போடு செயற்படுவது மிகவும் அவசியமானதாகும்.

குறிப்பாக எங்கள் உரிமைகளை வென்றெடுக்க நாம் ஒற்றுமைப்பலத்தோடு இருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்துகின்ற தார்மீகக் கடமை ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உண்டு. இதை எவரும் மறந்துவிடலாகாது.

# தெரிவுக்குழுவிற்கு ஜனாதிபதியை அழைக்கும் திகதி குறித்து இன்னும் தீர்மானமில்லை

## ஆனந்த குமாரசிறி கூறுகிறார்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறுதின பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்காக தெரிவுக் குழுவின் முன்னிலையில் ஆஜராகுமாறு ஜனாதிபதிக்கு அழைப்பொன்றை அனுப்பி வைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

எனினும் அவர் ஆஜராக வேண்டிய திகதி குறித்து தற்போதுவரை தீர்மானம் எதனையும் மேற்கொள்ளவில்லை.

அடுத்தவாரம் அதுகுறித்து முடிவெடுப்போம் என்று பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவரும், பிரதி சபாநாயகருமான ஆனந்த குமாரசிறி தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுதின பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், இதுவரையில் நாட்டின் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய மற்றும்பொறுப்புக்கூற வேண்டிய நிலையிலுள்ள பலரும் தெரிவுக்குழுவின் முன்னிலையில் ஆஜராகி சாட்சியம் வழங்கியிருக்கிறார்கள்.

அதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடமும் தெரிவுக்குழு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்தமையை அடுத்து, தனக்கு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவுக் குழுவின் முன்னிலையில் ஆஜராகி சாட்சியம் வழங்கியிருந்தார்.

இந்நிலையிலேயே தெரிவுக்குழு விசாரணைகளுக்காக ஜனாதிபதி ஆஜராக வேண்டிய தினத்தை அடுத்த வாரம் தீர்மானிப்போம் என அவர் தெரிவித்தார். (இ-7)

## அவிஸாவளையில் கோரவிபத்து; ஒருவர் பலி! மூவர் படுகாயம்

(அவிஸாவளை)

அவிஸாவளை, தல்துவ-அமிதிரிகல வீதியில் ஆட்டோ ஒன்று எதிர்த்திசையில் வந்த லொறியுடன் மோதியதில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் காயமடைந்தனர்.

இந்நிலையில் விபத்தில் பலத்த காயமடைந்த ஆட்டோச்சாரதி, அவரது மனைவி மற்றும் இரண்டு மகள்கள் அவிஸாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சாரதி உயிரிழந்தார்.

குகுலுகல பகுதியை சேர்ந்த 53 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி மற்றும் உதவியாளரை பிரதேசவாசிகள் தாக்கியதில் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## நாடாளுமன்ற தெரிவுக்குழு மீது பெரும்பாலானவர்களின் அவதானம் திரும்பியுள்ளது

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு மீது பெரும்பாலானவர்களின் அவதானம் திரும்பியுள்ளதாகச் சபாநாயகர் கருஜெயசூரிய தெரிவித்தார்.

அந்தத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் அனைத்தையும் நேரடியாக ஒளிபரப்ப ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் மக்கள் மத்தியில் பாராளுமன்றம் குறித்த நம்பிக்கை வலுப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கோப் குழுவின் செயற்பாடுகளை நேரடியாக ஒளிபரப்ப ஊடகங்களுக்கு அனுமதி வழங்கும் பிரதான நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

### — மக்கள் மீதான பயத்தாலேயே —

## 19 ஆவது அரசியலமைப்பை மகிந்த தரப்பு ஆதரித்தது

### — மக்கள் விடுதலை முன்னணி

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் 2015 இல் ஜனாதிபதித் தேர்தலில் மிக மோசமாகத் தோல்வியடைந்தமையின் விளைவாக வெகுவாக அச்சமடைந்திருந்தனர்.

வாக்குகளின் மூலமாக நாட்டில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திய மக்கள் மீது அவர்களுக்குக் காணப்பட்ட பயத்தின் காரணமாகவே 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட போது அதற்கு ஆதரவளித்தனர்.

ஆனால் 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் உடனடியாகக் கொண்டுவரப்படும் என்ற நம்பிக்கையிலேயே 19 இற்கு ஆதரவளித்ததாக தற்போது பொய்யான காரணங்களைக் கூறுகின்றார்கள் என்று மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

2015 ஆம் ஆண்டில் 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் உடனடியாகக் கொண்டுவரப்படும் என்ற நம்பிக்கையிலேயே 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு ஆதரவு வழங்கியதாக எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

20 ஆவது திருத்தம் உடனடியாகக் கொண்டுவரப்படாமையினாலேயே நாட்டில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் என்ற இரண்டு அதிகார மையங்கள் தோற்றம் பெற்றதுடன், முரண்பாடுகளும் அதிகரித்துள்ளன. ஆகையினாலேயே சிக்கல்களுக்குக் காரணமான 19 ஆவது திருத்தத்தைத் தற்போது எதிர்க்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

### பாதுகாப்புச் செயலாளர் சாந்த உறுதி

(கொழும்பு)

பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் சாந்த தெரிவித்தார்.

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திற்கு நேற்றுக் காலை பாதுகாப்பு செயலாளர் சாந்த இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க, கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர உட்பட இராணுவ அதிகாரிகள் விஜயம் ஒன்றைமேற்கொண்டனர்.

இவர்கள் இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்டு வரும் கட்டடத்தை பார்வையிட்டு பணிகள் தொடர்பாக ஆராய்ந்தனர்.

இதன்போது ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர், தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற இந்த சீயோன் தேவாலயத்தை இராணுவத்தினர் புனரமைத்து வருகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப்பின் நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- ❖ இறைவன் மென்மையானவன். அவன் எல்லாவற்றிலும் மென்மையையே விரும்புகிறான்.
- ❖ உன்னிடம் இரண்டு பண்புகளை இறைவன் மிகவும் நேசிக்கிறான். 1.மென்மை. 2.சகிப்புத்தன்மை.
- ❖ இறைவன் கூறுகின்றான்: (நீதி செலுத்துங்கள்) நீதி உங்களுக்கோ, உங்களின் பெற்றோருக்கோ, நெருங்கிய உறவினருக்கோ, பாதகமாக இருந்தாலும் சரியே... எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள பகை உங்களை நீதியிலிருந்து பிறழச் செய்துவிடக்கூடாது.
- ❖ தனிமனிதனின் (தவறான) செயலுக்காக இறைவன் அனைவரையும் தண்டிப்பதில்லை. ஆனால் தீமைகளைக் கண்டும், அதனைத் தடுக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தும் அதனைத் தடுக்காதிருந்தால் இறைவன் அனைவரையும் (தீமைகளைப் புரிந்தவர், தடுக்காதிருந்தவர்) தண்டிப்பான்.
- ❖ இறைவன் உங்கள் உருவங்களையோ உங்கள் செல்வங்களையோ பார்ப்பதில்லை. மாறாக உங்கள் உள்ளங்களையும், செயல்களையும் தான் பார்க்கிறான்.
- ❖ செல்வ வளம் என்பது அதிக செல்வத்தைப் பெறுவதல்ல. போதுமென்ற மனதைப் பெறுவதே உண்மையான செல்வமாகும்.

# ரில்கோ கொங்கியூரஸ் எப்.சி அணி அபார வெற்றி



வடகிழக்கு பிறீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 8 ஆவது ஆட்டத்தில் மாதோட்டம் எப்.சி. அணியை எதிர்த்து ரில்கோ கொங்கியூரஸ் அணி மோதியது. இவ் ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோல்களைப் பெற்றுக்கொண்டன.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ரில்கோ கொங்கியூரஸ் எப்.சி அணி ஆறு கோல்களைப் பெற்றுக் கொள்ள ஆட்ட நேர முடிவில் 07:01 என்ற கோல் கணக்கில் ரில்கோ கொங்கியூரஸ் எப்.சி அணி தனது இரண்டாவது வெற்றியை பதிவு செய்தது.

ரில்கோ கொங்கியூரஸ் அணி சார்பாக இவன்ஸ் 3, மதுசூதன், கஜந்தன், தனேஸ், ஹறீஸ் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்று கொடுத்தனர். (க)

# மைதானத்தில் கோல்மழை பொழிந்தது வவுனியா வொறியஸ் அணி



வடகிழக்கு பிறீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 9 ஆவது ஆட்டத்தில் வவுனியா வொறியஸ் அணியை எதிர்த்து அம்பாறை அவேஞ்சர்ஸ் அணி மோதியது.

இவ் ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் 02:00 என்ற கோல் கணக்கில் வவுனியா வொறியஸ் அணி முன்னிலை வகித்தது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் வவுனியா வொறியஸ் அணி மேலும் 04 கோல்களைப் பெற்றுக் கொள்ள ஆட்ட நேர முடிவில் 06:00 என்ற கோல் கணக்கில் வவுனியா வொறியஸ் அணி தனது முதல் வெற்றியை பதிவு செய்தது.

வவுனியா வொறியஸ் அணி சார்பாக மைக் 03, மயூரன் 02, மித்த 01 கோலைப் பெற்றுக் கொடுத்தனர். (க)

# முதல் வெற்றியைப் பதிவு செய்தது நொதேன் எலைட் அணி



வடகிழக்கு பிறீமியர் லீக் தொடரில் நேற்று நடைபெற்ற 7 ஆவது ஆட்டத்தில் நொதேன் எலைட் அணியை எதிர்த்து மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணி மோதியது.

இவ் ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் 02:00 என்ற கோல் கணக்கில் நொதேன் எலைட் அணி முன்னிலை வகித்தது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் நொதேன் எலைட் அணி மேலும் 3 கோல்களையும் மற்றும் மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணி இரு கோல்களையும் பெற்றுக் கொள்ள ஆட்ட நேர முடிவில் 05:02 என்ற கோல் கணக்கில் நொதேன் எலைட் அணி தனது முதல் வெற்றியை பதிவு செய்தது.

நொதேன் எலைட் அணி சார்பாக பிரசாந் 3, பீமா 02 கோலகளைப் பெற்றுக் கொடுத்தனர். (க)

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# கொல்கத்தாவின் பயிற்சியாளராகிறார் தென்னாபிரிக்க வீரர் மக்கல்லம்

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்கு உதவி பயிற்சியாளராக நியூசிலாந்து அணியின் முன்னாள் தலைவர் பிரெண்டன் மெக்கல்லம் ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

நியூசிலாந்து அணியின் முன்னாள் தலைவர் பிரெண்டன் மெக்கல்லம், அண்மையில் அனைத்துவித கிரிக்கெட் போட்டிகளிலும் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

விக்கெட் கீப்பரும், அதிரடி துடுப்பாட்ட வீரருமான மெக்கல்லம் ஏற்கனவே சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற நிலையில், இருபது-20 போட்டிகளில் மட்டும் விளையாடி வந்தார்.

அத்துடன், ஐ.பி.எல். தொடர்களில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்காக விளையாடியுள்ளார்.

இந்நிலையில், அதே அணிக்கு உதவி பயிற்சியாளராக மெக்கல்லம் தற்போது ஒப்பந்தம் ஆகியுள்ளார். 37 வயதாகும் மெக்கல்லம், 101 டெஸ்ட் போட்டிகளில் 6,453 ஓட்டங்களும்,



260 ஒருநாள் போட்டிகளில் 6,083 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.

மேலும், 71 இருபது-20 போட்டிகளில் 2,140 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில் 2 சதங்கள் மற்றும் 13 அரைச்சதங்கள் அடங்கும். (க)

# ஹோலிக்கு இணை யாருமில்லை இங்கிலாந்து வீரர் புகழாரம்



கிரிக்கெட் விளையாட்டில் இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலி ஜாம்பவான் என்ற பட்டத்திற்கு தகுதியானவர் என, இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் மைக் கேட்டிங் புகழ்ந்து தள்ளியுள்ளார்.

மும்பையில் உள்ள கிளப் ஒன்றில் Fortune Turner என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. இந்த புத்தகத்தை சச்சின் பஜாஜ், ஆதித்ய பூஷண் ஆகியோர் எழுதியுள்ளனர்.

இந்தப் புத்தகம் இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர்களான பிஷன் சிங் பேடி, பி.சந்திரசேகர், எரப்பள்ளி பிரசன்னா மற்றும் எஸ்.வெங்கட்ராகவன் ஆகியோரைப் பற்றியது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மைக் கேட்டிங் இந்த விழாவில் கலந்து கொண்டார். பின்னர் பேசிய அவர், இந்திய அணித் தலைவர் விராட் ஹோலியை புகழ்ந்து தள்ளினார்.

அவர் கூறுகையில், 'ஐ.சி.சி. கிரிக்கெட் துடுப்பாட்ட த்ரவரிசையில் ஒருநாள் மற்றும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலி முதல் இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

இருவித போட்டிகளிலும் சராசரி 50 இற்கும் மேல் வைத்துள்ளார். அவர் கிரிக்கெட் விளையாட்டின் மீது கொண்டுள்ள தீராத தாகத்தினால் அவருக்கு கிரிக்கெட் உலகையும் தாண்டி ரசிகர்கள் உருவாகியுள்ளார்கள்.

ஒருநாள், டெஸ்ட் மற்றும் 20 ஓவர் என மூன்று விதமான கிரிக்கெட் போட்டிகளிலும் நிலைத்தன்மையோடு விளையாடுவதில் அவருக்கு நிகர் யாரும் இல்லை. நியூசிலாந்து வீரர் கேன் வில்லியம்சன் மற்றும் அவுஸ்திரேலிய வீரர் ஸ்டீவ் ஸ்மித் இருவரும் விராட் ஹோலிக்கு இணையாக விளையாடி வருகின்றனர். (க)

# வைத்தியசாலையில் ரெய்னா அதிர்ச்சியில் உறைந்த ரசிகர்கள்

இந்திய அணியின் கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னா, முழங்காலில் அறுவை சிகிச்சை செய்து கொண்டு வைத்தியசாலையில் இருக்கும் புகைப்படம் இணையத்தில் வெளியாகியுள்ளது.

இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரராக திகழந்த சுரேஸ் ரெய்னா கடந்த 2 ஆண்டுகளாகவே காயம், உடல் தகுதியின்மை, ஃபார்ம் அவுட் போன்ற காரணங்களால் அணியில் இடம் பிடிக்க முடியாமல் அவஸ்தையடைந்து வருகிறார்.

இதனால் உள்ளூர் போட்டியான ஐ.பி.எல். போட்டியில் சென்னை அணிக்காக மட்டும் விளையாடி வருகிறார்.

இந்த நிலையில் நீண்ட நாட்களாக முழங்கால் பிரச்சினையால் அவஸ்தையடைந்து வந்த சுரேஷ் ரெய்னாவிற்கு, ஆம்ஸ்டர்டாம் நகரில் உள்ள வைத்தியசாலையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

மேலும் 4 அல்லது 6 வாரங்கள் வரை அவர் ஓய்வு எடுக்க வேண்டும் எனவும் மருத்துவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (க)

# பொதுஜன பெரமுனவின் மாநாட்டில் கலந்துகொள்ள சுதந்திரக்கட்சிக்கு அழைப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இம்மாநாட்டுக்கு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவினால் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய, தான் உள்ளிட்ட சுதந்திரக் கட்சியின் 15 உறுப்பினர்கள் அடங்கிய குழு இம்மாநாட்டில் பங்கேற்கவுள்ளதாக குறிப்பிட்டார். இதனிடையே, குறித்த மாநாட்டில் பங்கேற்பதற்காக தங்களது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதும், அதில் பங்கேற்பதில்லை எனத் தீர்மானித்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் இதுவரை இணக்கப்பாடு ஏற்படாத காரணத்தினால், தற்போதைய நிலையில் எதிர்க்கட்சியின் மாநாட்டில் பங்கேற்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் குறித்த அறிவிப்பு இன்று நடைபெறவுள்ள குறித்த மாநாட்டில் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வவுனியா மாண...

யில் குறித்த இருவரும் சடலங்களாகவே மீட்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் வவுனியா,. கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த த.ஜங்கரன் (வயது 20) மற்றும் வவுனியா விபுலானந்தா கல்லூரியைச் சேர்ந்த மாணவனான உ.கிசாளன் (வயது 16) ஆகிய இருவருமே மரணமடைந்தவர்களாவர்.

மரணமடைந்த இருவரது சடலங்களும் நிலாவெளி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை நிலாவெளிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-250)

## பாரவூர்தி குடை...

சாய்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாரவூர்தியில் ஏற்பட்ட தொழில் நுட்ப கோளாறு காரணமாக நேற்று சனிக்கிழமை காலை இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் 35 வயதுடைய பாரவூர்தியின் சாரதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் குறித்து முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-281)

## வடக்கில் பலத்த...

னார், திருகோணமலை, புத்தளம், குருநாகல், அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 50 - 55 கிலோ மீற்றரை விட அதிகரிக்கும் என்று சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடற்பரப்புக்களில் கொழும்பு தொடக்கம் மன்னாருக்கூடாக புத்தளம், அம்பாந்தோட்டை தொடக்கம் பொத்துவில் வரை காற்றின் வேகமானது மணிக்கு 50 - 60 கிலோ மீற்றராக அதிகரிக்கக் கூடும். இதன் போது குறித்த கடற்பரப்பு கொந்தழிப்பாகக் காணப்படும். இதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

மேலும் மேற்கு, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் 75 மில்லி மீற்றருக்கும் மேற்பட்ட மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும். வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் (குறிப்பாக பிற்பகலிலும் இரவிலும்) காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரையும் அதிகரித்து வீசக் கூடும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் அடிக்கடி மழை பெய்யக் கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ம-3)

## எமது நாட்டு அரசியல் இடம்பெறு...

வருவதாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை தென்மராட்சி - மந்துவில் பகுதியில் இடம்பெற்ற மாதிரிக் கிராம கையளிப்பு நிகழ்வின் போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தார். மேலும் அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

இந்தக் காலத்தில் சிலர் உங்களுக்கு அரசியல் சம்பந்தமான பிஸ்கெட் வழங்குவதற்கு வருவார்கள். பிஸ்கட் பகிரக்கூடிய அரசியல்வாதி நான் அல்ல. என் தந்தை வாழ்ந்த காலத்தில் ஏழ்மையாகத் தான் வாழ்ந்தவர். எளிமையாக இருந்து ஜனாதிபதி கதிரையைச் சென்றடைந்தவர் எனது தந்தை ரணசிங்க பிரேமதாச. எனவே ஏழ்மை பற்றியாரும் எனக்கு ரியூசன் கிளாஸ் எடுக்க வேண்டிய தேவை இல்லை. ஏனென்றால் ஏழ்மை பற்றி நன்கு தெரிந்தவன் நான். நாட்டில் மக்களுக்கு என்ன அபிவிருத்தி செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், அபிவிருத்தியை எப்படி மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும், எந்த சந்தர்ப்பத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இதற்கு யாருடைய உதவியும் எனக்கு தேவைப்படாது. எங்களுக்கு நீங்கள் ஆதரவு வழங்கும் போது நீங்கள் சொந்தக் காலில் நின்று உங்கள் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த சந்தர்ப்பம் வழங்கியுள்ளோம். சமத்துவம் மற்றும் சமாதானமாய் எவரது உதவியும் இன்றி வாழும் சந்தர்ப்பத்தை நான் உங்களுக்கு வழங்கியுள்ளேன் என்றார். (ம-30)

## எதிரணி வேட்பாளரை தோற்கடி...

அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான சர்ச்சை, நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் தெரிவித்துள்ள அவர், எமது தரப்பில் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க பலர் உள்ளனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கருஜயசூரிய, பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா என பலர் உள்ளனர்.

எதிரணி வேட்பாளரை தோற்கடிக்கக் கூடிய, பலமிக்க ஒருவரையே நாம் வேட்பாளராக களமிறக்க தீர்மானித்துள்ளோம்.

அதேநேரம், எமது தரப்பிலிருந்து சிலர் தற்போது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை சென்று சந்தித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அவர்கள் செல்வதில் தவறில்லை என்பதுவே எமது கருத்தாகும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எத்தனை பேர் சென்று கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்தார்கள் என தனக்கு தெரியாதென்று அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

தமக்கு அரசியல் ரீதியாக எதிரிகள் இருந்தாலும், யாரும் தமக்கு தனிப்பட்ட ரீதியாக எதிரிகளாக செயற்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, ஐக்கிய தேசியக் கட்சிக்கு தேவைப்படும் வேட்பாளரை அன்றி, நாட்டுக்கு தேவைப்படும் வேட்பாளரையே ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-3)

## யாழ்.பல்கலை மாண...

சரியான நேரத்தில் தமிழ் மக்கள் பேரவை பொது அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் நடத்துகின்ற எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது பரிபூரணமான ஆதரவை வழங்கும் என்பதுடன் பேரணியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முழுமையாக கலந்து கொள்வர்.

இவ்வாறு நேற்று நடைபெற்ற பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் பவிலராஜ் தெரிவித்தார். (ம-10)

## கோத்தபாய ராஜ...

தேசிய மாநாட்டின் தொடக்கத்தில், கட்சியின் தலைமை பதவியை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் யாப்பில், கட்சியின் தலைவரே பெரமுன தலைமையிலான கூட்டணியின் தலைவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இன்று பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் தலைமை பதவியையும் மகிந்த ராஜபக்ச ஏற்றுக்கொள்வார் என பெரமுன பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதன்பின்னர், பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரை மகிந்த ராஜபக்ஷ அறிவிப்பார். கோத்தபாய ராஜபக்சவே பெரமுனவின் வேட்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பெரமுனவின் தலைமை பதவியை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டால், எதிர்க்கட்சி தலைவர் பதவியை இழக்க வேண்டி ஏற்படலாம். (ம-3)

## எழுக தமிழ் எழுச்...

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஐம்பதுக்கும் மேற்பட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் தமிழ் மக்கள் பேரவையின் உறுப்பினர்களும் கலந்து கொண்ட இக் கூட்டத்தில், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை நடத்துவது என முடிவெடுக்கப்பட்டதுடன் இதற்கென பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளடங்கிய ஏற்பாட்டுக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

ஐ.நா பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாக இருக்கின்ற நிலையில், ஈழத்தமிழ் மக்களின் அவலத்தையும் தமிழ் மக்களின் இருப்புக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தையும் வெளிப்படுத்துவதுடன் ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தமிழர் தாயகம் தழுவியதாக எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை யாழ்ப்பாணத்தில் நடத்துவதெனவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை தமிழ் மக்களின் நலன் சார்ந்த இப் பேரணிக்கு கட்சி பேதமின்றி அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் நேற்றைய கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (ம-10)


அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 696 வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.08.10
விசேட இலக்கம் 7289
வெற்றி இலக்கங்கள் 33 43 50 52
ஆங்கில எழுத்து V

சனிதா
சீட்டிழுப்பு இல: 3220 வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.08.10
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 55,462,495/-
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து போனஸ் இலக்கம்
05 11 21 74 C 22

ராசி
திகதி 10/08/2019 வெற்றி வாரம் 2582 வர்ணம் இளநீலம்
வெற்றி இலக்கங்கள் 28 32 46 50 இடபம்
ரூ.500 பரிசுக்காக 4765
ரூ.100 பரிசுக்காக 976
டபள் சான்ஸ் விசேட இல.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1020
சீட்டிழுப்பு திகதி 10/08/2019 நீலம்
M 16 21 28 68
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 10-08-2019
சீட்டிழுப்பு இலக்கம் 964
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 8 4 1 8 9 0
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.08.10
சீட்டிழுப்பு இலக்கம் 2205
ஆங்கில எழுத்து E
வெல்லப்பட்ட இலக்கங்கள் 12 42 45 75
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/08/10
சீட்டிழுப்பு இலக்கம் 3979
ஆங்கில எழுத்து U
வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 6 4 9 9 2
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
திகதி 2019/08/10
சீட்டிழுப்பு இலக்கம் 1450
எழுத்து 03
வெற்றி இலக்கம் 14 22 29 51 26 66
தேசிய லொத்தர் சபை

# ஐ.தே.கட்சி தனியாட்சி அமைத்தவுடன் இலங்கை மக்கள் அனைவரும் சமமாகவே மதிக்கப்படுவர்

## யாழில் அமைச்சர் சஜித் பிரேமதாஸ



(சாவகச்சேரி)

எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தனியாட்சிக்கு வந்தவுடன் நாட்டு மக்கள் அனைவரும் சமமாக மதிக்கப்படுவார்கள் என வீடமைப்பு நிர்மானத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ யாழில் வைத்து தெரிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை தென்மராட்சி மந்துவில் பகுதியில் இடம்பெற்ற மாதிரிக் கிராம கையளிப்பு நிகழ்வின்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அவர் இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எமது நாட்டு அரசியல் யாப்பின் பிரகாரம் யாவரும் சமமானவர்கள். நாட்டு மக்களுக்கு அபிவிருத்தி, நலத்திட்டம் மற்றும் வேலை வாய்ப்புக்கள் போன்றன எந்தவித பிரிவினையும் இன்றி சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

நாட்டில் தற்போது சில பாகங்களில் கல்வி, சுகாதாரம், போசாக்கு, பொருளாதாரம் மற்றும் தொழில் வாய்ப்பில் பாகுபாடுகள் காட்டப்படுகின்றன.

வடக்கு, கிழக்கில் மாத்திரம் அல்ல வேறு சில பகுதிகளிலும் இந்தப் பாகுபாடு காட்டப்படுகிறது.

அரசியல் யாப்பின்படி அனைவரும் சமம் என்ற நிலைமையை எங்கள் தனியாட்சி வந்தவுடன் பெற்றுத் தருவேன் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (ம-3.10.30)

# பொலிஸ் பொறுப்பதிகாரிகள் 49 பேருக்கு இடமாற்றம்

பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் 9 பேர் உட்பட 49 பொலிஸ் அதிகாரிகளுக்கு இட்மாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த இடமாற்றங்களில் உதவிப் பொலிஸ்மா அதிபர்கள் 9 பேர், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர், பொலிஸ் அதிகாரிகள் 10 பேர் இடம் மாற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன், உதவி பொலிஸ் அதிகாரிகள் 12 பேர், பிரதான பொலிஸ் கண்காணிப்பு அதிகாரிகள் 9 பேர் மற்றும் பொலிஸ் கண்காணிப்பு அதிகாரிகள் 8 பேரும் இந்த இடமாற்றத்தில் உள்ளடங்குகின்றனர்.

தேசிய பொலிஸ் ஆணையகத்தின் அனுமதியுடன் இந்த இடமாற்றங்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

# எரிபொருள் விலைச்சூத்திரம் 13ம் திகதி

(கொழும்பு)

எரிபொருள் விலைச்சூத்திரக்குழு எதிர் வரும் 13ஆம் திகதி கூடவுள்ளது.

அன்றைய தினம் எரிபொருள் விலைத் திருத்தம் தொடர்பில் தீர்மானிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மாதாந்தம் 10ஆம் திகதி விலைச் சூத்திரக்குழு கூடி எரிபொருள் விலைத்திருத்தம் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

### ஜனாதிபதி மைத்திரியுடன்

# கோத்தபாய ராஜபக்ஷ அடுத்த வாரம் சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு இடம்பெறவுள்ளது.

தற்போது கம்போடியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி நாடு திரும்புகின்ற நிலையில் அடுத்த வார மளவில் இந்த சந்திப்பு இடம்பெறும் என தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதிக்கும், எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றிருந்தது.

இச்சந்திப்பில் ஜனாதிபதித் தேர்தல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்தகட்ட செயற்பாடுகள் தொடர்பாக இரு தரப்பினரிடையே கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

இதன்போது, மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் குறித்து ஜனாதிபதி - கோத்தபாயவின் சந்திப்பில் அவதானம் செலுத்தப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் யார் என்பது குறித்த அறிவிப்பு இன்று இடம்பெறவுள்ள கட்சியின் தேசிய மாநாட்டில் அறிவிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் பெரமுன சார்பில் கோத்தபாய ராஜபக்ஷ வேட்பாளராக களமிறக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


**வேலைக்கு ஆட்கள் தேவை**

நல்லூரில் இயங்கும் இனிப்பு தொழிற்சாலைக்கு வேலைக்கு பெண்கள் தேவை. (9861)

தொடர்பு: 0779693210

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்.மாநகர எல்லைக்குள் கல்வி நிலையம் ஒன்றுக்கான வீடு வாடகைக்குத் தேவை.

கனேஷ் (9862)

077 613 1358

**பிரத்தியேக வகுப்புக்கள்**

இணைந்த கணித, கணித வகுப்புக்கள் A/L 2020, 2021 இணைந்த கணிதம் மற்றும் Grade 11 கணிதம் என்பன தனியாகவோ or குழுவாகவோ கற்பிக்கப்படும்.

077 488 0107 (9856)

**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS (C-7197)

0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

V2 TRAVELS

**A/L கணக்கீடு (Accounting)**

(பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்)

MCQற்கு தனிப்பிரிவு
12.08.2019 திங்கள் காலை 7.00
A/L 2020 பங்குடமை, LKAS, கம்பனி
A/L 2020 - ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
MCQ சிறப்பு V.S குமரன் (கணக்கீட்டு வளவாளர்)

AAT கல்வி நிலையம்

கந்தரோடை வீதி, சுன்னாகம். (9858)

**வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-7205)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

**வேலைவாய்ப்பு**

Everest நிறுவனத்தினால் புதியதுறை Application Promotion இற்கு A/L படித்த இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

சம்பளம் 750 - 1500 வரை பெற்றுக் கொள்ள முடியும்.

கோரப்படும் ஆவணங்கள்

- தேசிய அடையாள அட்டை
- பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
- சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு

இவ்வருடம் A/L பரீட்சைக்குத் தோற்றுபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

(9847) தொடர்புகளுக்கு:

0771717278, 0776953242

**மாபெரும் மலிவு விற்பனை**

நல்லூர் ஆலய உற்சவத்தினை முன்னிட்டு சகல விதமான புத்தகங்களுக்கும் 10% - 70 % வரையான விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

O/L, A/L கடந்தகால வினாவிடை தொகுப்புகளுக்கு 30% விசேட விலைக்கழிவு (2018ஆம் ஆண்டு உட்பட)

நல்லூர் உற்சவ கால சிறப்பு விற்பனை (நல்லூர் சிவன் கோயிலுக்கு அருகில்)

சாய் லங்கா புத்தகசாலை

இல.02, மருதனார்மடம், சுன்னாகம்.

021 222 4858 / 077 185 6010 வைபர் – 077 502 7767 (C-7210)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 229

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 11.08.2019 தொலைபேசி : 021 222 3378

## எழுக தமிழ் - 2019

## செப்டெம்பர் 16







## வடக்கிற்கு அடிக்கடி வரும் சஜித்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

வாத்தியார் வைத்திலிங்கம் வழமைபோன்று கவலையுடன் காணப்பட்டார்.

இதனை அவதானித்த கங்காணி கார்த்திகேயன் என்ன வாத்தியார் ஒரு மாதிரியாக இருக்கிறியள்.

கங்காணியின் கேள்வி அனைவரது கண்களையும் வாத்தியார் பக்கம் திருப்பியது.

நிலைமையை உணர்ந்து கொண்ட வாத்தியார் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:** எனக்கென்ன கவலை எல்லாம் எங்கட சமயத்தை நினைத்துத்தான். சிவபூமி என்று போற்றப்பட்ட இலங்கைத் திருநாட்டில் இப்ப சைவசமயம் மற்றவர்களின்ர காலில கிடந்து மிதிபடுகுது. இதுதான் கவலை.

வாத்தியார் கூறியதைப் புரிந்துகொள்ள முடியாத சாத்திரியார் என்ன வாத்தியார் சொல்லுறியள் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களன்.

**வாத்தியார்:** சாத்திரியார் மன்னாரில திருக்கேதீச்சர ஆலயத்தின்ர வளைவைத் தள்ளிவீழ்த்தி நந்திக் கொடியை சப்பாத்துக் காலால மிதிச்சினம். திருகோணமலை கன்னியாவில தென்கயிலை ஆதீன குருமுதல்வர் மீது சுடுநீர் ஊற்றிச்சினம். இப்படியே எங்கட சைவசமயத்தை கண்டவன் நிண்டவன் எல்லாம் தூற்றுகிற அளவுக்கு நிலைமை வந்திட்டுது. இதை நினைத்தால் தான் கவலை.

**சிறாப்பர்:** அதுதானே! நல்லை ஆதீனத்தில பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து திருக்கேதீச்சர வளைவை அமைத்துத் தாறது எண்டு சொல்லிப் போட்டாராம்.

**விதானையார்:** அந்த சந்திப்பில எத்தனையோ இந்து அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எண்ட குற்றச்சாட்டும் இருக்குது. அதிலும் இந்து மாமன்றத்தின்ர கூட்டத்தில பங்குபற்றின கனபேருக்கு ஆதீனத்தில நடந்த சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையாம்.

**கங்காணி:** அப்படி



## அரசியல்வாதிகளுடனான ஆதீன சந்திப்பிற்கு அழைப்பில்லை

அழைப்பு விடுக்கப்படவில்லை எண்டால் அவையள் போடு தடியள் எண்டதுதானே பொருள்.

**மூப்பர்:** கங்காணியார் என்ன சொல்லுறியள்.

**கங்காணி:** இந்து மாமன்றத்தில நடந்த திருக்கேதீச்சர வளைவு குறித்த கூட்டத்தில கலந்து கொண்ட சமய அமைப்புகளின்ர பிரதிநிதிகளில யாருக்கெல்லாம் ஆதீனக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்படவில்லையோ அவையள் எல்லாரும் கச்சேரியில சல்லாரியும் சுருதிப் பெட்டியும் இசைக்கிற வியளாக்கும்.

**பண்டிதர்:** அப்ப மன்னார் திருக்கேதீச்சர ஆலய பரிபாலன சபையும் இந்தக் கற்றக்கரிக்குள்ள தான் வருமோ?

(பண்டிதர் இவ்வாறு கூறியதும் ஆலடியில் இருந்தவர்கள் அனைவரும் திகைத்தனர். என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள். விதானையார் வினவினார்).

**பண்டிதர்:** மன்னார் திருக்கேதீச்சர வளைவு பற்றியும் கதைக்கிற ஆதீனச் சந்திப்பில மன்னார் திருக்கேதீச்சரத்து ஆலய பரிபாலன சபையினருக்கு எந்தத் தகவலும் தெரியாதாம்.

**சாத்திரியார்:** இதென்ன நாசமறுப்பு. பிரச்சினையோட சம்பந்தப்பட்டவர்களை ஓரங்கட்டிவிட்டு திருக்கேதீச்சர வளைவு பற்றி ஆதீனத்தில அரசியல் சந்திப்பு நடத்திறதெண்டால் மன்னார் திருக்கேதீச்சர ஆலய பரிபாலனசபைக்கு எதிராக அரசியல் சதித்திட்டம் நடக்கப்போகுது என்பது தானே பொருள்.

**வாத்தியார்:** அது மட்டுமல்ல மன்னார் திருக்கேதீச்சரம் நுழைவு வாயில் வளைவு, கன்னியா வெந்நீரூற்று விவகாரங்களோட இந்து அமைப்புக்கள் ஒன்றுபட்டினம். இந்த எழுச்சியோட அரசியல் மாற்றங்கள் நடந்து விடுமோ என்று பயந்தபோது, இந்து அமைப்புக்களின்ர ஒற்றுமையை உடைத்து விடுகிற மிக முக்கியமான முயற்சி தான் ஆதீன சந்திப்பு.

**பண்டிதர்:** வாத்தியார் சொல்லுறது நூறுவீதம் உண்மை. இனி சைவசமயத்திற்கு எதிராக சதி நடந்து அது தொடர்பில சைவ சமய அமைப்புக்களை அழைத்தால் ஆரும் வருவினமோ? அப்ப எங்கட சமய எழுச்சியை ஒரு மாதிரியாக உடைத்துப் போட்டினம்தானே.

**மூப்பர்:** பண்டிதர் ஐயா! ஏதோ தமிழ் அரசியல்வாதிகள் மூலமாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்கிறதும் நல்லது தானே!.

**பண்டிதர்:** மூப்பர் நீங்கள் சொல்லுறது நூறு வீதம் உண்மை. ஆனால் அதற்குரிய சந்தர்ப்பங்களை தமிழ் அரசியல்வாதிகள் தவறவிட்டிட்டினம். மன்னார் வளைவு உடைத்த அடுத்தகணம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மன்னாருக்குச் சென்று ஒரு சமரசத்தைச் செய்திருந்தால் அதை வரவேற்கலாம். அல்லது கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில தென்கயிலை ஆதீன சுவாமிகள் மீது சுடுநீர் ஊற்றிய போது தமிழ் எம்.பிக்கள் கொதித் தெழுந்து குய்யோ முறையோ என்று கோசம் போட்டிருந்தால் அதை ஏற்றிருக்கலாம்.


இதைவிடுத்து அமைச்சர் மனோ கணேசன் ஓடித்திரிந்து நடவடிக்கை எடுக்க, எங்கட கலாநிதி ஆறு.திருமுருகன் இந்து சமய அமைப்புக்களை கூட்டி ஒரு புதுவியூகம் அமைக்க, மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா அங்கங்க குரல் கொடுக்க, இந்து மகாசபை போராட்டம் நடத்த எல்லாவற்றுக்கும் மேலாக மன்னார் திருக்கேதீச்சர ஆலய பரிபாலனசபை மிகவும் உணர்வுபூர்வமாக சிந்தித்து வளைவு வைப்பதற்கான கடும் முயற்சிகளை பல பக்கத்தாலும் எடுக்க, எங்கட தென்கயிலை ஆதீன சுவாமி தனிமனிதராக நின்று போராட

மன்னார் மாவட்டத்தில உள்ள திருக்கேதீச்சர ஆலய பரிபாலன சபைக்கு அறிவிக்காமல், அந்த அமைப்புக்குத் தெரியாமல் யாழ்.மாவட்டத்தில நல்லை ஆதீனத்தில அரசியல் வாதிகளோட, அழைக்கப்பட்ட சைவசமயம் சார்ந்த சில அமைப்புக்கள் சந்திப்பு நடத்துகினம் எண்டால் மன்னார், யாழ்ப்பாணம் என்ற பிரதேச வாதத்தை ஏற்படுத்தி சைவசமய ஒற்றுமையைக் குழப்பிறது தானே அதின்ர நோக்கம் என்று பண்டிதர் கோபத்துடன் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# வாக்குறுதி தருபவர்கள் புத்தபிரானின் திருவடிகளில் சத்தியம் செய்வரா?






2019, 2020 ஆம் ஆண்டுகள் தேர்தல் விளம்பரங்களால் அலங்கரிக்கப்படவுள்ள ஆண்டுகள் என்று விதந்துரைக்க முடியும்.

ஆம், 2019 இறுதிப்பகுதியும் 2020 ஆம் ஆண்டின் முழுப் பகுதியையும் உள்ளடக்கி முக்கியமான மூன்று தேர்தல்களை நாடு சந்திக்கவுள்ளது.

இம்மூன்று தேர்தல்களையும் நடத்துவதற்குத் தேர்தல் திணைக்களம் தயாராகியுள்ள நிலையில், 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்காக நாட்டின் பிரதான கட்சிகள் தயாராகிவிட்ட நிலையில், அணி சேர்ந்து தேர்தல் களத்தில் இறங்கவும் வெற்றியைத் தமதாக்கவுமான வியூகங்கள் நடந்தவண்ணமுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் யார் ஜனாதிபதி? என்பதைத் தீர்மானிப்பதில் இரு பிரதான காரணிகள் உள்ளன. அதில் இந்த நாட்டின் சிறுபான்மை இனங்கள் என்று அடிக்கடி உச்சரிக்கப்படும் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் முக்கியமானவை.

அடுத்து வெளிநாடுகளின் விருப்பு நிலை. அதாவது இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார்? என்பதைத் தீர்மானிப்பதில் அண்டை நாடான இந்தியாவும் அமெரிக்காவும் மறைமுகமான வகிபாகத்தைக் கொண்டுள்ளன.

ஆக, ஜனாதிபதித் தேர்தலில் மேற்போந்த இருதரப்பு ஆசியும் யாருக்குக் கிடைக்கிறதோ அவர் ஜனாதிபதியாகக் கூடிய வாய்ப்பு அதிகம்.

எது எவ்வாறாயினும், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியைத் தமதாக்க வேண்டுமென்ற வெறித்தனம் முன்னெப்போதும் இல்லாதளவில் தாண்டவமாடும் என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இங்கு ஜனாதிபுதித் தேர்தல் முடிவுகள்; தொடர்ந்து நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் கடுமையான செல்வாக்கைச் செலுத்தும் என்பது நிறுதிட்டமான உண்மை.

சிலவேளையில் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு பொதுத் தேர்தலைச் சந்திப்பதற்கான சூழமைவுகளும் ஏற்படலாம்.

எது எவ்வாறாயினும், ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை இனங்கள் வாக்களிக்கும் உரிமையைக் கொண்டுள்ளனவேயன்றி அவை தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறுவதற்கான உரிமையைக் கொண்டவையல்ல.

அதாவது சிறுபான்மை இனத்தவர்கள் ஆசையின் பாற்பட்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம். ஆனால் வெற்றி பெறமுடியாது என்பது எழுதப்படாத விதி.

எனவே, சிறுபான்மை இனமான தமிழ், முஸ்லிம் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது பற்றியே சிந்திக்க முடியும்.

இந்தச் சிந்தனை பலமாக, ஒருமித்ததாக, ஒன்றுபட்டதாக அமையுமாக இருந்தால், இலங்கையின் ஜனாதிபதி யார்? என்பதைத் தீர்மானிக்கின்ற சக்தியாக சிறுபான்மை இனங்கள் தங்களை ஆக்கிக் கொள்ள முடியும்.

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் சிறுபான்மை இனங்களின் வாக்குகள் தவிர்க்கப்படக்கூடியவை அல்ல என்ற உண்மையின் அடிப்படையில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எவரும் சிறுபான்மை மக்களைத் தேடி நாடி ஓடி வருவர் என்பதை மட்டும் அறுதியிட்டுக் கூறமுடியும்.

அதிலும் நான் ஜனாதிபதியாக வந்தால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்ற உறுதிமொழிகளுக்கும் பஞ்சம் இராது என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும். ஆனால் இங்கு பெரும்பான்மை இனத்தின் மரபு மீறப்படாமல் பாதுகாக்கப்படப் போகிறது.

அதாவது, பெரும்பான்மை இனம்சார்ந்தவர்கள் தேர்தல் காலங்களில் எவ்வாறு வாக்குறுதிகளை வழங்கிவிட்டு பின்னர் அவற்றை நிறைவேற்றாமல் கைகழுவி விட்டனரோ அதே மரபு இம்முறையும் பின்பற்றப்படும்.

இங்கு வாக்குறுதிகளை வழங்கியவர்கள் அதனை ஏமாற்ற முடியாதவாறு சிறுபான்மை மக்கள் மிகத் தெளிவான, புத்திசாதுரியமான சில ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும்.

இல்லையேல் அவர்கள் ஏமாற்றுவதும் நாங்கள் ஏமாற்றப்படுவதுமான நிகழ்ச்சிநிரல் எந்தவித மாற்றங்களும் மாறுதல்களும் இல்லாமல் நடந்தாகும்.

இவை ஒருபுறமிருக்க, அடுத்த ஜனாதிபதி யார்? என்பதைத் தீர்மானிக்கின்ற சக்தியாக சிறுபான்மை இனங்கள் இருக்கப்போகின்றன என்ற அடிப்படையில், ஒருமித்த தீர்மானத்தை எடுப்பதே நன்மைதரும் என ஏலவே கூறியிருந்தோம்.

இங்கு ஒருமித்த தீர்மானம் என்பது இரண்டு வகைப்படும். அதில் ஒன்று தமிழ், முஸ்லிம் இனங்களின் ஒருமித்த தீர்மானம். மற்றையது தமிழ் இனத்திற்கும் முஸ்லிம் இனத்திற்குமான ஒற்றுமை.

இங்குதான் ஒரு விடயம் முதன்மை பெறுகிறது. அதாவது முஸ்லிம் மக்கள் எந்த வகையிலும் ஒன்றுபட்டுக் கொள்வர். அதற்கான ஒற்றுமை முஸ்லிம் அரசியல் தரப்பிடம் தாராளமாக இருக்கிறது.

ஆனால் தமிழ் மக்களிடையே இந்த ஒற்றுமையை ஏற்படுத்த முடியுமா? என்றால் அதுவே மிகக் கடினமான காரியமாக இருக்கும். ஆம், தமிழ் அரசியல் தரப்புகள் தமக்கிடையே ஒற்றுமையின்றி அங்கும் இங்குமாகச் சிதறுண்டு நிற்கின்ற நிலை யில், ஜனாதிபதித் தேர்தலில் ஒருமித்து எங்கள் வாக்குகளை அளிப்போம் என்றவாறு ஒற்றுமைக்கு வருவதென்பதில் தமிழினம் சிக்கல்படவே செய்யும். இங்குதான் தமிழினத்தின் பலவீனம் மீண்டும் மீண்டும் அந்த இனத்தை துன்பக்கடலில் வீழ்த்தப் போகிறது.

**விதுரன்**




# மனம் மலரட்டும்

ஒரு விடயத்தில் நல்லதும் கெட்டதும் கலந்திருக்கும் பட்சத்தில் தீயதை தள்ளிவிட்டு நல்லதை மட்டுமே பார்த்தால் நிம்மதி உண்டு. எனவே தான் நம் பிரார்த்தனையில் எல்லோரும் நல்லதைப் பார்க்கட்டும் என்ற நோக்கில் "பத்திராணி பஸ்யந்து" என்று கூறுகிறோம். அதேபோல் காயத்திரி மந்திரத்தில் முடிவில் "ப்ரசோதயாத்" என ஒரு பதம் உண்டு. இது எல்லோருக்குமாக பிரார்த்தனை செய்வது என பொருள்படும்.

"அஸதோமா சத்கமய என்ற தொடர் வேதமந்திரம்"

அஸத்திலிருந்து சத்திற்கு அழைத்துச் செல்வாயாக எது எப்போதும் இருக்கக்கூடியதாகவும் சத்தியமாகவும் இருக்குமோ எதை இது இப்படித்தான் என்று தெரிந்து கொண்டதும் அது மாறாமல் இருக்குமோ அங்கே என்னை அழைத்துச் செல்வாயாக என்ற கருத்து முதலாவதாக போதிக்கப்படுகின்றது. தம சோமா யோதிர்கமய என்றால் இருளாகிய அறியாமையில் இருந்து என்னை ஒளிக்கு அழைத்துச் செல்வாயாக எனப்பொருள்.

கோவிலில் கருவறையில் ஒளியைக் காட்டுவதன் நோக்கம் இது தான். குரு உபதேசத்தால் தன்னைப்பற்றிய அறியாமையையும் ஈசனைப்பற்றிய அறியாமையையும் நீக்கி தானும் கரைந்து விடுகிறது என்பதை உணர்த்தவே கற்பூர ஜோதி.

இப்படியான மந்திரங்களை உள்ளார்த்தம் அறிந்து அனுதினமும் சொல்லி பிரார்த்தித்து வந்தால் ஞானம் புலப்படும், மனம் மலரும். மேலும் பெரியோர்களும் ஞான நூல்களும் நமக்கு வழிகாட்டியிருக்கிறார்கள். யோகம் பயிலச் சொல்லி அத்துடன் மனதுக்கு சாந்தி அருளும் விடயங்களை கடைப்பிடித்தாக வேண்டும். விரிந்த வானத்தை, பரந்த சமுத்திரத்தை பார்த்து அதை கற்பனை செய்யும் போது நம்மனமும் விரியும். மலைச்சிகரங்களை, வானத்தை நாம் மாற்ற முயல்வதில்லை. அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்கிறோம். அதனால் எமக்கு சாந்தி ஏற்படுகின்றது. சாந்தி நம் சுபாவம். அது ஒன்றும் புதிதாக ஏற்படக்கூடியதில்லை. அது ஏற்கனவே நமக்குள் இருப்பது தான். சிகரங்களையும் சமுத்திரங்களையும் அப்படியே நாம் ஏற்றுக் கொள்வது போல் சக மனிதர்களையும் அப்படியே ஏற்றுக்கொண்டால் சாந்தி கெடாமல் இருக்கும்.

அவர்கள் அப்படித்தான். நான் அவர்களை எனக்குள் வைக்கவில்லை. வெளியில் இருக்கட்டும். என் மனதுக்குள் புகுந்து சலனத்தை ஏற்படுத்த முடியாது என்று தீர்மானியுங்கள். தினமும் காலையில் தியானம் செய்யுங்கள். உங்கள் மனதைச் சுமையாக்கி விடும் எல்லோரையும் வெளியில் எடுத்து வைத்துவிட்டு சாந்தியை உணருங்கள்.

எல்லோரும் நல்லவர்களே. நாம் யாரையும் கெட்டவர் என்று தீர்மானிக்க வேண்டாம். அவர்களுக்கு நீங்கள் மூன்று விடயங்களைத் தந்தால் போதும் மனசாந்தி நிச்சயம். அவை-அன்பு-பாசம்-கவனம்

மனம் மலரட்டும்

**-சிவனடியான்-**

# விடுகதைகளும் விடைகளும்

- ஒற்றைக் கால் மனிதனுக்கு ஒன்பது கை. அது என்ன?

**மரம்**

- கிளைகள் உண்டு. ஆனால் இலைகள் கிடையாது. அது என்ன?

**மான் கொம்பு**

- சிறகடிக்காத பறவை. ஊர் ஊராய் பறக்கும். அது என்ன?

**விமானம்**

- காவல் காக்கும், ஆனால் நாயல்ல. காலை கடிக்கும், ஆனால் செருப்பல்ல. அது என்ன?

**முள் செடி**

- ஒளி தரும்-விளக்கல்ல, வெப்பம் தரும்-நெருப்பல்ல, பளபளக்கும்-தங்கம் அல்ல. அது என்ன?

**சூரியன்**

- கண்ணுக்குள் இருப்பவன் கவலைக்கும் மகிழ்ச்சிக்கும் எட்டிப் பார்ப்பான். அவன் யார்?

**கண்ணீர்**

# கிணற்றைத்தானே விற்றேன்!



ஒருவன் தனது கிணற்றை ஒரு விவசாயிக்கு விற்றான். வாங்கிய விவசாயி அடுத்த நாள் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க ஆவலுடன் கிணற்றுக்கு வந்தான்.

அப்போது விற்றவன் அங்கே நின்று கொண்டிருந்தான். விவசாயியை தண்ணீர் எடுக்க விடாமல் தடுத்தான்.

விவசாயிக்குக் கோபம் வந்தது. "எனக்குக் கிணற்றை விற்று விட்டு அதிலிருந்து தண்ணீர் எடுக்க விடாமல் செய்கிறாயே?" என்று விற்றவனை கோபத்துடன் கேட்டான்.

விற்றவன் "ஐயா! உமக்கு நான் கிணற்றை மட்டும்தான் விற்றேன். அதிலிருக்கும் தண்ணீரை அல்லவே!!" என்று தர்க்கம் செய்தான்.

விவசாயி குழப்பத்துடனும் கோபத்துடனும் காஜியிடம் (நீதிபதியிடம்) சென்று முறையிட்டான்.

நீதிபதி இருவரையும்அழைத்து இருவர் பக்கத்து நியாயத்தையும் விசாரித்தார். பின்னர் கிணற்றை விற்றவனிடம் "நீ கிணற்றை விற்று விட்டபடியால் அது உன்னுடையதல்ல. அதில் உனது தண்ணீரை இன்னமும் வைத்திருப்பது தவறு. உனக்கு அதில்தான் தண்ணீரை சேமித்து வைக்க வேண்டுமென்றால் விவசாயிக்கு அதற்கான வாடகையை தினமும் கொடுத்து விடு. இல்லையென்றால் கிணற்றிலிருந்து உனது தண்ணீரை எடுத்துக் கொண்டு உடனே வெளியேறு" என்று தீர்ப்புக் கூறினார். விற்றவன் தலையைக்குனிந்து கொண்டே, தனது தவறுக்கு மன்னிப்புக் கோரி விட்டு, விவசாயியை கிணற்றின் முழுப் பலனையும் அனுபவிக்கச் சொல்லி விட்டு, அங்கிருந்து சென்று விட்டான்.












## அஜித்தின் நேர்கொண்ட பார்வை படம் எப்படி?

**சசி** — **மானிப்பாய்**

**வியாசரே உங்களுக்கு கனவுகள் என்று ஏதும் உண்டோ?**

எனக்கு என தனிப்பட்ட கனவு என்று ஏதுமில்லை. ஆனால் எம் தமிழருக்கு தீர்வு வருகிறது வருகிறது என்று சொல்லிச் சொல்லி ஏமாற்றுபவர்களை கட்டி வைத்து வெளுப்பது போல பல தடவைகள் கனவு கண்டுவிட்டேன்.

அதிலும் நேற்று இரவு எனது கனவில் மாட்டியவரை கொஞ்சம் வித்தியாசமான முறையில் விசாரணை செய்து வெளுத்தேன்.

அப்பப்பா ஆரம்பத்தில் வாய்திறக்கவே இல்லை. நாலு சாத்து சாத்தியபின் வாழைப்பழம் போல வார்த்தைகள் வெளியே வந்தன. கோடிக் கதை வருவதற்குள் கனவு கலைந்து விட்டது.

**தனுஷ்** — **வரணி**

**அஜித்தின் நேர்கொண்ட பார்வை படம் எப்படி?**

தற்போதைய சமூகத்திற்கு ஏற்ற கதைக்களம் நேர் கொண்ட பார்வை. அஜித்குமார் ஆரம்பகாலப் படங்களில் பெண்களைத் துரத்தித் துரத்தி காத லிப்பது போல நடித்திருப்பார்.

இப்போது அவர் உச்ச நட்சத்திரமாகிவிட்டார். தனக் கென்று ஒரு தகுதியான இடத்தை தக்க வைத்த பின் இவ்வாறு சமூக அக்கறை கொண்ட படத்தை தேர்ந் தெடுத்து நடிப்பதற்குத் தனித்துணிவு வேண்டும். அந்த துணிவு அஜித்திடம் இருக்கிறது.

பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அதிலி ருந்து அவர்களை எவ்வாறு மீட்டெடுப்பது எனப்படம் முழுவதும் நல்ல செய்தியைச் சொல்லியிருக்கிறார் கள். அதற்கு அஜித் என்ற உச்சநட்சத்திரத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் வாழ்த்துக்கள்.

**சுதன்** — **குப்பிளான்**

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தலைமை யார் பக்கம்?**

அதுதான் ஆற அமர சிந்திக்கப்போகிறார்கள் என்று அறிக்கை விட்டுவிட்டார்களே அதன் பின் ஏன் அவசரப்படுகிறீர்கள்.

ஓ.. பிரதமர் யாரை ஆதரிக்கிறாரோ அவரைத் தான் இவர்களும் ஆதரிப்பார் என்று சொல்ல வருகிறீரோ.

இருக்கலாம். தும்புத்தடி என்றாலும் இவர்களுக்கு வாக்குப் போட மக்கள் தயார் என்றால் அவர் காட்டுவது யாராக இருந்தாலும் ஆதரவு கொடுக்க இவர்களும் தயாராகத் தான் இருப்பார்கள். என்ன டிசைனோ?

**நேதாஜீ** — **வதிரி**

**தமிழ்த் தலைவர்களை குறைகூறுவதற்கு நாம் யார் ஐயா?**

ஓ.. அப்படியா கொடுக்கும் வாக்குறுதியெல்லாம் கொடு ப்பீர்கள். எங்கள் வாக்குகளை பிடுங்கி நீங்கள் பாரா ளுமன்றம் செல்வீர்கள். எமக்குத் தந்த வாக்குறுதி களை காற்றில் பறக்க விட்டுவிட்டு கோடிகளுக்குள் முடங்கிக் கிடப்பீர்கள். ஆனால் உங்களுக்கு வாக்க ளித்த நாங்கள் உங்களைக் கேள்வி கேட்கக் கூடாது இது எந்த ஊர் நியாயமையா?

## புலிகளைப் பிரித்தவர்களுக்கு கூட்டமைப்பைப் பிரிக்கத் தெரியாதா?

**சிவன்** — **இணுவில்**

**மரக்கறிகளின் விலை படுகூடாக இருக்கிறது. சந்தைப் பக்கம் போகவே பயமா இருக்கிறதே?**

பாடுபட்டு தன் வியர்வையை நீராய் பாய்ச்சி உளவு செய்து, பயிர் வளர்த்து அறுவடை செய்ய அதற் குத் தகுந்த விலை கிடைப்பதில்லை. அதனால் விவசாயி ஏழையாகவே வாழ்கிறான். அதை வாங் கும் இடைத்தரகர் மூன்று நான்கு மடங்கு ஏற்றி விற்பனை செய்து கோஷ்வரன் ஆகிறார்.

விவசாயிக்கு விளைச்சலுக்கேற்ப சரியான விலை கிடைக்கவேண்டும். இல்லையேல்சயசந்தை உருவாக் கப்பட வேண்டும். விவசாயியேதனது பொருளைநுகர் வோருக்கு விற்பனை செய்யும் திட்டம் வந்தால் எல்லாம் சரிவரும். விவசாயிகள் வாழ்வும் உயரும்.

**தர்ஷன்** — **யாழ்ப்பாணம்**

**யாரடி நீ மோகினி என்று ஒரு மோகினியைப் பார்த்துக் கேட்க முடியுமா?**

கேட்பதில் ஒன்றும் பிரச்சினை இல்லைத் தம்பி கேட்டு விட்டு நாம் உயிருடன் இருக்க வேண்டுமே அதைச் சிந்திக்க வேண்டும்.

தம்பி யாருடன் வைத்துக் கொண்டாலும் மனைவி யுடன் வைத்துக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் மனைவிகள் அதிகம் உரிமை எடுப்பது கணவனில் தான் கவனம்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**சேவியர்** — **பருத்தித்துறை**

**உலக நாட்டில் இருந்து அனைவரும் தமிழ ருக்கு துரோகம் செய்கிறார்களே ஏன்?**

எடுப்பார்கைப்பிள்ளை என்றுசொல்லுவார்களே அந்த நிலையில் தான் இப்போது தமிழினம் இருக்கிறது. பயங்கரவாதத்தை அழிக்கிறோம் என்ற போர்வை யில்நடந்த இனஒழிப்பிற்கு உலகில்செய்த அத்தனை குண்டுகளையும் எம் தலையில்தானே பரிசோதித்து பார்த்தார்கள். இதைவிடக் கொடுமை வேறேதும் உண்டோ? இன்றுவரை எத்தனை ஐ.நா. அமர்வு கள் நடந்தேறிவிட்டன. தவறுசெய்தவர்கள் தண்டிக்கப் படவில்லை. தட்டிக் கொடுக்கப்படுகிறார்கள். இவர்க ளுக்கு எம் தமிழ்த் தலைமை ஒத்தாசை வழங்குகிறது.

**திகழன்** — **யாக்கரு**

**புலிகளைப் பிரித்தவர்களுக்கு கூட்டமைப்பைப் பிரிக்கத் தெரியாதா?**

இப்போது கூட அரசு என்ன நினைத்து ஆளை அனுப்பி யதோ அதனை அவர் கனகச்சிதமாய் நிறைவேற்றி விட்டார். தமிழருக்கு என்ற இருப்பை, பலத்தை உடைத் தெறிந்து விட்டார் அவர். அவர் வந்த வேலை முடிந்து விட்டது. இனி அவர் ஆளும் கட்சிக்குச் சென்று விடுவார். அவரு க்கான அமைச்சுப் பதவி காத்துக் கொண்டிருக்கிறது.

## யாரடி நீ மோகினி என்று ஒரு மோகினியைப் பார்த்துக் கேட்க முடியுமா?

**தமிழ்** — **யாழ்ப்பாணம்**

**தோல்வி என் வாழ்வைத் துரத்துகிறதே வியாசரே?**

தோல்வி துரத்தும். அதை எதிர்த்து ஓடி வெல்வது தான் வாழ்க்கை. இது பலருக்குப் புரிவதில்லை. தோல்வி வாட்டுகிறது என மனம் வெதும்பி தவறான முடிவுகளை எடுத்து விடுகிறார்கள்.

இன்னும் சிலருக்கு தமக்கு வெற்றி மட்டும்தான் கிடைக்க வேண்டும். தோல்வியே வரக்கூடாது என்று மனதை வைத்திருப்பார்கள்.

இவர்கள் ஒரு சிறிய தோல்வியைக் கூட சகித்துக் கொள்ள முடியாத மனநிலைக்கு வந்து விடுவார் கள். ஒன்றுமட்டும் எம்மால் சொல்ல முடியும். தோல் வியில்லாத வாழ்க்கை உப்பில்லாத உணவு போன் றது. அவ்வளவுதான்.

**கிரி** — **வதிரி**

**ஜனாதிபதித் தேர்தலில் தாங்கள் நிற்கப் போகிறீர்கள் போல?**

அட நாசமறுக்க. நமக்கென்ன தலையெழுத்தோ. சரி அதை விடுவம் ஆற அமர யோசித்து சிந்தித்து, ஆலோசித்து, கலந்துரையாடித்தானாம் யாருக்கு ஆதரவு என்பதை எம் தமிழ்த் தலைமை சொல்லுமாம்.

ஏற்கனவே மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து அவர் எமக்கு அனைத்தையும் பெற்றுத் தருவார் என்று அறிக்கை விட்டு, பின்பு அவரை எதிர்த்து பிரதமருக்குப் பின்னுக்கு நின்றவர்கள் இனியென்ன புதிதாகச் செய்து விடப்போகிறார்கள். ஏதாவது நிகழ்வென்றால் ரிபன் வெட்டத்தான் இவர்களுக்குத் தெரியும்போல.

**கிருஸ்ணா**

**நான் ஒரு பெண்ணை ஐந்து வருடங்களாக காதலிக்கிறேன். இப்போதுதான் தெரிந்தது அவளுக்கு செவ்வாய் தோசமென நான் இப்போ என்ன செய்ய?**

தம்பி மணப்பொருத்தங்களில் முதலானது மனப் பொருத்தம். அந்தப் பொருத்தம் 100 வீதமாக இருந் தால் தோசமாவது மண்ணாங்கட்டியாவது.

அதே செவ்வாய் தோஷம் உன்னை முடிக்கும் என்றால் உங்கள் மனம் என்று பொருந்திக் கொண்டதோ அன்றே நீ முடிந்திருப்பாய். எல்லாம் மனிதனால் வகுக்கப்பட்டதே தவிர வேறு எதுவுமில்லை.

**ஜுபா** — **கரவெட்டி**

**தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலை புறக் கணித்தால் என்ன?**

ஒன்றும் நடக்கப் போவதில்லை. ஏனென்றால் தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனவின் வாக்குறுதிகள் அனைத்தையும் அவ்வளவு நம்பினார்கள். சிங்களத் தலைவர்களின் வாக்குறுதிகளில் அதிகம் நம்பியது மைத்திரிபால சிறிசேனவின் வாக்குறு திகளைத் தான். ஆனால் நடந்தது அதுவல்ல.

சர்வதேச தலையீடு இன்றி இலங்கையில் இனப் பிரச்சினைக்கான தீர்வுகளுக்கு சாத்தியமேது மில்லை.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## போதை ஏறுது பார்

போதை என்பது பொல்லாதது
போகும் பாதை தெரியாதது
போக்கிலியாய் மாற்றிவிடும்
போகாதே அதை நாடி

பொல்லாத உலகத்திலே
போன உயிர் திரும்பி வராது
பொறுமையுடன் அலசிப் பார்
போகும் உயிரை தடுக்க முடியுமா?

தன்னைத் தானே உணர்ந்தால்
தன்மானத்துடன் வாழலாம்
தரணி எங்கும் புகழ்பாடி
தங்க மகனாய் நீ வாழ்வாய்

பணத்தை விரையமாக்கி
பாழாகப் போகிறாய் பார் தம்பி
பார்த்தவர் கண்களெல்லாம்
பரிகாசம் பண்ணுவார்கள்

பெ.தனா, தெல்லிப்பழை

## யாழ்.இன்று

வேண்டாத போதை– ஊழித்
தாண்டவம் ஆடுது
வேண்டுவோம்
ஆண்டவனை– போதை
மாண்டு போக

ஆழ்வார் அனுசரணையில்
அரக்கன் போதை
வீழ்வார் ஒருநாள்
வேரறுந்து போக

திட்டமிட்டு அழிக்கிறார்
திக்கற்ற தமிழர்களை
மட்டமாக்கும் யேசுவே
மாபெரும் சாத்தானை

யாழில் வன்முறை
ஊழிக்காலம் போல்
ஆழி கடந்தோர்
அற்ற குறையா

சிவா, திகிரி ஒழுங்கை,
தும்பளை.



கவிதைக் கலசம்

## சோதனை

நவீனம் இங்கே வளர்ந்திடவே
நலமும் இங்கே குன்றிடுமோ?
வேண்டாம் இங்கே பல்லுயிரென்றே
பலியிடத்தானோ புதுத்திட்டம்

புள்ளினம் கூட திசை தடுமாறுமோ?
புல்பூண்டும் வளர்ந்திட மறுக்குமோ?
வெளியுலகு காண கருவும் இங்கே
கர்ப்பப்பையிலே கரைந்திடுமோ?

காற்றில் திரியும் அலையைப் பிடித்து
கோபுர உச்சியில் ஒன்றாய்த் தொகுத்து
அளவுக்கு மீறி அதிர்வினை சேர்க்க
இனைய அலையின் வேகம் கூட்ட

மெல்லமாய் காற்று அடித்தாலே
மொத்தமாய் சாய்வதாய் கோபுரமோ?
சோதித்துப் பார்க்க இடமா இல்லை
நகரின் மத்தியில் இதுவென்ன சோதனை

த.லக்ஸ்மன், நல்லூர்

## தீண்டல்

நிலைபேறு பிறப்பாக வேண்டும்
நிதம் காதல் புதிதாக தீண்டும்
அலை பீறும் நீராக என்னுள்
அவளென்ற உயிரொன்று ஊறும்
கலையோடு நயம் தீண்டும் பெண்மை
என் கவிதைக்கு கருவான தாய்மை
சிலைபோல நிலையான பெண்மை
என்னைத் தலைகோதி
மடிசாய்ப்பாள் தன்னுள்
கனவோடும் நினைவோடும் என்னுள்
கதைபேசி கரம் தந்தாள் காதல்
மலையோடு முகில் மோதித்தூறும்
மழைபோல என்னுள்ளம் சாரல்
மண்ணீர்த்த மடை நீரைப் போலே
பெண்ணீர்த்த விழி தூரம் தேடல்
புரியாத புதிருக்குள் தினமும்
புதிதாகப் புடம்போட்டாள் தன்னில்
அழியாத அகராதி போலே
அறியாத வரமாகி வந்தாள்
காதல் மொழியாலே
கரம் தொட்ட பாவை

யாழ்.வாகீஷ்

## தள்ளாடும் தமிழினம்

அழிவுகளைச் சந்தித்த இனத்தின்
இருப்புக்கள் இப்போதும்
அழிந்துகொண்டேயிருக்கிறது....

முடிவுகளை எட்ட நினைத்து
முடியாமையை முதுகில் சுமந்து
கூனிக் குறுகிக் கிடக்கிறது
சிரச்சேதத்திற்கு தயாராக....

மடிப்புக்கலையாத உடையுடன்
விடுப்புப் பார்க்கும் சிலர்
எம்மைப் படம் எடுத்து
பாசம் பொழிகிறார் பணமழைக்காக...

தடியடி நடத்தக்கூட
தகுதியற்றவராய் இருப்பவர்
ஒருநாள் வீரத்தின் உச்சியில்
இருந்த இனம் என்பதை
பலர் மறந்து விட்டார் போலும்...

எம்மை நாம் ஆள்வோம் என
கோசம் போட்டு வந்தோர்
வேசம் போட்டு எம்
முதுகில் குத்தியபின்பு
வெள்ளை உடையைக் கண்டால்
வெறுப்பே வருகிறது...

சிலர் கள்ளமில்லா வந்தாலும்
நம்பமுடியாமல் நறுக்கென பேசிவிட
வம்பெதற்கெனச் சென்றுவிடுவது
வெள்ளைகள் மட்டுமல்ல
நல்ல உள்ளத்தவருமே...

இல்லை எமக்குத் தொல்லையென
ஏர்பிடித்து பார்நிமிர்த்த
யாருமில்லையே
இதுவே இன்றைய தமிழனின் நிலை

மாவை. நா. கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 459



## தொண்டு செய்ய

தொண்டு செய்யக்
கொண்டுவந்த பாவம்
கண்டவழி கரையுமாம்
கடமை செய்யும் காளையே
மீண்டு கொடுத்து பூமித்தாயின்
மிகப்பாரம் பங்கேற்றல்
கண்டுளம் மகிழ்ந்தோம்
கடைசிவரை கைக்கொள்

வாகை வளவன்
நாரந்தனை

## சமுதாயக்கடன் தீர்க்கும்

சமுதாயம் சாராவாழ்வு
சாத்தியமா இலவென்றே
அமுதான கொள்கையுள
ஆண்மகனே நின் சேவை
கடன்பட்டாய் நீ சமுதாயக்
கடன் தீர்க்கும் கடமையில்
உடன்பட்ட நின்தொண்டு
உலகம் உனைப் பாராட்டும்

கந்தன் மைந்தன்
காவலூர்

## மனிதவடிவில் கடவுள்

உலகில் கடவுளை நாம்
என்றும் கண்டதில்லை
விபத்தில் சிக்கிய இந்த
மூதாட்டியைக் காப்பாற்ற
துடிக்கும் மனிதா பிறருக்கு
இப்படி உதவும் உன்னைப் போன்ற
மனிதர்கள் வடிவிலேயே நாம்
அந்தக் கடவுளைக் காண்கின்றோம்

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

## நன்றிக் கடன்

உதிரத்தை உணவாக
உனக்களித்துச் சிறிதும்
தன்னலம் கருதாத
உன் அன்புத் தாய்க்கு
உண்ண உணவையும்
தகுந்த பராமரிப்பையும்
உன்னால் கொடுக்க
முடியவில்லையெனில்
உயிர்வாழுமுரிமை
உனக்குச் சிறிதுமில்லை
இதையும் அன்னையின்
அரவணைப்பையும்
என்றென்றும் மறவாத
தனயனின் நன்றிக்கடன்

க.நாகராசா, நுணாவில்

## அன்னை தொண்டு

முதியவர் சேவையை
நீ முழுமனதுடனேற்றால்
முதியோர் இல்லங்கள் எதற்கு
சேய் தன் கடன் புவியில்
தாய் தந்தை தொண்டு– இதில்
புனித புண்ணிய தீர்த்தமுண்டு
அன்னையின் தொண்டை
அவனிக்குணர்த்தும் நீ
இறைவன் பதமடையும்
இன்பநிலை பெறுவாய்

சி.திவ்வியா
யா.ப.மெ.ம.வி.

## அன்னையைக் காப்போம்

அதியுயர் அன்னையாம்
அன்னை தெரேசா
அம்மையாரை
இருகரம் கொண்டு
தாங்கி நிற்கும்
சகோதரனே!
நீர் வாழ்க
உங்களைப் பெற்ற
அன்னை எத்தனை நாளாக
தன்கரம் சுமந்து
வழி நடந்திருப்பாள்
அத்தனையும் ஒன்றுசேர
தெரேசா அன்னையை
தாங்கி நிற்பது
பெரிய வரப்பிரசாதம்

அபிகுலமாலிகா
சங்கானை

## மௌனத்தின் தேடல் –460



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## அநாதை இல்லம்

கருவறையில் உனைச்சுமந்து
களிப்புற்ற நின் தாயைப்
பெருமையுடன் காவும் மகனே
பேறுபெற்றாய் பிறப்பின் பெருமை
தெருவழியே அலைய விட்டுத்
தீண்டாத பிறப்பாக பெண்மை
அருவருக்கும் செயல் புரியா நீ
அநாதையில்லம் சேர்க்காத மகனா

வை.க.தவமணிதாசன்
கொக்குவில்

## மனுநீதி இனும்

வாழாமனமுடையோர்
வாகனங்கள் அருகிருந்தும்
தாழா மனவுறுதி தனயனே
தாயைத் தாங்கிச் செல்லும்
கோவுக்குதவுகின்ற கீர்த்தி
இடையறாத எம் மண்ணில்
மாழா மதிப்புயர்ந்த நம்
மனுநீதி இனும் வாழ்கிறது

வைகதன், கொக்குவில்

## ஆபத்தில் கைகொடுக்கும்

பெற்றோர்க்குதவுதல் கடமை!
பிதிர்களை வணங்குவது ஆசீர்வாதம்!
உயிர்கள் மீது காட்டுவது கருணை!
இவை இந்து மத தர்மங்கள்!
இயலாதோர்க்கும் உதவுவது சேவை!
அயலவர் உறவினர்க்கு உதவுவது
ஆபத்தில் கைகொடுக்கும்

இ.ஜெ.பாலன்

## வீறுநடை போடு

செல்பட்டு உயிருக்குப்
போராடி கிடந்தவரை
தன்தலை போனாலும்
அவர் உயிர் காக்க
உரம் கொண்டு
எழுந்து ஓடும் வீரனே!
உன் நடை
என்றும் வீரநடையே!

உதிஷ்டன்

# விட்டில் பூச்சிகள்



அந்திசாயும் நேரம். சூரியன் வன்னிக் காட்டிற்குள் மறையத் தொடங்குகின்றான்.

" அமுதா... அமுதா... மேய்ச்சலால் மாடுகள் வந்திட்டுது புள்ள" அமுதா எழுந்து சென்று வேலியின் குறுக்காகப் போடப்பட்ட தடுப்பை எடுத்துவிட்டாள்.

ஒழுங்கைக்குள் நின்ற மாடுகள் வரிசையாக உள்ளே வந்து வீட்டின் பின்னால் கட்டப்பட்டிருந்த அடைப்புக்குள் சென்றன. அவள் ஒன்று... இரண்டு என்று எண்ணத் தொடங்கினாள். பதின்னான்கு என்று கூறி முடித்தாள்"

" எல்லாம் வந்து அடைஞ்சிட்டுது அம்மா" என்றார்.

இவள் கை, கால், முகம் கழுவி சாமிப்பட விளக்கேற்ற அருணும் ஆர்த்தியும் விளையாடி முடித்து வந்திருந்தனர். "இந்தாக்கா உன்ர போன். சார்ஜ் போட் டாச்சாம். கடைக்கார மாமா தந்தவர்" என்றான் அருண்.

அந்தக் கடையில சூரிய மின்கலம் மூலம் சார்ஜ் ஏற்றிக்கொடுப்பது வழமை. அதற்கு சிறுதொகைப் பணத்தை இவர்கள் வழங்குவதும் உண்டு.

அரிக்கன் லாம்பின் சிமினியை திருநீறு போட்டு சுத்தம் செய்தாள் அமுதா. அது பளிச்சென்றிருந்தது. அதனை ஒளியேற்றி சிறியவர் படிக்கக் கொடுத்தாள். தாய்க்குப் பக்கத்தில் கைவிளக்கு ஒன்றை வைத்தாள்.

பின் மெழுகுதிரி வெளிச்சத்துடன் குசினிக்குள் இரவுச் சாப்பாட்டைத் தயாரிக்கத் தொடங்கினாள் அமுதா. அவள் அழகானவள். போன வருடம் தான் அவள் இருபத்தொரு வயதைப் பூர்த்தி செய்திருந்தாள். சிறுவயதிலேயே இந்தக் குடும்பத்தை அவள் சுமக்கிறாள்.

இறுதி யுத்தத்தில் எறிகணையால் அப்பாவை இழந்தது மட்டுமல்ல அம்மாவும் நோயாளி ஆகிவிட்டாள். முள்ளந்தண்டு பாதிப்பு. சொந்தங்களின் உதவியுடன் உயர்தரம் வரை படித்து இப்போது குடும்பத்திற்காக உழைக்கிறாள்"

"கண்ணான கண்ணே... கண்ணான கண்ணே... என் மீது சாய வா..." என்று அவளது கைபேசி அழைத்தது. அவளுக்கு மிகவும் பிடித்தமான பாடலை "றிங்கிங் ரோன்" ஆக விட்டிருந்தாள். கைபேசியை கையில் எடுத்துக் கதைத்தவளை " யாரம்மா போனில்" என்றாள் தாய்.

"சங்கத் தலைவி எடுத்தவா... தொழில் அதிபர் ஒருவர் கனடாவில் இருந்து வாறாராம். அவர் எங்கட கிராமத்திற்கு உதவி செய்யப்போறாராம். நாளைக்கு கட்டாயம் கூட்டத்திற்கு வரட்டாம்" என்று கூறி முடித்தாள்.

"நல்லது மறக்காம போ புள்ள" என்றாள் தாய். அமுதா மாதர் சங்கத்தில்தான் தையல் பழகியவள். அங்கு மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட தையல் இயந்திரத்தைக் கொண்டுதான் அவர்கள் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள் மாலை அந்தக் கிராமத்தின் மத்தியில் உள்ள மாதர் சங்கக் கட்டடத்தில் பெண்கள் பலர் வந்திருந்தனர். அதில் விதவைப் பெண்கள், காணாமல் ஆக்கப்பட்ட கணவன்மாரைக் கொண்ட பெண்கள், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்கள் எனப் பலர் வந்திருந்தனர். அவர்களில் அமுதாவும் இருந்தாள். அக்கூட்டத்தில் வயது குறைந்தவள் அவளே.

சிறிது நேரத்தின் பின் மாதர் சங்கக் கட்டடத்தின் முன் கார் ஒன்று சத்தம் இல்லாது வந்து நின்றது. அவர் உள்ளே வரும் போது எல்லோரும் எழுந்து நின்று வரவேற்றனர். அவர் எல்லோரையும் அமரச் சொல்லி தானும் கதிரையில் அமராது பாயில் உட்கார்ந்தார்.

எல்லோர் மனங்களையும் ஒரு நொடிப் பொழுதில் அவர் வென்றுவிட்டார். அமுதாவிற்கு அவர்மீது மதிப்பு மேலிட்டது. அவர் எல்லோரது நிலைமைகளையும் கேட்டறிந்தார். பின் அக்கூட்டத்தின் மீது பார்வையைச் செலுத்தியவர் அமுதாவைக் கையைக் காட்டி அழைத்தார்.

"எல்லோரது விபரங்களையும் சேகரித்து நீர்தான் எனக்குத் தரவேண்டும்"

"ஓம் அங்கிள்"

"அங்கிள் என்று கூறும் அளவுக்கு நான் ஒன்றும் வயதானவன் அல்ல" என்று கூறிச் சிரித்தார். எல்லோரும் சிரித்தனர். தான் கொண்டு வந்த புத்தகப் பைகளை ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொடுத்தார். அதனுள் கொப்பிகள், பேனா, பென்சில், கலர் சோக் என மாணவர் கற்றல் உபகரணங்கள் காணப்பட்டன. இறுதியாக மாதர் சங்கத்தின் செயலாளர் நன்றியுரை நிகழ்த்தினார்.

அப்போதுதான் அவரது பெயர் பூவரசன் என்பது தெரிந்தது. எல்லோரும் அவரை பூவண்ணன் என்று அழைத்தனர். இறுதியில் அவர் அமுதாவிடம் தொடர்புகொள்ளவென அவளது கைத்தொலைபேசி இலக்கத்தை வாங்கிச் சென்றார். ஊரில் சிலருக்கு உதவி செய்ய முன்வந்துள்ளார் என மாதர் சங்கத் தலைவி அமுதாவிற்குச் சொன்னார். முதல் பத்துக் குடும்பங்களின் பெயர்கள் திரட்டப்பட்டன. அதில் அமுதாவின் குடும்பம் பத்தாவது ஆகும்.

உதவிகோரும் குடும்பங்களின் பெயர் விபரங்களை பெற வருவதாகக் கூறினார் பூவண்ணன். அன்றைய தினம் முற்பகல் 10.30 மணியளவில் பூவரசன் அவர்கள் வீட்டு வாசலில் நின்றிருந்தார். ஒரு கையில் பை நிறைய அப்பிள்களும் மற்றையதில் வெளிநாட்டுச் சொக்லேட்டுக்களும் கொண்டு வந்தார். அனைவருக்கும் திகைப்பாக இருந்தது. நேரே தாயின் கட்டில் அருகே சென்று ஓரமாக அமர்ந்தார்.

"என்ன மாதிரியம்மா இப்போ உங்களுக்கு?" "ஏதோ இருக்கிறன் தம்பி. இந்தப் பிள்ளைகளால் தான் எனக்கு யோசனை"

"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதையுங்கோ. இனி நானும் இந்தக் குடும்பத்தில ஒருவன்தான்" என்று கூறியவாறு தாயின் கையில் ஐயாயிரம் ரூபா தாள் ஒன்றைத் திணித்தார். தாயின் கண்கள் நன்றியுணர்வால் நனைந்தன. கைகளைக் கூப்பினாள். அவசரமாக கைகளைப் பிடித்துக்கொண்டார்.

"நான் ஒன்றும் கடவுள் இல்லை. நானும் சராசரி மனிதன்தான்" என்றார் எளிமையாக. எல்லாவற்றையும் கவனித்தவாறு அவசர அவசரமாக தேநீர் போட்டுக் கொண்டு வந்தாள் அமுதா. அவர் தேநீரை ருசித்துக் குடித்தார்.

"ஆஹா... அருமை... இந்தக் கைகளுக்கு மோதிரம் போட வேண்டும்" என்றார் பூவண்ணன். அமுதாவிற்கு உற்சாகம் பிறந்தது. ஓடிச்சென்று உதவிக்கான குடும்பங்களின் விபரங்களைக் கொண்டு வந்து கொடுத்தாள். இறுதியாக அவர் விடை பெற்றுச் செல்லும் போது அமுதாவின் கையில் சிறிய பொதி ஒன்றைக் கொடுத்துச் சென்றார்.

அவரது கார் சென்று மறைந்ததும் அவசரமாக அப்பொதியைப் பிரித்தாள் அமுதா. அவள் கண்களையே நம்ப முடியவில்லை. "ஸ்மார்ட் போன்"

அவளுக்கு சொல்ல முடியாதளவு ஆனந்தம். அமுதா குடும்பத்திற்கு பூவண்ணன் ஓர் அவதார புருஷனாகத் தோன்றினார். உடனடியாகவே தனது சிம்மைக் கழட்டி புதிய கைபேசிக்குப் போட்டாள். அந்த நேரம் பார்த்து புதிய கைபேசிக்கு அழைப்பு வந்தது. மறுமுனையில் பூவண்ணன்.

"சந்தோஷமா"

"ஓம், ரொம்ப சந்தோஷம்"

"ஆனால் ஏன் எனக்கு இது?"

"நீர் தான் என் செக்ரட்ரி. எனக்காக தகவல் சேகரித்துத் தரவேண்டும்" என்று கூறிச் சிரித்தார். இவளும் சிரித்தாள்.

பூவண்ணன் ஆறுமாதம் கனடா. பின் ஆறுமாதம் இலங்கை என்று சுற்றித் திரிபவர். இரண்டு கல்யாண மண்டபங்கள் இங்கு உண்டு. அதைவிட கனடாவில் பல கடைத்தொகுதிகள் என ஏராளம் சொத்துக்கள்.

"ஒருவர் உழைத்து இவ்வளவு சொத்துக்களையும் வாங்க முடியுமே புள்ள" என்று தாய் தன் ஆதங்கத்தைக் கேட்டுவிட்டாள்.

"எனக்கெப்படித் தெரியும்" என்றாள் அமுதா.ஓர்நாள் அமுதாவின் கைபேசிக்கு அழைப்பு வந்தது. பூவண்ணன் தான் கனடாவில் இருந்து பேசினார். மூன்று மாதத்தில் திரும்பி வருவதாக கூறினார். தாயுடனும் கதைத்தார். அவர் இக்குடும்பத்துடன் மிகவும் ஐக்கியமாகிவிட்டார்.

சில மாதங்கள் ஓடியிருக்கும். பூவண்ணன் அமுதா வீட்டிற்கு வந்திறங்கினார். பை நிறைய வெளிநாட்டுப் பொருட்கள், சொக்லேட்டுக்கள் கொண்டு வந்தார். வழமை போல் அமுதா போட்ட தேநீரைச் சுவைத்துக் குடித்தார்.

" அமுதாவை வேலை விடயமாக வெளியே கூட்டிச் செல்லலாமா?" எனத் தாயிடம் கேட்டார். "எங்கே?" என்றாள் தாய்.

"என் வீட்டிற்குத்தான். கொம்பியூட்டரில கொஞ்சம் ரைப் பண்ணவேண்டும்"

"கவனமாய் கூட்டிற்குப் போய் கொண்டு வந்து விடுங்கோ" என்றாள் தாய்.

அமுதா குழப்பமான மனநிலையுடன் அந்தக்காரில் ஏறினாள். பின் இருக்கையில் அவள் அமரச் சென்றபோது முன்னே கூப்பிட்டு அமர்த்தினார் பூவண்ணன். ரம்மியமான வாசனை உள்ளே வீசியது. காரின் ஏசி குளுகுளுவென்றிருந்தது.

இனிமையான பாடல் ஒலித்தது. காதல் ரசம் மிகுந்த பாடல்களாக அவை இருந்தன. பிரதான வீதிக்கு வந்ததும் வழுக்கியது போல் அது பயணித்தது. எதையுமே ரசிக்கும் மனநிலையில் அவள் இல்லை. அவள் மனதில் பயம் குடிகொண்டிருந்தது.

பூவண்ணனின் வீடு வந்தது. இல்லை மாளிகை என்று தான் சொல்லவேண்டும். வேலையாள் ஓடிவந்து கேற்றைத் திறந்துவிட்டான். அமுதாவை அவன் ஏளனத்துடன் பார்த்துச் சிரிப்பது போல் இருந்தது.

ஹோலில் இருந்த சோபா செற்றியில் அவள் அமர்ந்தாள். உயர்ரக அந்தச் சொகுசுக் கதிரை அவளை இதமாகத்தாங்கி நின்றது.

"நானும் ராமுவும்தான் இந்த வீட்டில். அவன் எல்லா வேலையும் செய்வான். சமையலும் அவன்தான்"

குளிர்சாதனப்பெட்டியில் இருந்து சொக்லேட். குளிர்பானம் என்பவற்றை எடுத்துக் கொடுத்தான்.

"இதைச்சாப்பிடும் அமுதா. ஐந்து நிமிடத்தில் குளிச்சிட்டு வாறன்"

"கொம்பியூட்டரில் என்ன ரைப் பண்ண வேண்டும்"

"ஒரு அவசரமும் இல்லை. இப்ப ரிங்கை குடியும்" என்றவாறு விரைந்து சென்றார்.

மெல்ல சொக்லேட்டை எடுத்துச் சுவைத்தாள். பின் குளிர்பானத்தை அருந்தி னாள். மெல்ல மெல்ல தலைக்குள் ஏதோ செய்தது. அந்தரத்தில் பறப்பது போன்ற பிரமை.

பிற்பகல் 3.30 மணி. அமுதா கண் விழித்துப் பார்த்தபோது அவள் கட்டிலில் அலங்கோலமாக தான் படுத்திருப்பதை உணர்ந்தாள். விருட்டென்று எழுந்து உட்கார்ந்தாள். கால்மாட்டில் பூவண்ணன் உயர் ரக சிகரெட் ஒன்றைப் பிடித்தவறு யாருடனோ கைபேசியில் கதைத்துக் கொண்டிருந்தார். இடையிடையே மேசை மீதிருந்த கண்ணாடிக் குவளையில் ஊற்றி வைத்திருந்த தங்க நிறத்திலான பானத்தையும் அருந்திக் கொண்டிருந்தார்.

அமுதா விழித்துக்கொண்டதும் விஸ்கியுடன் இருந்த கிளாசை தூக்கிப்பிடித்து சிரித்தார். அமுதாவிற்கு அவர் முகத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லை. பட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

உடம்பு அடித்துப்போட்ட மாதிரி வலித்தது. தன் பெண்மை சூறையாடப்பட்டதை அவள் உணர்ந்துகொண்டாள். அவள் மனமோ ஓலமிட்டு அழுதது. கண்ணீர் பெருகியது. இவளது அழுகையைப் பார்த்த பூவண்ணன் தனது கைபேசி உரையாடலை நிறுத்தினார்.

அலுமாரியில் இருந்து ஓர் ஆயிரம் ரூபா தாள் கொண்ட கட்டு ஒன்றை எடுத்து அவள் மடியில் போட்டார். அதை அவள் அதே வேகத்துடன் அவர் முகத்தில் விட்டெறிந்தாள். அத்தாள்கள் அவ் அறையெங்கும் பரவிப் பறந்தன.


"நான் வீட்ட போகனும்" என்றாள் விறைப்பாக. அவள் கோபத்தைப் புரிந்தவராக சில நிமிடத்தில் தயாரானார் பூவண்ணன். காரின் பின் இருக்கையில் அமர்ந்து கொண்டாள் அமுதா. இப்போதும் அந்த வேலையாள் ஏளனமாகச் சிரிப்பது போல் உணர்ந்தாள். ஆயிரம் ஈட்டிகள் கொண்டு குத்துவது போல் அவமானத்தை உணர்ந்தாள்.வீட்டு வாசலில் கார் நின்றது. இறங்கி னாள். கார்க்கதவை அறைந்து சாத்தினாள். பூவண்ணன் கன்னத்தில் அறைந்து போல் இருந்தது.

"அமுதா" என்றழைத்தார் பூவண்ணன். வேகமாக வீட்டிற்குள் ஓடி மறைந்தாள் அமுதா. பின் இருக்கையில் அவர் கொடுத்த "ஸ்மார்ட் போன்" அநாதரவாக இருந்தது. அதைக் கைகளில் எடுத்தார். அதில் உதவி பெறுவோர் விபரம் இருந்தது. அதனை ஆராய்ந்தார். பெயர் கனிமொழி, வயது 33, விதவை என்றிருந்தது. அவர் உதடுகளில் நளினமாக புன்னகை தவழ்ந்தது.

சி.சிறீறங்கன்
உரும்பிராய்

# மூன்றே நாளில் இரண்டான காஷ்மீர்

## அமித்ஷா அதிரடிப் பின்னணி



கடந்த மூன்று நாட்களாக மத்திய அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கைகள், காஷ்மீரை இரண்டாகப் பிரித்து... நாடு முழுவதும் எதிர்ப்பும் ஆதரவுமாக பலத்த அதிர்வுகளை கிளப்பியிருக்கின்றன. இந்த நடவடிக்கைகள், சர்வதேச சமூகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளன. அதேசமயம், "காஷ்மீரில் அமைதியை ஏற்படுத்துமா? கிளர்ச்சியைத் தூண்டுமா?' என்ற கேள்வியையும் எழுப்புகின்றன.

ஓகஸ்ட் 5 ஆம் திகதி அன்றைய தினமே பதற்றத்துடன் தான் விடிந்தது. முந்தைய நாள் நள்ளிரவே காஷ்மீரில் முன்னாள் முதல்வர்கள் உட்பட அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் வீட்டுச்சிறையில் வைக்கப்பட்டார்கள். இராணுவத் துருப்புகள் அதிகரிக்கப்பட்டன.

சரியாக காலை 9 மணிக்கு, பாதுகாப்புக்கான அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் மோடியின் தலைமையில் கூட்டப்பட்டது. கூட்டத்தில் உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், தேசிய பாதுகாப்பு முகமைத் தலைவர் அஜித் நோவல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### மாணவர் அமைப்பினர் போராட்டம்

அடுத்த இரண்டு மணி நேரத்தில் ராஜ்ய சபாவில் பேசிய அமித் ஷா, அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 370 மற்றும் சட்டப் பிரிவு 35-ஏ ஆகியவற்றை இரத்துச் செய்வதாக அறிவித்தார். தொடர்ந்து, ஜம்மு-காஷ்மீர் இரண்டாகப் பிரிக்கப்படுவதாகவும் அறிவிப்பு வெளியானது. இதுகுறித்து ஓகஸ்ட் 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் மோடி பேசுவார் என்றும் தெரிகிறது. இதன்படி மாநில அந்தஸ்தை ஜம்மு-காஷ்மீர் இழந்து, யூனியன் பிரதேசமாகியுள்ளது. ஆனால், அங்கு சட்டமன்றம் செயற்படும். அதன் ஆறாண்டு ஆட்சியுரிமை, ஐந்தாண்டு ஆக்கப்பட்டிருக்கிறது. லடாக், காஷ்மீரிலிருந்து பிரிக்கப்பட்டு, சட்டமன்றம் இல்லாத யூனியன் பிரதேசமாக்கப்பட்டுள்ளது. இனி, இந்தியாவின் அனைத்துச் சட்ட திட்டங்களும் ஜம்மு-காஷ்மீருக்கும் பொருந்தும். இதற்கான அறிகுறிகள் கடந்த மூன்று நாட்களுக்கு முன்பே கசிந்து விட்டாலும், நாடாளுமன்றத்தில் விவாதிக்க அவகாசமே கொடுக்காமல் மசோதாவை பி.ஜே.பி நிறைவேற்றிய வேகம்தான் எதிர்க் கட்சிகளைக் கொந்தளிக்க வைத்துள்ளது.

மசோதாவுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து மசோதாவின் நகல்களைக் கிழிக்க முயற்சி செய்த பி.டி.பி.கட்சியின் எம்.பிக்கள் மிர் ஃபயாஸ், நஸீர் அஹமது ஆகியோர் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். மாநிலங்களவையில் இதைக் கடுமையாக எதிர்த்த வைகோ, "இன்றைய நாள், ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்ட நாள். இது எமர்ஜென்ஸி" என்றார். அதற்கு பதில் அளித்த வெங்கய்யா நாயுடுவோ, "இது எமர்ஜென்ஸி அல்ல... அர்ஜென்ஸி" என்றார். அதேசமயம், மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி, வை.எஸ்.ஆர்.காங்கிரஸ், ஆம் ஆத்மி, அ.தி.மு.க., பிஜு ஜனதாதளம் ஆகிய கட்சிகள் இந்த மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

### பின்னணி என்ன?

இதற்கான அடித்தளத்தை, மோடியும் அமித் ஷாவும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னரே போட்டுவிட்டனர். பி.ஜே.பியின் தேர்தல் அறிக்கையிலும், 'காஷ்மீரின் வளர்ச்சிப் பாதையில் குறுக்கிடும் அனைத்து தடைகளையும் உடைத்தெறியவும், அதன் அனைத்துப் பிராந்தியங்களுக்கும் போதுமான நிதி ஆதாரங்களை வழங்கவும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். அதற்குத் தடையாக இருப்பது 370, 35-ஏ பிரிவுகள்தான். காஷ்மீர் பண்டிதர்கள் பாதுகாப்பாக மாநிலத்துக்குத் திரும்புவதை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் மேற்கொள்வோம். மேற்கு பாகிஸ்தான், பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் மற்றும் சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் சாம்ப் பகுதிகளிலிருந்து அகதிகளாக வரும் பண்டிதர்களை மீள்குடியமர்த்துவதற்கான நிதியுதவியும் நாங்கள் வழங்குவோம்' என்று கூறியிருந்தனர். அப்போது அதைப் பற்றி யாரும் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை.

### போராட்டத்தில் காஷ்மீர் மக்கள்

அதேசமயம் 370, 35-ஏ பிரிவுகள் தொடர்பாக பல்வேறு ரிட் மனுக்கள் உச்ச நீதிமன்றத்தில் தேங்கிக்கிடக்கின்றன. காஷ்மீரில் ஆளுநர் ஆட்சி அமுல்படுத்தப்பட்டால்தான் நாடாளுமன்றத்தில் இந்த மசோதாவைக் கொண்டு வர முடியும். அதனாலேயே, காஷ்மீரில் ஆளுநர் ஆட்சி வரும் வரை, இந்த வழக்குகளை ஒத்திப் போட்டு வாய்தா வாங்கிவந்தது மத்திய அரசு. இதற்காகவே மோடியும் அமித்ஷாவும் காத்திருந்தனர். அதற்கேற்ற சூழலும் இப்போது வாய்த்தது. கடந்த ஜூலை 31 ஆம் திகதி மோடி மற்றும் அமித்ஷா இருவரும் சந்தித்து, நாடாளுமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடரிலேயே காஷ்மீர் தொடர்பான சட்டத்திருத்த மசோதாவை நிறைவேற்றுவது குறித்து தீவிர ஆலோசனை நடத்தினார்கள். தொடர்ந்து அங்கு இருந்தே இது குறித்த உத்தரவு மத்திய உள்துறைச் செயலருக்குச் சென்றது.

மறுநாள் ஓகஸ்ட் முதலாம் திகதி அன்றே அமர்நாத் யாத்திரிகர்களை வெளியேற்ற உத்தரவிட்டது மத்திய அரசு. முதலில் காஷ்மீர் மாநிலத்தை மூன்றாகப் பிரிக்கவே திட்டமிட்டது பி.ஜே.பி. ஆனால், மத்திய உள்துறைச் செயலாளர் தரப்பிலிருந்து, 'ஜம்முவில் இந்துக்களும் காஷ்மீரில் முஸ்லிம்களும் அதிகமாக இருக்கிறார்கள். இந்தச் சூழலில் மூன்றாகப் பிரித்தால் அது ஜம்மு மற்றும் காஷ்மீர் இந்து - முஸ்லிம்கள் இடையே கலவரமாக வெடிக்கும்' என்று சுட்டிக்காட்ட மூன்றாகப் பிரிக்கும் திட்டம் கைவிடப்பட்டு, இரண்டாகப் பிரிக்க முடிவு செய்யப்பட்டது. ஆர்.எஸ்.எஸ்.தலைமையின் பரிந்துரையின்படி, பி.ஜே.பியின் தேசிய அமைப்பு பொதுச்செயலாளராக, கர்நாடகத்தைச் சேர்ந்த சந்தோஷ் என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் வந்த பிறகே மேற்கண்ட நடவடிக்கைகள் வேகமெடுத்தன.


### வளர்ச்சி, வேலைவாய்ப்பு மேம்படுமா?

மத்திய அரசின் இந்த அதிரடி நடவடிக்கைகளால் காஷ்மீர் மாநிலத்தில் செல்வாக்கு பெற்றுள்ள மாநில அரசியல் கட்சிகளுக்கும், அந்த மாநிலத்தைத் தனி நாடாக அறிவிக்க வேண்டும் என்று போராடிவரும் பிரிவினைவாதிகளுக்கும் சிக்கல் ஏற்படும். "ஒரே பிரதேசம் இரண்டாக உடைந்தால், எந்தப் பகுதிக்காகப் போராட முடியும்?"என்கிற கேள்வி எழும். தவிர, அந்த மாநிலத்தில் கணிசமாக உள்ள இஸ்லாமியர்களின் வாக்குகளும் பிரியும். காஷ்மீரில் பல ஆண்டுகளாக நீடித்துவரும் பிரச்சினைக்கு இதைத் தவிர வேறு வழியில்லை என்று மத்திய அரசு தரப்பில் சொல்லப்படுகிறது.

### காஷ்மீரில் குவிக்கப்பட்ட இராணுவத்தினர்

இதுகுறித்து பி.ஜே.பி சார்பில் பேசுபவர்கள், "உலகம் முழுவதுமே தேசியவாதமும் பாதுகாப்புவாதமும் தலைதூக்கி வருகின்றன. இஸ்ரேலின் பாலஸ்தீனம் மீதான நிலைப்பாடு, இலங்கையின் தனி ஈழம் மீதான நிலைப்பாடு, மியான்மரின் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் மீதான நிலைப்பாடு, சீனாவின் திபெத் நிலப்பகுதி மீதான மற்றும் 'உய்குர்' பகுதி முஸ்லிம்கள் மீதான நிலைப்பாடு... இவையெல்லாம் தேசியவாதத்தையும் தங்கள் நாட்டின் பெரும்பான்மையினர் மீதான ஆதரவு நிலைப்பாட்டையுமே முன்வைக்கின்றன. ஐரோப்பிய நாடுகள் பலவும் தங்கள் நாடுகளில் அகதிகளுக்கான கதவுகளை அடைத்ததையும் இங்கே பொருத்திப் பார்க்கலாம். ஜனநாயகத்தை உயர்த்திப் பிடிப்பதாகக் கூறும் அமெரிக்காவும்கூட பாதுகாப்பு வாதத்தை முன்னிறுத்தி, குடியேறிகளிடம் கடுமையாக நடந்து கொள்கிறது. நாட்டின் தேசியவாதத்தைக் காக்க அண்டைநாடுகளான மெக்சிக்கோ மற்றும் ஹோண்டுராஸ் மீதும் கடும் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

இந்தச் சூழலில் காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா எடுத்திருக்கும் நடவடிக்கைகள் எல்லாம் ஒன்றுமேயில்லை. சுதந்திரத்துக்குப் பிறகு நம் நாட்டில் தனி நாடாக இயங்கிய மாநிலங்களை, இதுபோன்ற அதிரடி நடவடிக்கைகளால் தான் இணைத்தோம். ஐதராபாத், இராணுவ நடவடிக்கை மூலமாகவே இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. பஞ்சாபில் காலிஸ்தான் தீவிரவாதம், துப்பாக்கி முனையில்தான் ஒடுக்கப்பட்டது. காஷ்மீர் மாநிலத்தில் சுற்றுலா மட்டுமே மண்ணின் மைந்தர்களுக்கு வருவாய் கொடுத்து வந்தது. ஆனால், 1980களுக்கு மத்தியில் அங்கு தலைதூக்கிய பயங்கரவாதத்தால் நிலைமை தலைகீழாக மாறிப்போனது. இதன் பின்னணியில் அரசு மற்றும் இராணுவத்தினரின் அடக்குமுறைகளும் அதிகரித்தன. இதையெல்லாம் சரிசெய்யும் விதமாகவே மத்திய பி.ஜே.பி அரசு இந்த விவகாரத்தை கையில் எடுத்துள்ளது. இதனால் காஷ்மீரின் அமைதி, சுற்றுலா உள்ளிட்ட தொழில்களின் வளர்ச்சி, வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும்" என்கிறார்கள்.



### கலவர பூமியாகுமா காஷ்மீர்?

ஆனால், எதிர்க்கட்சிகள் தரப்பிலோ, "மத்திய அரசின் இந்த நடவடிக்கை, காஷ்மீரை நிரந்தரமான கலவர பூமியாக மாற்றிவிடும். பிரிவினைவாதக் குழுக்கள் அதிகரிக்கும். பாகிஸ்தான் இந்த நிலைப்பாட்டை முற்றிலுமாக நிராகரித்துள்ளது.

எனவே, பிரிவினைவாதக் குழுக்களுக்கு அந்த நாட்டிலிருந்து நிதியுதவி வருவதும் அதிகரிக்கும். இதுநாள் வரை காஷ்மீர் மாநிலம் மண்ணின் மைந்தர்களுக்கு மட்டுமே சொந்தமாக இருந்தது. அரசு வேலைவாய்ப்புகளும் அவர்களுக்கு மட்டுமே அளிக்கப்படுகின்றன. அதனாலேயே அவ்வப்போது எழும் கல்வீச்சுச் சம்பவங்களையும் ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடிந்தது. சொந்த மண்ணும் வேலைவாய்ப்புகளும் தாரை வார்க்கப்பட்டால், கல்வீச்சுச் சம்பவங்களை இனி கட்டுப்படுத்த முடியாது.

### காஷ்மீர் அரசியல் கட்சித் தலைவர்கள் ஆலோசனை


வெளியாட்களை காஷ்மீரில் நிலம் வாங்க அனுமதிக்காததால் மட்டுமே அந்த நிலம் பாழ்படாமல் இயற்கை வளங்களுடன் அதன் பேரழகை இழக்காமல் இருக்கிறது. எனவே, எதிர்காலத்தில் காஷ்மீரில் அமைதி திரும்பினாலும் அதன் அடையாளமாக இருக்கும் இந்த இயற்கைப் பேரழகு மட்டுமே சுற்றுலா வருவாயைக் கொடுக்கும். மாறாக, "காஷ்மீரில் அனைவரும் தொழில் செய்யலாம் நிலங்களை வாங்கிக் குவிக்கலாம்' என்றால், காஷ்மீரின் கணிசமான இடங்களை, பன்னாட்டு பெரும் நிறுவனங்கள் வளைத்துப் போடும்.

சுற்றுலா வளர்ச்சி என்கிற பெயரில் காடுகள் அனைத்தும கொங் கிறீட் கட்டடங்கள் ஆகும். எதிர்காலத்தில் நிலக்கரி, ஐத்ரோ காபன் போன்ற கனிம வளங்களுக்காக காஷ்மீர் சூறையாடப்பட்டாலும் ஆச்சர் யமில்லை" என்று சொல்பவர்கள், 'நாடு, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளது. பெரியளவில் வளர்ச்சியில்லை.

உன் னாவ் பாலியல் வன்கொடுமை உள்ளி ட்ட விவகாரங்கள் பி.ஜே.பிக்கு எதிராக உள்ளன. இவற்றை யெல்லாம் திசை திருப்பவே காஷ்மீர் விவகாரத்தைக் கையிலெடுத்திருக்கிறார்கள்" என்ற வாதத்தையும் முன் வைக்கிறார்கள்.மோடியின் காஷ்மீர் மீதான அதிரடி ஒபரேஷன் காஷ்மீரில் வளர்ச்சியை ஏற்படுத்துமா? கிளர்ச்சிகளைத் தூண்டி விடுமா? என்று, பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### முதல்முறையாக நிறுத்தப்பட்ட யாத்திரை!

கடந்த 2008இல் ஹர்கத் உல் அன்சர்




தீவிரவாத குழு வெளிப்படையாக யாத்திரிகர்களைத் தாக்குவதாக அறிவித்த போதும், 2010ஆம் ஆண்டில் பதற்றம் நிலவியபோதும்கூட அமர்நாத் யாத்திரை இரத்துச் செய்யப்படவில்லை. 2016இல் புர்ஹறன் வாணி கொல்லப்பட்டபோதுகூட யாத்திரை தொடர்ந்தது. காஷ்மீரில் அமர்நாத் யாத்திரை நிறுத்தப்படுவது இதுதான் முதல்முறை.

### இரும்புத்திரை!

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, வரலாறு காணாத நெருக்கடியை காஷ்மீர் மக்கள் சந்தித்து வருகிறார்கள். இன்டர் நெட் வசதி முற்றிலுமாகத் துண்டிக்கப் பட்டுள்ளது. தொலைபேசி, அலைபேசி இணைப்புகளும் சரிவர இயங்கவில்லை. மாநிலம் முழுவதுமே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களுக்கு, கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. காஷ்மீர் நிலவரத்தை அறிய அங்கு இருக்கும் ஐ.ஏ.எஸ்.அதிகாரி ஒருவரைத் தொடர்புகொண்டோம். "பிறகு பேசுகிறேன்" என்று தொடர்பைத் துண்டித்துவிட்டார். இந்த விவகாரம் தொடர்பாக எதுவும் பேசக்கூடாது என அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மொத்தத்தில் இரும்புத்திரை கொண்டு காஷ்மீரத்தை மூடிவிட்டது பி.ஜே.பி!

இந்த விவகாரம் குறித்துப் பேசியிருக்கும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், "காஷ்மீர் நிலவரத்தால் பிராந்திய அளவில் கடும் நெருக்கடி ஏற்படும். காஷ்மீர் விவகாரத்தில் இரு நாடுகள் இடையிலான பேச்சுவார்த்தையை மூன்றாவதாக ஒருவர் மத்தியஸ்தம் செய்வதே நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர வழி வகுக்கும். மேலும், இந்த விடயத்தில் இரு நாடுகளுக்கு இடையே மத்தியஸ்தம் செய்ய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பும் விருப்பம் தெரிவித்திருக்கிறார். இந்திய ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இராணுவம் அதிகளவில் குவிக்கப்படும் சூழலில் ட்ரம்ப் கூறியபடி பேச்சுவார்த்தையை நடத்த, இதுவே சிறந்த தருணம்" என்று சொல்லியிருக்கிறார்.

### 370 - என்ன சொல்கிறது?

இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 370 என்பது, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு தற்காலிக சிறப்பு அந்தஸ்து வழங்கியுள்ளது.

அதன் அம்சங்கள்:

❖ இந்திய நாடாளுமன்றத்தில் எந்தச் சட்டம் இயற்றப்பட்டாலும், ஜம்மு-காஷ்மீர் மாநில அரசு ஒப்புதல் தந்தால் தான் அங்கே அது அமுலுக்கு வரும்.

❖ ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் நிலம் உள்ளிட்ட அசையாச் சொத்துகளை, பிற மாநிலத்தவர் வாங்க முடியாது. ஆனால், அந்த மாநில மக்கள் இந்தியாவின் பிற மாநிலங்களில் அசையாச் சொத்துகள் வாங்கலாம். அந்த மாநிலப் பெண்களை வேறு மாநிலத்தவர் திருமணம் செய்தாலும், அந்தப் பெண் மற்றும் அவரின் வாரிசுகள் அங்கு நிலம் வாங்கும் உரிமையை இழக்கிறார்கள்.

❖ ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு மட்டுமே தனிக்கொடி வைத்துக்கொள்ளும் உரிமையுள்ளது. தனி அரசியல் சாசனமும் இருக்கிறது. ஜம்மு -காஷ்மீர் மாநில முதல்வரின் ஒப்புதலின் பேரில் மட்டுமே அங்கு ஆளுநரை நியமிக்க முடியும்.

❖ அந்த மாநிலத்தின் சட்டமன்றப் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள். இந்திய உச்ச நீதிமன்றத்தின் ஆளுமை, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் செல்லும்.

❖ இந்திய அரசியல் சாசனத்தின் 238ஆவது பிரிவின்படி இந்தியாவில் எந்த மாநிலத்தின் எல்லையையும் கூட்டவோ, குறைக்கவோ மத்திய அரசுக்கு உரிமை இருக்கிறது. ஆனால், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் இந்தச் சட்டப்பிரிவு செல்லாது.

### 35 A - என்ன சொல்கிறது?

1954இல் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டப் பிரிவு, ஏற்கனவே இருந்த 370 உடன் இணைக்கப்பட்டது. அதாவது மாநிலத்தின் நிரந்தர குடிமக்கள் யார், அவர்களுக்கு என்ன உரிமை என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தையும் சம உரிமை, சமத்துவம் ஆகியவற்றை பாதிக்காத வகையிலான எந்தவொரு சட்டத்தையும் அந்த மாநிலச் சட்டப்பேரவை இயற்றிக் கொள்ளலாம்.

**ஜூனியர் விகடன்**

# இது நம்ம கதைகள்... 52

## மகேசன் சேவை




"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதே அரசாங்கங்கள் முதல் அலுவலகங்கள் வரையில் எழுதப்படாத மகுட வாக்கியமாக வுள்ளது. ஆயினும் செயல்வடிவில் இதன் பெறுமானம் எத்தகையது என்பது "மகேசன்களாக" உருவாகிக்கப்படும் அந்த மக்களுக்குத் தான் வெளிச்சம்.

**இனி இவ்வாரக்கதை...**

ஒரு இளைப்பாறிய அரச சேவகர் வயோதிபம் காரணமாக இறந்தார். அவர் இவ்வுலகில் ஆற்றிய பணியை மதிப்பீடு செய்து இறுதியில் நரகத்திற்குத் தீர்ப்பிடப்பட்டார்

நரகத்திற்குச் சென்றவருக்கோ ஆச்சரியத்திலும் ஆச்சரியம். அங்கு இவர் எதிர்பார்த்ததுபோல் ஒரு நரகம் இருக்கவில்லை. நாடுகள், பிரதேசங்கள் என்று வகைப்படுத்தப்பட்டு பல நரகங்கள் இருந்தன. இதில் எதற்குள் நுழைவதென்று சில நிமிடங்கள் குழம்பிப்போனார் .

பின்னர் சுதாகரித்துக் கொண்டவராக, ஒவ்வொரு நரகத்திலும் வழங்கப்படும் தண்டனைகள், கிடைக்கும் வரப்பிரசாதங்கள் தொடர்பில் விசாரித்தறிந்தபின் எதற்குள் நுழைவதென்று தீர்மானிப்பதென முடிவுசெய்தார் .

முதலில் அமெரிக்காவின் நரகத்தைப் பார் வையிட்டார் . அங்குள்ளவர் களுக்குத் தண்டனையாக தினமும் முதலில் 6 மணிநேரம் மின்சாரக் கதிரையில் மின் அதிர்ச்சி கொடுக்கப்படும், பின் 8 மணி நேரம் கூரிய ஆணிகள் பதித்த கட்டிலில் ஆணிகளின் மேல் உறங்கவேண்டும்,அதன் பின் 3 ம்ணி நேரம் மிளகாய்த்தூளில் குளியல் , இறுதியாக 7 மணிநேரம் நரகத்தின் சேவகரால் ஓயாது சவுக்கடி வழங்கப்படும்.

"இந்தத் தண்டனைகள் கொடூரமானவை . இவற்றை நம்மால் தாங்கமுடியாது" என்று முடிவெடுத்தவராக அடுத்த நரகத்தைப் பார்வையிட்டார் நம்மவர். அது ரஷ்யாவின் நரகம். அமெரிக்க நரகத்தில் வழங்கப்பட்ட அதே தண்டனைகளே அங்கும் வழங்கப்பட்டன. அதுவும் தமக்கு ஒத்துவராது என்று முடிவு செய்தவராக அடுத்து சீனா, இந்தியா என பல நரகங்களைப் பார்வையிட்டார். அங்கும் ஒரேவிதமான தண்டனைகளே வழங்கப்பட்டன.

இறுதியில் ஒரு நரகத்தின் முன் பெரும் தொகையினரைக் கண்ணுற்றார். அவர்கள் எல்லோரும் உள்ளே நுழைவதற்கு வரிசையில் முண்டியடித்துக் கொண்டிருந்தனர். "அங்குள்ள நரகங்களிலேயே இங்குதான் தண்டனைகள் குறைவாக இருக்கும் போல, அதனால் இதற்குள் நுழைய எல்லோரும் போட்டிபோடுகிறார்கள்" என நினைத்தவராக நிமிர்ந்து அந்த நரகத்தின் பெயர்ப்பலகையைப் பார்த்தார். அதில் "யாழ்ப்பாணம்" என எழுதப்பட்டிருந்தது.

அங்கு திரண்டு நின்றவர் களிடம் "இவ்வளவு பேர் இங்கு நுழைய முண்டியடிக்கிறார்களே. இங்கு தண்டனைகள் குறைவா? " எனக் கேட்டார். "மற்ற நரகங்களிலுள்ள அதே தண்டனைகள் தான் இங்கும் வழங்கப்படுகின்றன" என்று பதிலுரைத்தார் கூட்டத்தில் நின்றவொருவர் "அப்படியானால் ஏன் இங்கு மட்டும் இவ்வளவு நெருக்கடி?" என்று வினாத்தொடுத்தார் நம்மவர்."இங்கும் அதே தண்டனைகள் தான் என்றாலும் சில வரப்பிரசாதங்கள் உண்டு" என்றார் முன்பு பதிலுரைத்தவர் . "அது என்ன வரப்பிரசாதங்கள் ?"என கேள்விக்கணை தொடுத்தார் நம்மவர்.

"தண்டனைகள் ஒன்றுதான்.ஆனால் இங்கும் அதை அனுபவிக்கும் விதம் வேறு. அதாவது இங்கு எவ்வித முன்னறிவித்தலுமில்லாமல் அடிக்கடி மின்சாரம் தடைப்படும். பொதுவாக தண்டனைக்காக மின்சாரக் கதிரையில் அமர்ந்ததும் மின்சாரம் தடைப்பட்டுவிடும். மின்சாரம் மீளக்கிடைக்க பல மணிநேரமாகும். மின்சாரமில்லையென்றால் மின்னதிர்ச்சியுமில்லை. சாவகாசமாக 6 மணி நேரமும் மின்சாரக் கதிரையில் குட்டித் தூக்கம் போடலாம்" என்றார் மற்றவர் நமட்டல் சிரிப்புடன். "ஆனாலும் அடுத்து ஆணிகளின் மேல் படுக்கவேண்டுமே" என்றார் நம்மவர் கவலையுடன்.

"இங்கு உடுபுடைவையிலிருந்து உழுத்தம் பருப்பு வரை தரமான ஒரிஜினல் பொருட்கள் கிடைப்பதேயில்லை. அதிக கொமிசனுக்காகவும், இலாபத்திற்காகவும் தரமற்ற பொருட்களே கொள்வனவு செய்யப்படுகின்றன. இந்த ஆணிகள் தரமற்றவை. விரலால் அழுத்தினாலே வளைந்து நெளிந்துவிடும். பிறகென்ன ஆணிப்படுக்கை பஞ்சு மெத்தைப் படுக்கைபோலதான் இருக்கும்" எனப் பதிலுரைத்தார் மற்றவர் .

அந்தப் பதிலால் நிலைகுலைந்தார் நம்மவர். ஆயினும் மிளகாய்த்தூள் குளியலை நினைக்க உடல் பற்றியெரிந்தது. நம்மவர் நினைப்பதைப் புரிந்து கொண்ட மற்றவர் சொன்னார். "இங்கு எல்லாமே கலப்படம் தான். மிளகாய்த்தூளில் கோதுமை மா கலப்புத்தான் அதிகம். அதனால் மற்ற நரகங்கள் போல மிளகாய்த்தூள் குளியலிலுள்ள கஷ்டம் இங்கில்லை".

மற்றவரின் பதில்கள் யாழ்ப்பாண நரகத்தையே தெரிவு செய்வதற்கு நம்மவரைத் தூண்டினாலும் 7 மணி நேர சவுக்கடி மீதமிருக்கிறதே என நினைத்து அஞ்சினார்.

நம்மவரின் நினைப்பை சரியாகக் கிரகித்த மற்றவர் சொன்னார் . "இங்குள்ள நரகின் சேவகர்களெல்லாம் பணிக்கு வருகைதந்து கையொப்பமிட்டபின் தங்கள் சொந்த வேலைகளைப் கவனிக்கப் போய்விடுவார் கள். பிள்ளைகளை பள்ளிக்கும், ரீயூசனுக்கும் ஏற்றியிறக்குவது, கடை - சந்தைக்குப் போய் வீட்டுக்குத் தேவையானவற்றை வாங்குவது. உறவினர் , நண்பர்களின் கொண்டாட்ட நிகழ்வுகளில் கலந்து கொள்வது எல்லாமே அலுவலக நேரத்திலே தான்.பின்னர் வேலை முடிவுறும் நேரம் வந்து மீளக் கையொப்பமிட்டுப் போவார் கள். எனவே தமக்குரிய அலுவலகக் கடமைகளை செய்ய அவர்களுக்கு நேரமேயில்லை. சவுக்கடி பற்றி வெறும் பதிவுகள்தான் இருக்கும், அடிப்பதற்கு அலுவலகர் கள் இருக்கமாட்டார்கள்".

அவரின் பதில்களைக் கேட்டு "ஆஹா இங்கு இவ்வளவு வரப்பிரகாசங்களா? " எனக் கேட்டவாறு நம்மவரும் அந்த வரிசையிலே இணைந்து கொண்டார்.

**நகரத்தை நரகமாக்கிடவும்,**
**நரகத்தை நகரமாக்கிடவும்**
**வல்லமை படைத்தோர் நாம்.**

**எப்.எக்ஸ்.அன்ரன்**

# அதிகம் கொன்றது அமெரிக்கப் படைகள்தான்



## ஐ.நா. வெளியிட்ட அதிர்ச்சி ரிப்போர்ட்

ஆப்கானிஸ்தானில் ஆயிரக்கணக்கான பொதுமக்களைக் கொன்று குவித்தது பயங்கரவாதிகள்தான்' என உலகம் நினைத்தது. அப்பாவி மக்களைக் காப்பதுதான் எங்களின் ஒரே நோக்கம்!' என்று இதுநாள் வரை ஆர்ப்பரித்து வந்தது அமெரிக்கா. ஆனால், 'பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் அதிக அளவில் பொதுமக்களைக் கொன்று குவித்தது பயங்கரவாதிகள் அல்லர்... அமெரிக்கக் கூட்டுப் படைகள்தான்' என்று ஐ.நாவின் கள அறிக்கை தெரிவிக்கிறது. இதனால், அமெரிக்கப் படைகளை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பியதன் நோக்கம் கேள்விக்குள்ளாகியிருக்கிறது.

'பயங்கரவாதத்தின் மீதான போர்' என்ற அறிவிப்புடன்தான் அமெரிக்கக் கூட்டுப் படை 2001இல் ஆப்கானிஸ்தானில் இறங்கியது. பிறகு ஒபாமா பதவியேற்றவுடன், "ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானிலிருந்து, அல்கொய்தா அமைப்பைச் சீர்குலைத்து, தோற்கடித்து, அகற்றி அமைதியை நிலைநாட்டுவதுதான் எங்களின் தலையாய பணி" என்று கர்ஜித்தார். ஆனால், அது வெறும் மாயை என்பதை ஐ.நா. அறிக்கை ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், 717 அப்பாவி மக்களை அமெரிக்கக் கூட்டுப்படை கொன்றுள்ளது. அதே காலகட்டத்தில் தலிபான்கள் கொன்றவர்களின் எண்ணிக்கை அதைவிடக் குறைவுதான். அவர்கள் 531 பேரைக் கொன்றுள்ளனர். இந்த அதிர்ச்சித் தகவலை ஆப்கானிஸ்தானின் ஐ.நா. உதவி கமிஷன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. தரைவழித் தாக்குதல்களால் ஏற்பட்ட மரணத்தைவிட, வான்வழித் தாக்குதல்களால் ஏற்பட்ட இறப்பு அதிகம் எனவும் அந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. அமெரிக்கப் படைகள்தான் இதுவரை அதிக வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளன. அமெரிக்க விமானங்கள், ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் மட்டும் 790 முறை வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளன. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 847 முறை தாக்குதல் நடத்தியுள்ளன. வான்வழித் தாக்குதலில் காயம் அடைந்தவர்களைவிட இறந்தவர்களின் எண்ணிக்கை இரு மடங்காக இருக்கிறது. இந்த 18 ஆண்டுகாலப் போரால், பொதுமக்களுக்குத்தான் அளவுக்கு அதிகமான தீங்குகள் விளைந்துள்ளன. இந்தத் தாக்குதல்கள், ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்று, உயிர் தப்பியவர்களைத் துன்புறுத்தி, பல்லாயிரக்கணக்கான குடும்பங்களை இடம்பெயரவைத்துள்ளன. மேலும், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள், இதனால் பாதிக்கப்பட்டுள்ளன என்கிறது அந்த அறிக்கை.

"எங்களைக் காத்துக்கொள்வதும் ஆப்கானிஸ்தான் பாதுகாப்புப் படை வீரர்களைக் காப்பதும் எங்கள் கடமை" என்கிறது அமெரிக்கா. "பொதுமக்களின் உயிரிழப்புக்கு இருவரும்தான் பொறுப்பு. நிலைமையைப் புரிந்துகொண்டு, இருவரும் பொதுமக்கள் இறப்பைத் தடுக்க முயற்சி செய்ய வேண்டும்" என்று ஐ.நா. அமைப்பின் தலைவர் டாடாமிச்சியமமோடோ கறாராகக் கூறியுள்ளார்.

இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு அமெரிக்கா உள்ளாவது இது இரண்டாவது முறை. அமெரிக்கக் கூட்டுப்படையின் கொடூரச் செயல்கள் ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுள்ளன. கடந்த 2009இல் ஃபாரா மாகாணத்தின் ஒரு கிராமத்தில் நடந்த அமெரிக்கப் படையின் வான்வழித் தாக்குதலில் 100இற்கும் மேற்பட்ட கிராம மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அதற்குப் பிறகு நடத்தப்பட்ட கள ஆய்வில், தலிபான் பயங்கரவாதிகளைவிட அதிகமாக மக்களைக் கொன்றது அமெரிக்கக் கூட்டுப்படைதான் என்பது தெரியவந்தது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு, அமெரிக்கா மீண்டும் அதே குற்றச்சாட்டுக்குள்ளாகியுள்ளது. 18 ஆண்டுகள் கழிந்தும் அமெரிக்காவால் ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறவில்லை. இன்றும் 14 ஆயிரம் துருப்புகள் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ளன. "2020 இற்குள் வெளியேறுவோம்" என்கிறது அமெரிக்கா.

தங்கள் ஆட்சி கவிழக் காரணமாக இருந்த அமெரிக்காவை, தலிபான்கள் முழுமையாக நம்பவில்லை. தலிபான்களுடனான அமைதிப் பேச்சுவார்த்தை ஏழு சுற்றுகள் முடிவடைந்த பிறகும், 'அமெரிக்கப் படைகளை வாபஸ் வாங்குவது, பயங்கரவாத தாக்குதல்களைத் தடுப்பது' என்னும் தலிபானின் இரு முக்கிய குறிக்கோள்களும் இன்னும் நிறைவேறவில்லை.

**ஐ.நா. வெளியிட்ட அதிர்ச்சி ரிப்போர்ட்**

ஆப்கானிஸ்தானில் குண்டு வெடிப்புகளும் தற்கொலைத் தாக்குதல்களும் உயிரிழப்புகளும் அதிகரித்தனவே தவிர, குறையவில்லை. ஜூலை 28இல் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் உதவி ஜனாதிபதி வேட்பாளர் அமருல்லாஹ் சாலே மயிரிழையில் உயிர் தப்பினார். "அமெரிக்கத் துருப்புகள் வெளியேறும் வரை அமைதி திரும்பாது. குறைந்த பட்சம் செப்டெம்பரில் நடக்கவிருக்கும் பொதுத் தேர்தல் வரை இந்த நிலையில் மாற்றம் இருக்காது. தங்களைப் பலமுள்ளவராகக் காட்டிக் கொள்ள, இரு தரப்பினரும் வன்முறையைத் தூண்டி விடுகின்றனர்" என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 20 ஆயிரம் அப்பாவி மக்கள், 45ஆயிரம் ஆப்கானிஸ்தான் பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். த்லிபான்களுக்கும் அதே அளவுக்கு இழப்பு. கூட்டுப் படை, 3,550 வீரர்களை இழந்துள்ளது. அதில் 2ஆயிரம் பேர் அமெரிக்கர்கள். பயங்கரவாதத்துக்கு எதிராகத் தொடங்கப்பட்ட போர், அப்பாவி மக்களைக் கொன்று கொண்டிருக்கிறது.

அமைதிப்படையே மக்களை வேட்டையாடுவது எந்தவிதத்தில் நியாயம்? கேட்க நாதி யில்லாததால், வேலியே பயிரை மேய்கிறது!

# காடு அழிப்பு கனிமவள கொள்ளை பழங்குடிகளை விரட்டும் பிரேசில்



உலகின் மழைக்காடுகளில் மூன்றில் இரு பங்குள்ள அமேசான் காடுகளை, வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரில் மிக வேகமாக அழிக்கும் செயலை தீவிரமாகச் செயற்படுத்தி வருகிறது, ஜனாதிபதி போல் சோனோரோ தலைமையிலான பிரேசில் அரசு காடுகள் அழிப்புக்காகச் செய்யக் கூடாத பல செயல்களையும் முன்னெடுத்து வருகிறது. ஒரு போரில் எதிரியை வீழ்த்த வேண்டுமானால், அவன் படைத்தளபதியை வீழ்த்த வேண்டும். இப்போது அதைத்தான் போல்சோனோராவின் அரசும் செய்து வருகிறது.

அமேசான் காட்டில் சில இடங்களில் தங்கம், மாங்கனீஸ், இரும்பு மற்றும் தாமிரம் ஆகிய தாதுகள் அதிக அளவில் உள்ளன. அவற்றை எடுக்கும் பணியில் அரசு அனுமதியுடன் சில நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. வடக்கு பிரேசில், அமாபா மாநிலத்தில் உள்ள அமேசான் காட்டில் உள்ள ஒரு பழங்குடியின கிராமத்தைக் கைப்பற்றுவதற்காக, பழங்குடியினத் தலைவரான எமிரா வாஜாபியைக் கொன்றிருக்கிறார்கள் தங்க சுரங்கப் பணியாளர்கள். பயங்கரமான ஆயுதங்களால் அவரைத் தாக்கி ஆற்றில் வீசியிருக்கிறார்கள்.

அமாபாவில் ஆறு இலட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் டசின் கணக்கான கிராமங்களில், வாஜாபி சமூகத்தைச் சேர்ந்த பழங்குடியினர் சுமார் 1,200 பேர் வாழ்ந்து வருகிறார்கள். அவ்வப்போது, தாது எடுக்கும் பணியாளர்களுக்கும் இந்தப் பழங்குடியின மக்களுக்கும் இடையே சிறுசிறு மோதல்கள் நிகழும்.

ஆனால் இந்த முறை, பழங்குடி யினத் தலைவர் எமிரா வாஜாபி கொடூரமா கக் கொல்லப்பட்டு, பழங்குடியின கிராம மான விடுடு ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிராமப் பழங்குடிகள், 40 நிமிடப் பயண தூரத்தில் உள்ள மாதிரி கிராமத்துக்குத் தப்பிச் சென்றுவிட்டனர். சுரங்கப் பணியாளர்கள் தரப்பில் இருந்து, 'திரும்பி வர முயற்சி செய்ய வேண்டாம்' என அவர்களுக்கு எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

'வளர்ச்சிப் பாதையில் நாட்டைக் கொண்டு செல்ல வேண்டும்' என்பதில் மும்முரமாக இருக்கிறார் 'வலதுசாரி ஜனாதிபதி போல் சோனோரோ. பழங்குடியின மக்கள் வாழும் அந்தக் காட்டுப் பகுதி, பெரிய பரப்பளவைக் கொண்டது. அதனால், 'வளர்ச்சிக்காகக் காப்புக்காடுகளின் பல பகுதிகளில் சுரங்கப் பணிகள் மேற்கொள்ளப்படும். பழங்குடியின மக்கள் குடியிருப்புகள், பணக்கார நிலப்பரப்பில் இருக்கின்றன' எனச் சொல்லி, சுரங்கப் பணிகளுக்கு சமீபத்தில் அனுமதி கொடுத்தார் போல்சோனோரா. சட்ட விரோதமான சுரங்கத்தையும் பழங்குடியின இருப்புகளின் மீது படையெடுப்பையும் அரசு ஊக்குவிப்பதாக இயற்கை ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

உள்நாட்டு உரிமைகள் காக்கும் நிறுவனமான பனாய், 'கடுமையான ஆயுதம் ஏந்திய 10 முதல் 15 சுரங்கப் பணியாளர்கள் குழு, வாஜாபி பழங்குடிகள் வாழும் விடுடு கிராமத்தைத் தாக்கி அழிக்கும் செயலில் இறங்கியிருக்கிறது' என்று குற்றம் சாட்டியிருக்கிறது. இந்தச் சம்பவம், பிரேசில் முழுக்க உள்ள பூர்வீக தேசங்களில் மோசமான சூழலை ஏற்படுத்தும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் நடந்த பகுதிக்கு வந்த பிரேசில் மத்திய பொலிஸார், 'விசாரிக்கிறோம்' என்று வழக்கம்போல் சொல்லிவிட்டுச் சென்றிருக்கின்றனர். பிரேசிலின் பழங்குடியின மக்கள் நீண்டகாலமாக சுரங்கத் தொழிலாளர்கள், பண்ணையாளர்கள் ஆகியோரின் தாக்குதலை எதிர்கொண்டு வருகிறார்கள். ஆனால், கடந்த 30 ஆண்டுகளில் இது மிகவும் மோசமான படையெடுப்பாகக் கருதப்படுகிறது.

இந்த விவகாரம்குறித்து பழங்குடியினர் பாதுகாப்புச் செயற்பாட்டாளர் தனராஜிடம் பேசினோம். "இங்கே நடப்பது ஒன்றுதான். ஒரு மெல்லிய கோடு... ஒரு பக்கம் காடுகளை தெய்வமாகப் பார்க்கும் பழங்குடிகள். மறுபக்கம் காடுகளைப் பணமாகவும் வளர்ச்சியாகவும் பார்க்கும் பணம் குடிகள். இப்போது பிரேசிலில் நடந்திருப்பது, அப்பட்டமான அத்துமீறல். ஆபிரிக்க நாடுகளில் சுரங்கத் தொழில் சட்டவிரோதமாக நடந்து வருகிறது. அவற்றை அரசாங்கமும் கண்டுகொள்வதில்லை. அப்படி வெட்டி எடுக்கப்படும் கனிமங்களை அவர்களிடமிருந்து வாங்கிக்கொள்கிறது.

இப்படி கனிமங்கள் எடுக்கும் தனியார் நிறுவனங்கள், வெளிநாடுகளில் அதிகம் உள்ளன. இவர்கள் தங்களுக்கென தனியாக ஒரு இராணுவத்தையே கைவசம் வைத்திருப்பார்கள். அதை வைத்து, தங்களுக்குத் தேவையானவற்றை நிறைவேற்றிக் கொள்வார்கள். இப்போது பிரேசிலிலும் அதுதான் நடந்திருக்கிறது.

உலகமயமாக்கல் கொள்கையால் காடுகள் அழிக்கப்பட்டதுதான் மிச்சம். அரசாங்கங்கள் அமையாததற்கு முன்னர், ஓர் இடத்தில் இருக்கும் நிலமும் நீரும் பூர்வகுடிகளுக்கே சொந்தமாக இருந்தன. அப்போது எதுவும் மாசுபடாமல் சுத்தமாகத்தான் இருந்தது. இப்போது பூர்வகுடிகள் விரட்டப்பட்டு, நிலமும் நீரும் ஆக்கிரமிக்கப்பட்டு விஷமாகியுள்ளன. இனிவரும் காலங்களிலும் பிரேசிலில் நடக்கப்போவதும் இதுதான்" என்றார்.

பிரேசில் பிடியிலிருந்து பழங்குடிகளையும் காடுகளையும் காப்பாற்றப்போவது யார்?

# இளவயதில் டென்னிஸ் கோகோ சாதனை


2019 ஜூலை... டென்னிஸ் விளையாட்டின் பெரும் கிராண்ட் ஸ்லாம்களில் ஒன்றான விம்பிள்டன் போட்டி, இங்கிலாந்தில் நடந்துமுடிந்தது. இந்த விம்பிள்டனில் ஆச்சர்யம், 15 வயதேயான காரி கோகோ காஃப். மிக இளம் வயதில் விம்பிள்டன் போட்டியில் விளையாடத் தகுதிபெற்ற வீராங்கனை. முன்னணி வீராங்கனைகளுக்கு அதிர்ச்சி தோல்வியைப் பரிசளித்து உலகின் கவனம் ஈர்த்தார்.

யார் இந்த கோகோ?

ஐந்து முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ள வீனஸ் வில்லையம்ஸை, விம்பிள்டனின் முதல் சுற்றிலேயே வீழ்த்தினார் கோகோ. நேர்த்தியான ஷொட்ஸ், போராட்ட குணத்துடன் வெளிப்பட்ட கோகோவின் ஆட்டத்துக்கு எக்கச்சக்க ரசிகர்கள். அவரிடம் இருந்த தன்னம்பிக்கையே இந்த வெற்றியைப் பரிசளித்தது.

கொகோவின் 'ரோல் மொடல்' யார் தெரியுமா? அவர் வீழ்த்திய வீனஸ் வில்லியம்ஸ்தான். 'பல வருட அனுபவம்பெற்ற வீனஸ் வில்லியம்ஸ், எத்தனை கிராண்ட்ஸ்லாம் முதல் சுற்றுகளை விளையாடி இருப்பார்? அவருடன் சின்னப் பெண்ணாகிய நான் மோதுவதா? இதில், நிச்சயம் வீனஸே வெல்வார் என்று தனது ரோல் மொடல் மீது நம்பிக்கை வைப்பதா, தனக்குக் கிடைத்திருக்கும் முதல் வாய்ப்பில் வெற்றிபெற்று தன்னைத் தயார்படுத்துவதா?' என்று கோகோ யோசித்தார்.

கோகோ இரண்டையும் செய்தார். சிறு வயதிலிருந்தே வீனஸின் ஆட்டங்களைப் பார்த்து வளர்ந்த கோகோவ்க்கு, அவரை எதிர்கொள்வதில் பெரிய சிரமமில்லை. எந்த இடத்தில் வீனஸ் பலவீனமடைகிறாரோ, அந்த இடத்தை கோகோ பயன்படுத்தினார். ஏழு வயதில் தொடங்கிய கோகோவின் டென்னிஸ் பயிற்சி, இந்தப் போட்டியில் கைகொடுத்தது. முடிவு, 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் போட்டியை வென்று, டென்னிஸ் நட்சத்திரமானார்.



இரண்டாவது, மூன்றாவது சுற்றுகளையும் வென்ற கோகோ, நான்காவது சுற்றில் முன்னணி வீராங்கனை ஷிமோனா ஹலெப்பை எதிர்கொண்டார்.

போட்டியின் தொடக்கம் முதலே ஷிமோனாவை எதிர்கொள்வதில் இருந்த சவாலை கோகோ உணர்ந்திருந்தார். 6-3 என முதல் செட்டை இழந்தார்.

இரண்டாவது செட்டில் கடைசி வரை போராடினார். ஆனால், கோகோவால் வெற்றிபெற முடியவில்லை. ஷிமோனாவிடம் தோல்வியடைந்து, விம்பிள்டனிலிருந்து வெளியேறினார்.

அவர் டென்னிஸ் கோர்ட்டைவிட்டு வெளியேறும் வரை கைதட்டல்கள் ஒலித்துக்கொண்டே இருந்தன. கோகோவின் விடாமுயற்சிக்கு ரசிகர்கள் தந்த பரிசு அது.

விம்பிள்டன் தொடர் ஆரம்பத்தில், டென்னிஸ் தரவரிசையில் 313ஆம் இடத்தில் இருந்த கோகோ, தொடரின் முடிவில் 141 ஆவது இடத்துக்கு முன்னேறி அசத்தினார். வெற்றிபெற்றபோது என்ன மனநிலையில் இருந்தாரோ, அதே மனநிலையில்தான் தோல்வியையும் எதிர்கொண்டார். தோல்விக்குப் பிறகு கோகோ சொன்னது, "இதுதான் ஆரம்பம்!"

வெற்றிகளும் தோல்விகளும் மாறி மாறி வருபவை. வெற்றி உற்சாகம் தந்து அடுத்தகட்டத்துக்கு நகர்த்தும். தோல்வி நமது தவறை உணர்த்தும். அதை, அடுத்த வெற்றிக்கான பாடமாக எடுத்துக்கொள்ள வேண்டும். அது நமக்குப் பிடித்த விடயமாக இருந்தால், தோல்வி ஒரு விடயமாகத் தெரியாது.

பாட்டு, நடனம், விளையாட்டு என எந்தத் துறையாக இருந்தாலும், உங்களுக்குப் பிடித்ததைத் தேர்ந்தெடுத்து அசத்துங்கள். ஏனென்றால், கோகோவைப் போல உங்களுக்கும் இதுதான் ஆரம்பம்! (க)

# வியப்பூட்டும் விளையாட்டுத் துளிகள்

உலகம் முழுவதும் போட்டிகளாக நடத்தப்பட்டு, பல்வேறு நாடுகள் பங்கேற்கும் விளையாட்டுகள் பல உள்ளன. அவற்றில் சிலவற்றின், வியப்பூட்டும் சில துளிகள்...

- உலகில் மிக அதிக நாடுகள் விளையாடும் குழு விளையாட்டு, காற்பந்து. ஆனால், ஒரு காலத்தில் இந்த விளையாட்டுக்குத் தடைகள் இருந்தது என்றால் நம்புவீர்களா? பண்டைக் காலம் முதலே வெவ்வேறு வடிவங்களில் விளையாடப்பட்ட இதற்கு, இடைக் காலத்திலும் நவீனகாலத்தின் தொடக்கத்திலும் தடைகள் போடப்பட்டன. வன்முறை தூண்டப்படுவதாகவும், ரவுடிகள் போன்று விளையாடுவதாகவும் சொல்லி, இங்கிலாந்திலும் ஐரோப்பாவின் பிற பகுதிகளிலும் 1324 முதல் 1667 ஆம் ஆண்டுவரை உள்ளூர்ச் சட்டங்களால் தடைசெய்யப்பட்டது.




- **Gentlemen's game** என்று அழைக்கப்படும் கிரிக்கெட் விளையாட்டின் பிறப்பிடம் இங்கிலாந்து. அந்த நாட்டின் உயர் பதவியில் இருப்பவர்கள், தங்களின் பொழுதுபோக்குக்காகவும் விடுமுறை நாளைக் கழிப்பதற்காகவும் நாட்கணக்கில் தொடரும் வகையில் விளையாடினார்கள். இங்கிலாந்தின் காலனி ஆதிக்கத்தில் இந்தியா, இலங்கை எனப் பல்வேறு நாடுகள் இருந்தபோது, அந்தந்த நாடுகளில் அதிகாரிகளால் பரவியது. இன்று சர்வதேச அளவில் பல நாடுகளுக்குப் புகழ்பெற்றுத் தந்தாலும், பல நாடுகளின் மரபு விளையாட்டுகள் மறைந்துபோக கிரிக்கெட்டும் முக்கிய காரணமாக அமைந்தது.
- உலக அளவில் மிக அதிகமான ரசிகர்களைக்கொண்ட உள்ளரங்க விளையாட்டு, டென்னிஸ். இந்த விளையாட்டுக்கும் கிரிக்கெட்டுக்கும் ஒரு தொடர்பு உண்டு. ஆம்! இந்த விளையாட்டுக்கான பல் புதிய விதிமுறைகளை உருவாக்கியது, மெல்பேர்ன் கிரிக்கெட் கிளப். 1875 ஆம் ஆண்டில் இந்த விதிமுறைகள் வரையறுக்கப்பட்டன.
- இன்று உயர்ரக நவீன விளையாட்டுகளில் ஒன்றாகச் செர்ல்லப்படும் பந்துருட்டு **(Bowling)**, 5,000 ஆண்டுகளுக்கு முன்னரே பண்டைய எகிப்து நாட்டில் விளையாடப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன. ஐரோப்பாவிலிருந்து குடியேறியவர்கள் மூலமாக இது அமெரிக்காவுக்குப் பரவியது. பந்தை உருட்டிவிட்டு, **`Pin'** என அழைக்கப்படும் கட்டைகளை வீழ்த்த வேண்டும். இவற்றில் பல வகைகள் உண்டு. அமெரிக்காவில் விளையாடப்படும் "டென் பின் பௌலிங்" **(Ten-pin bowling)** வகையே உலகம் முழுவதும் பிரபலமானது. 1952 ஆம் ஆண்டில்தான், தானியங்கி முறை வந்தது. அதற்கு முன்னர், கைகளால் ஒருவர் அடுக்குவார்.
- கனடாவில் பிறந்து, ஐக்கிய அமெரிக்காவில் குடியேறி, சர்வதேச கிறிஸ்துவ இளைஞர் மன்றத்தின் வழிகாட்டியாக விளங்கியவர், ஜேம்ஸ் நெய்ஸ்மித். இவர் ஓய்வு நேரத்தில் தனது வீட்டு பல்கனியில் கூடையைத் தொங்கவிட்டு விளையாட, அப்போது (1891) பிறந்ததுதான் கூடைப்பந்தாட்டம். அவரே 13 விதிகளைத் தொகுத்தார். அப்போதெல்லாம், காற்பந்தாட்டப் பந்தினாலேயே விளையாடப்பட்டது. பின்னர், இதற்கென மண் போன்ற வெளிர் நிறத்தில் பந்து உருவானது. இன்றைய செம்மஞ்சள் நிறமுள்ள பந்து, 1950 ஆம் ஆண்டில், டொனி ஹின்கிள் **(Tony Hinkle)** என்பவரால் அறிமுகம் செய்யப்பட்டது.
- இன்று ஆங்கிலேயர்களால் அதிகம் விரும்பி விளையாடப்படும் விளையாட்டு போலோ. குதிரைமீது அமர்ந்தவாறு நீண்ட கழியினால் பந்தை அடித்து ஆடும் இது, 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் பாரசீகர்கள் விளையாடியது. அங்கிருந்து இந்தியர்கள் இதை அறிந்து வந்து விளையாடினார்கள். இந்தியா காலனி ஆதிக்கத்தில் இருந்தபோது, ஆங்கிலேயர் மூலமாக மற்ற நாடுகளுக்குப் பரவியது.

# மனோதிடம்

அன்பார்ந்த சங்குநாத வாசகர்களுக்கு அன்பான ஜிம்மிக்குட்டியின் இதமான காலை வணக்கம் உரித்தாகட்டும். 'ஆடிக்காத்திலை அம்மியம் நகரும்' என்று சொல்லுற மாதிரி ஒரே தென்னோலை, கமுகோலை, மட்டை, பாளை என்று தொப்புத் தொப்பென்று சுழன்று கொண்டு வந்து விழுகிற கோலத்தைப் பார்க்கப் பயமாக் கிடக்கு. ஒரு தேங்காயென்ன ஒரு குரும்பட்டி விழுந்தாலே என்ரை குடிமுழுகிப் போடும். நான் இப்பெல்லாம் தாவாரத்திலை கூட நிக்கிறேல்லை. பெரியவரின்ரை காலடியிலை தான் கிடக்கிறனான். ம்...

கோயில் குளங்களெல்லாம் சனக்கூட்டம் திரண்டு திரண்டு நிக்குதுகள். எவ்வளவுதான் மைக்போட்டுக் கத்திக் கத்திச் சொன்னாலும் எங்கடை சனம் கேட்குதே. தங்கநகைமாளிகைப் பொம்மையள் மாதிரி ஒரே ஜெகஜோதியா நகையளை அள்ளிப்போட்டு ஆசை காட்டிக் கொண்டு திரியிறதாலை கள்ளனுக்கும் கொண்டாட்டம். பெண்களும் இந்தத் தொழிலைத் திறம்படச் செய்யினமாம். ஆடம்பரம், படாடோபம், நகை நட்டு என்று வெளியலங்காரத்தைக் காட்டி



உலகத்திலை மற்றவை முன்னாலை பெருமை தேடுறவை கொஞ்சம் யோசிக்கலாம் தானே. படிச்சு, பெரிய பட்டம் வாங்கி தலை நிமிர்ந்து மேடையிலை நிக்கிற பெருமைக்கு நிகர் இருக்குதே. எளிமையான அழகுக்கு நிகரே கிடையாது என்று பெரியவர் அடிக்கடி சொல்லுவார். உண்மையான நகை மாதிரியே இப்ப போலி நகைகளும் வந்திட்டுது. ஆனால் அதுகளைப் போடுறவை பாடும் அதோகதிதான். ம்...ஆறறிவு படைச்ச மனிசருக்குத் தெரியாத விசயமேஇது சங்கிலிஅறுத்தாலென்ன கழுத்தையே அறுத்தாலென்ன அதது அவனவன்பாடு. கேற் திறக்கிற சத்தம் கேட்குது. பாலாண்ணைசின்னவனைத் தூக்கிக் கொண்டு வாறார். அவனுக்கு நாலு வயசு-ஆனால் அதுக்கு ஏத்த வளர்ச்சி இல்லை. ஒரு நோஞ்சான் மாதிரி இருக்கிறான். ஆனால் சிரிச்சுக் கதைச்சு விளையாடுறான். ம்...பாவம் பாலாண்ணையைத் தான் பார்க்க முடியேல்லை. ஒரே தாடி, மீசையோடை காஞ்சுபோய் வாறார். பெரியவர் உற்றுப் பார்க்கிறார். பிள்ளையைப் பற்றி ஏதேனும் கவலை இருக்குமோ தெரியேல்லை. பெரியவர் ஆதரவாத் தலையாட்டி இருக்கச் சொல்லுறார். ம்... கதைக்கத் தொடங்கினாத் தானே பிரச்சினை தெரியும்.

"என்ன பாலா பிள்ளைக்கு வருத்தம் சுகம். ஆனால் உனக்கு சேலைன் ஏற்ற வேணும் போல கிடக்கு. கண்ணைச்சுத்திக் கருவளையம் போட்டுக் கிடக்கு. முகமே காய்ஞ்சு போய் தாடி, மீசை இதென்னப்பா கோலம். நானறிஞ்ச பாலா இப்பிடியில்லையே..." பெரியவர் ஊடுருவிப் பார்க்கிறார். பிள்ளை லதாக்குட்டியோடை உள்ளை போக பாலா பெருமூச்சு விடுறார்.

"இல்லை சேர். ஒண்டு மாதிரி ஒண்டு ஒரே பிரச்சினையாக் கிடக்குது. அந்தப் பெரிய பள்ளக் காணியை மண்ணைப் போட்டு நிரப்பி மரக்கறித் தோட்டம் போட்டு பொன்னாக் குவிக்கிற எனக்கு எல்லாமே வெறுத்த மாதிரிஒரேசலிப்பாக் கிடக்குது. ஆனபடியான நித்திரை வருதில்லை. 'சுருக் சுருக்' எண்டு தலைவலி ஒண்டு வந்து உயிரை வாங்குது சேர். என்னை அறியாத ஒரு பயம். படக் படக்கெண்டு என்ரை இதயம் அடிக்கிற சத்தம் எனக்கே கேட்குது. பெரும் எடுப்பிலை தொழிலைத் தொடங்கிப் போட்டு...எனக்கு ஏதாவது வந்து என்ரை குடும்பம் கலங்கிப் போடுமோ என்று ஒரு பயம். யாருமில்லாமல் தனிய நிக்கிற ம்ாதிரி... ஒன்றும் சரியில்லை சேர்..."

மடக்கு மடக்கெண்டு தண்ணியைக் குடிக்கிறார் பெரியவர். முகத்தை நிமிர்த்தி ஒரு தலையாட்டத்தோடு தொடங்கிறார்.

"பாலா...கொழும்பை விட்டுக் குடும்பத்தோடை இஞ்சை வரேக்கை ஓராயிரம் குழப்பத்தோடை வந்தனி. ஆனால் இஞ்சை வந்து தொழில் தொடங்கி அந்த மாதிரி வாழத் தொடங்கி சமூக சேவைகளும் செய்து ஒரு நல்ல அங்கீகாரத்தை வாங்கித் தலைநிமிர்ந்தவன் நீ. குடும்பத்தை அளவுக்கதிகமா நேசிச்சுப் பார்த்துப் பார்த்து எல்லோருக்கும் எல்லாம் நிறைவாச் செய்ய வேணும் என்று ஓய்வில்லாமல் உழைச்சு உன்னைக் கவனிக்காமல் இப்ப வந்து குழம்பிப் போய் நிற்கிறாய். நீ ஒரு கற்பனைக் கடந்த சோதி, மனைவிக்கு வருத்தமெண்டால் நீ மயங்கி விழுந்தனி, பிள்ளைக்குக் காய்ச்சலெண்டால் டொக்டரை எதிர்த்துக் கத்தினாய், ரீச்சர் பிள்ளையை ஏசிப் போட்டா எண்டு படபடப்போடை அதிபரிட்டைப் போகப் போறன் எண்டு வெளிக்கிட்டனி. தம்பி ஒரு பிரச்சினையும் இல்லை எண்டால் நல்லாத் தானய்யாஇருக்கும். ஆனால் எதிர்ப்படுகிற பிரச்சினைக்கு முகம் கொடுக்கிற தைரியத்தை நீ கொழும்பில விட்டிட்டு இங்கை ஒரு பலவீனமான தந்தையா, கணவனா, குடும்பத் தலைவனா மாறிட்டாய். இடதுகை வலிச்சால் ஹாட் எண்டிறாய், தலை சுத்தினால் பிரஷர் எண்டிறாய். முதலிலை உன்னை நீ அறி- குழப்பம் இருந்தால் ஒரு முழுமையான பிளட் ரெஸ்ற் எடு- ஒரு நல்ல டொக்டரைப் போய் கலந்தாலோசி. உனக்குக் கடன் கிடையாது. போதும் போதும் என்று சொத்துத் தேடி வைச்சிருக்கிறாய். எல்லா நிறைவுகளும் உன்னட்டை இருக்கு. நல்ல கடவுள் நம்பிக்கையும் இருக்கு. அருமையான குழந்தைகள், அன்பான மனைவி...ஐயா பாலா உனக்கிருக்கிற வளங்கள், ஆசீர்வாதங்களை எண்ணிப் பார். ஒருகுறையும்இல்லைஎண்டு உன்னையே நீ தேடிப் பார். உனக்கு உரியதுதான் உன்னோடிருக்கும். உனது சந்தோசம் நிறைவு எல்லாத்துக்கும் நீ தான் பொறுப்பு. உனக்கு எதிரிகளே கிடையாது. உன்னைச்சூழ நல்ல அன்புள்ள உறவுகள், நட்பு வட்டம் எல்லாம் இருக்கு. நோய் என்று நீ படுத்ததே கிடையாது. நீ ஒரு நிறைவானவன், மகிழ்ச்சியானவன், அன்பானவன், அழகானவன் என்று உன்னையே நீ நேசிச்சுத் தட்டிக் கொடுத்துப்பார். மனத்திடம்குறையும் போதெல்லாம் பெருவிருட்சங்களைப் பார். ஒரு கடுகளவு விதைதான் அந்தப் பெரிய விருட்சத்தைத் தோற்றுவித்தது என்ற அதிசயத்தை உனக்குள்ளேயே நீ உணர்ந்து அனுபவித்துப் பார்...நீ அற்புதமானவன் பாலா" பாலாண்ணை மந்திரத்தாலை கட்டுப்பட்டது போல சிலையாகிறார். பார்த்தியளே பெரியவரின்ரை கெட்டித்தனத்தை.ம்... ம்... சரி நான் போட்டு வாறன்.

திருமதி.பாரதி கணேஷ்
சுன்னாகம்.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : மாட்டுக்கார வேலன்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



ட்ரியோ ட்ரியோ ட்ரியோ ட்ரியோ ட்ரு...
சத்தியம் நீயே தரும தாயே
குழந்தை வடிவே தெய்வ மகளே
சத்தியம் நீயே தரும தாயே
குழந்தை வடிவே தெய்வ மகளே

குங்கும கலையோடு குலம் காக்கும் பெண்ணை
குணத்தில் பசுவென்று சொல்வார்கள் கண்ணே
குங்கும கலையோடு குலம் காக்கும் பெண்ணை
குணத்தில் பசுவென்று சொல்வார்கள் கண்ணே

காலையிலே உன் முகம் பார்த்த பின்னே
காலையிலே உன் முகம் பார்த்த பின்னே
கடமை செய்வாள் எங்கள் தமிழ் நாட்டு பெண்ணே
ட்ரியோ ட்ரியோ ட்ரியோ ட்ரியோ ட்ரு...

சத்தியம் நீயே தரும தாயே
குழந்தை வடிவே தெய்வ மகளே
சத்தியம் நீயே தரும தாயே
குழந்தை வடிவே தெய்வ மகளே

வளர்த்தவரே உன்னை மறந்து விட்டாலும்
அடுத்தவரிடத்தில் கொடுத்து விட்டாலும்
வளர்த்தவரே உன்னை மறந்து விட்டாலும்
அடுத்தவரிடத்தில் கொடுத்து விட்டாலும்
வளர்ந்த இடத்தை நீ மறக்காத தெய்வம்
வளர்ந்த இடத்தை நீ மறக்காத தெய்வம்
வாய் மட்டும் இருந்தால்
நீ மொழி பேசும் தெய்வம்

ட்ரியோ ட்ரியோ ட்ரியோ ட்ரியோ ட்ரு...
சத்தியம் நீயே தரும தாயே
குழந்தை வடிவே தெய்வ மகளே
சத்தியம் நீயே தரும தாயே
குழந்தை வடிவே தெய்வ மகளே

தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு
சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசு மாடு
தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு
சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசு மாடு
பொன்னையே தந்தாலும் உனக்கேது ஈடு
பொன்னையே தந்தாலும் உனக்கேது ஈடு
பூப்போலே வைத்துன்னை காப்பதென் பாடு
பூப்போலே வைத்துன்னை காப்பதென் பாடு

சத்தியம் நீயே தரும தாயே
குழந்தை வடிவே தெய்வ மகளே
சத்தியம் நீயே தரும தாயே
குழந்தை வடிவே தெய்வ மகளே



# தெங்கு தொழிற்துறையில் தங்க ஒளிக்கீற்று வடக்கிற்கு

தெங்கு முக்கோண வலயத்தை மையமாகக் கொண்டு இலங்கையில் தெங்கு பயிர்ச்செய்கை பரவியுள்ளது. அதற்கு அப்பால் யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை மையமாகக் கொண்டு குறிப்பிடத்தக்க தெங்கு அறுவடை கிடைக்கிறது.

மனித குடியேற்றத்திற்குக் கூட பொருத்த மில்லாத காலத்தில் வட மாகாணத்தில் தெங்குப் பயிர்ச்செய்கைக்கு ஏற்பட்ட அழிவு பற்றி தொடர்ந்து விபரிப்பதற்கு அவசியமில்லை. அவ்வாறான பின்னணியில் தென்னை மரங்களில் இருந்து பெற்றுக்கொள்கின்ற நன்மைகள் உணவுக்கு பெற்றுக் கொள்வதைத் தவிர்த்து அதற்கு அப்பால் தொழிற்துறையில் ஈடுபட்டு உற்பத்தித் துறை மற்றும் அபிவிருத்திகளில் இருந்து விலகி இருந்ததோடு கடற்கரை ஓரத்தில் மிகவும் பொருத்தமாக சூழலில் மிகவும் சிறந்த அறுவடை ஒன்றை பெற்றபோதும் அது வீட்டுப் பயன்பாட்டுக்கு மாத்திரம் பயன்படுகின்ற நிலைமை இருந்தது. அதனை அடையாளம் கண்டு கிடைக்கின்ற தெங்கு பயிர்ச்செய்கைக்கு நிகராக தெங்கு பயிர்ச்செய்கை மற்றும் உற்பத்தித் துறையை முன்னேற்றகரமான நிலைமைக்கு கொண்டுவருவதற்கு தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

2018 ஆம் ஆண்டு தரவுகளின்படி வட மாகாணத்திற்குள் இருக்கின்ற 26194 ஏக்கர் தெங்கு காணி அளவில் 95.2 மில்லியன் காய்கள் தெங்கு அறுவடை பெறப்பட்டுள்ளது. கிடைக்கின்ற தெங்கு அறுவடை இன்று தெங்கு நுகர்வுக்கு மாத்திரம் பயன்தரக்கூடிய நிலையில் இருப்பதால் தற்போது தென்னை மரப்பட்டை மற்றும் தேங்காய்ச் சிரட்டை என்பனவற்றுடன் தொடர்புடைய உற்பத்தி தொழிற்துறை மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் வட மாகாணத்திற்குள் மீண்டும் தெங்கு பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டதால் அதன் அறுவடை அடுத்த மாதம் தொடக்கம் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அறுவடை கிடைக்க ஆரம்பித்த உடன் தெங்கு சார்புடை தொழிற்துறைகளை அதிக அளவில் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது. வடக்கு மக்களுக்கு புதிய அனுபவம் ஒன்றை பெற்றுக்கொடுத்து முற்றத்தில் உள்ள தென்னை மரத்தில் இருந்து விழும் தேங்காயை சமையலறைக்கு எடுப்பதற்கு பதில் சர்வதேசத்தை வெற்றி கொள்வதற்கு உள்நாட்டின் பெயரை உலகுக்கு கொண்டு செல்வதற்கு அந்த தேங்காயால் முடியும் என்று அவர்களின் சிந்தனை மாறி வருகிறது. புதிய தொழற்துறையில் ஈடுபட்டு பொருளாதாரத்தை வளப்படுத்துவது போன்று புதிய வாழ்க்கை முறை ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு உற்பத்தித் துறையில் பங்குதாரர் ஆவதற்கு அவர்கள் ஆர்வமாக உள்ளனர். சமையல்அறையில் இருந்து அகற்றப்படும் தேங்காய்ச் சிரட்டை, தேங்காய் மட்டை வீட்டுத் தோட்டத்திற்கு பயன்படுத்துவதை விடவும் அதன் மூலம் வருவாய் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு அந்த மக்கள் ஈடுபாடு காட்ட ஆரம்பித்துள்ளனர். விளக்குமாறு, தும்புத்தடி, கம்பளம், தரைவிரிப்பு போன்ற உற்பத்திகளை வீட்டில் இருந்தே தயாரித்து பணம் சம்பாதிக்கின்றனர். அதேபோன்று தென்னை மரத்தில் அனைத்து பகுதிகளையும் பயன்படுத்தி பணம் ஈட்டுவதற்கும் அதன் மூலம் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். பாரிய அளவில் இடம்பெறுகின்ற முறையான தொழிற்சாலைகளில் மாத்திரமன்றி இந்த பகுதிகளில் சுய தொழிலாக வீட்டில் இருந்தே உற்பத்திகளை மேற்கொள்வதற்காக தேவையான தொழில்நுட்பம், அறிவு மற்றும் ஆலோசனை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மூலம் பெற்றுத்தரப்படுகிறது. அது. வேறு யுத்த சூழல் இருந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் யுத்தம் முடிவுற்ற குறுகிய காலத்திற்குள் கிடைத்த பாரிய வெற்றியாகும். வீட்டில் இருந்து அகற்றப்படுகின்ற தென்னஞ்சிரட்டை, தென்னம்மட்டை ஆலைகளுக்கு கிடைக்கின்றன. உற்பத்தி தொழிற்சாலைகள் உருவாகின்றன. அவற்றில் தொழில்வாய்ப்புகளுக்கு இளம் பிள்ளைகள் ஈடுபடுவர்.









ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 04 தும்பு தொழிற்சாலைகள்

ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் தும்புத் தொழிற்சாலை ஒன்று

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் கௌரவ நவீன் திசாநாயக்க அவர்களின் கைகளால் திறந்துவைக்கப்படவுள்ளன

## வடக்கில் தெங்கு தொழிற்துறையை ஆரம்பிப்பது மற்றும் அந்த பகுதி மக்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தி இலங்கைக்காக அந்நிய செலாவணியை பெற்றுத்தருவதற்கு எதிர்பார்க்கிறேன்

கௌரவ நவீன் திசாநாயக்க
பெருந்தோட்ட கைத்தொழில்
அமைச்சர்



பல ஆண்டுகளுக்கு முன்னர் யுத்த சூழலுக்குள் இருந்த அந்த பகுதிகளின் மக்கள் யுத்தத்தின் இறுதிக் காலத்தில் அந்த நிலைமைக்கு விருப்பமின்றியேனும் பழகிக் கொள்ளும் நிலை இருந்தது. அதன் காரணமாக அந்த சூழல் மற்றும் மனநிலையில் இருந்து விலகி சாதாரண சமூக வாழ்வு முறை ஒன்றுக்கு பழகுவதற்கு புதிய சிந்தனைகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளனர். அதற்குத் தேவையான பொருளாதார பலம் இதன் மூலம் பெறப்பட்டுள்ளது. சம்பிரதாயமான சிந்தனைக்கு பதில் சம்பிரதாயமான தொழிற்துறைகளுக்கு தொழில்நுட்பத்தை இணைத்து புதிய சிந்தனைகளை சேர்த்து அதை தமது வாழ்க்கைத் தொழிலாக மாற்றிக்கொண்டுள்ளனர். அதிகாரசபை மூலம் பெற்றுத்தரப்படுகின்ற பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளில் பங்கேற்று புதிய தொழில்களுக்குள் நுழைவதற்கு முயற்சிக்கின்றனர். தெங்குத் துறையை கட்டியெழுப்புவதற்காக வட மாகாணத்தில் நடத்தப்படுகின்ற இந்த நிகழ்ச்சிகள் தெங்கு அபிவிருத்தி துறைகளுக்கும் சாதாரண மக்கள் வாழ்விற்கும் எழுகின்ற ஒளிக்கீற்றாக அமையும்.

குடும்ப உரிமையாக நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகளின் முன்னேற்றத்திற்கு தேவையான ஆலோசனை மற்றும் தொழில்நுட்பம் அதிகாரசபையால் பெற்றுத்தரப்படுகிறது. அதேபோன்று புதிய தொழிற்துறையை ஆரம்பிப்பதற்கும் அது தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையால் பெற்றுத் தருகின்ற செயலூக்கத்திற்கான சந்தர்ப்பமாகும். பெருந்தோட்ட அமைச்சர் கௌரவ நவீன் திசாநாயக்கவின் வெவிலி சவிய சிந்தனைக்கு அமைய செயற்பட்டு, வடமாகாணத்தில் தென்னை மரத்தின் அனைத்து பகுதிகளும் பயனுள்ள உற்பத்தி செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கு அதிகாரசபை ஆரம்பித்திருக்கும் இந்த நிகழ்ச்சி அந்த பகுதிகளின் மக்களின் வாழ்க்கை தரத்திற்கும் ஒட்டுமொத்த தெங்குத் தொழிற்துறையின் நிலையான இருப்புக்கும் சாதகமான வகையில் தாக்கம் செலுத்தியுள்ளது.



எச்.கே. உதய ரூபசிங்க
தலைவர்
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

54, நாவல வீதி, நாரஹென்பிட்ட, கொழும்பு 05.
தொலைபேசி: 011 2 322 795, 011 2 322 793
மின்னஞ்சல்: chairmancdad@gmail.com
இணையதளம்: www.cda.gov.lk

# இலங்கையை குறிவைக்கும் வல்லரசுகள்



இலங்கைத் தீவு, தெரிந்தோ தெரியாமலோ, சர்வதேச அதிகாரப் போட்டிக்குள் சிக்கிக் கொண்டு விட்டது என்பதை இப்போது எல்லோரும் ஏற்றுக் கொள்கின்ற நிலைக்கு வந்து விட்டனர்.

கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம் போன்றன சீனாவின் கைகளுக்குச் சென்றதும், ஆட்சி மாற்றத்தில் மேற்குலகின் செல்வாக்கு இருந்ததும், அதையடுத்து நடந்த நிகழ்வுகளும், இந்தியப் பெருங்கடலில், சர்வதேச சக்திகளின் அதிகாரப் போட்டிக் களமாக இலங்கையை மாற்றி விட்டது.

அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் கையில் இருப்பதைச் சுட்டிக்காட்டி, அது எதிர்காலத்தில் சீனாவின் இராணுவத் தளமாக மாற்றமடையும் ஆபத்து இருப்பதாக இந்தியா, அமெரிக்கா மற்றும் பல்வேறு மேற்குலக நாடுகளும் தொடர்ச்சியாக எச்சரிக்கை செய்து வருகின்றன.

அம்பாந்தோட்டையில் இராணுவத் தளத்தை அமைக்கும் எண்ணம் இல்லை. அது முற்றிலும் வணிக நோக்கம் கொண்டது என்று சீனா அந்தக் குற்றச்சாட்டுகளை முற்றுமுழுதாக நிராகரித்து வந்தாலும், மேற்குலகமோ இந்தியாவோ அதனை நம்பத் தயாராக இல்லை.

முன்னதாக சீனா, **BRI** எனப்படும் கடல்சார் பட்டுப்பாதைத் திட்டத்தையும் கூட, முற்றிலும் வணிக நோக்கம் கொண்டது என்று தான் கூறியது. அண்மையில் தான் சீனப் பாதுகாப்பு அமைச்சர், அது முற்றிலும் வணிக நோக்கம் கொண்டது அல்ல, இராணுவ நோக்கமும் அதில் இருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டிருந்தார்.

இவ்வாறான ஒரு நிலையில், **BRI** கூட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பாக இலங்கையுடன் சீனா தொடர் பாதுகாப்பு விவகாரக் கூட்டங்களை நடத்தி வருகிறது என்பது பலருக்கும் தெரியாத சங்கதி.

கடந்த ஜூலை மாதம் 25ஆம் திகதி இந்த பாதுகாப்பு கலந்துரையாடலின் மூன்றாவது சுற்று கூட்டம் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சுக் கட்டடத்தில் இடம் பெற்றிருந்தது. அதில், பாதுகாப்பு செயலர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, கடற்படைத் தளபதி, இராணுவத் தளபதி உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

சீனத்தூதுவர் செங் ஷியுவான், மற்றும் சீன வெளிவிவகார அமைச்சின் வெளிநாட்டுப் பாதுகாப்பு விவகார்ங்களுக்கான திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் லியூ ஷோபின் தலைமையிலான சீன அதிகாரிகள் குழுவொன்றும் இதில் பங்கேற்றிருந்தது.

இதுபோன்ற நிகழ்வுகளின் ஊடாக இலங்கையில் சீனா தளத்தைக் கட்டியெழுப்ப முனைகிறது என்ற சந்தேகங்கள் எழுவது இயல்பு.

பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்பது எதையும் முன்கூட்டியே அனுமானித்து மேற்கொள்ளப்படுவதேயன்றி, சண்டை தொடங்கிய பின்னர் தயார்படுத்துவது அல்ல.

அந்தவகையில், சீனாவின் எதிர்காலத் தளங்களாக மாறக் கூடிய இடங்களை மேற்குலகமோ இந்தியாவோ கவனம் செலுத்தாமல் இருக்க முடியாது.

அதனால் தான், தமது ஒவ்வொரு நகர்வின் போதும், அம்பாந்தோட்டை துறைமுகம் மீதான அச்சத்தை மேற்குலகமும், இந்தியாவும் வெளிப்படுத்தி வருகின்றன.

அண்மையில் சீனக் கடற்படையின் பங்கு தொடர்பான விபரங்களுடன், சீன பாதுகாப்பு அமைச்சு ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கை வெளியிடப்பட்ட மறுநாள், டில்லியில் ஒரு கருத்தரங்கில் உரையாற்றிய இந்திய கடற்படையின் தளபதி, அட்மிரல் கரம்பீர் சிங், போர்க்கப்பல் களைக் கட்டுவதற்கு மேலதிக நிதி ஒதுக் கீடுகள் தேவை என்று வலியுறுத்தியிரு ந்தார்.

அவர் தனது உரையிலும் கூட, அம்பாந்தோட்டையை சீனா தனது தளமாகப் பயன்படுத்தும் வாய்ப்பு உள்ளதை சுட்டிக் காட்டியிருந்தார். அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால், அதனை முறியடிக்கத்தக்க பலத்துடன் இருக்க வேண்டிய நிலையில் இந்தியா இருக்கிறது.

அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ், அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள, பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் என்று எல்லோருமே, அம்பாந்தோட்டை பற்றிய எதிர்கால அச்சுறுத்தலை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அவுஸ்திரேலியாவின் டார்வின் நகரில் அமெரிக்கா ஒரு பாரிய கடற்படைத் தளத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. அதற்காக 211 மில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. துறைமுக நகரான டார்வினில், அமெரிக்கா ஏற்கனவே 2500 மரைன் படையினரை நிறுத்தி வைத்திருக்கிறது.

இங்கு மேலதிகமாக 4500 மரைன் படையினரை நிறுத்தவும், இரண்டு பி-52 குண்டுவீச்சு விமானங்களையும், 12 எவ்-22 ரப்ரோர்ஸ் விமானங்களையும் நிறுத்தவும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

அத்துடன், **USS Wasp** போன்ற ஹெலிகொப்டர் தாங்கி கப்பல்கள், ஈரூடக தாக்குதல் போர்க்கப்பல்கள் உள்ளிட்ட பாரிய போர்க்கப்பல்களை நிறுத்தக் கூடிய வகையில், டார்வின் நகரில் இருந்து 25 மைல் தொலைவில், **Glyde Point** என்ற இடத்தில் அமெரிக்கா பாரிய கடற்படைத் தளத்தை அமைக்கவுள்ளது.

இதுகுறித்து **The Times** இதழில் வெளியாகிய கட்டுரை ஒன்றில், பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை முறியடிக்கும் நோக்கில் இந்த தளத்தை அமைக்க அமெரிக்கா முற்படுவதாக கூறப்பட்டிருந்தது.

அதுமாத்திரமன்றி, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா தனது தளமாக மாற்றும் வாய்ப்புகள் இருப்பதையும் கருத்தில் கொண்டே, டார்வினில் தளத்தை அமைக்க அமெரிக்கா திட்டமிடுவதாக **The Times** வெளியிட்டிருந்த செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இந்தியப் பெருங்கடலில் தான், சீனாவின் நகர்வுக்கு எதிர்நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இப்போது அதையும் தாண்டி, அவுஸ்திரேலியாவிலும் கூட, மறுத்தான் நகர்வுகளை அமெரிக்கா மேற்கொள்ளத் தொடங்கியிருக்கிறது.

அதாவது, இலங்கையில் சீனாவின் இராணுவத் தலையீட்டை மையப்படுத்தி, சர்வதேச அளவில் பாதுகாப்பு நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்ற சூழல் உருவாகியிருக்கிறது.

இவ்வாறான ஒரு கட்டத்தில் இலங்கையுடன் பாதுகாப்பு உறவுகளையும், உடன்பாடுகளையும் செய்து கொள்வதில் பல்வேறு நாடுகளும் நாட்டம் கொண்டுள்ளன.

அமெரிக்கா **VFA** எனப்படும் வருகைப் படைகள் உடன்பாடு, என்ற பெயரில் உடன்பாட்டை மேற்கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்ட போதும், அரசியல் சிக்கல்களால் முடங்கியிருக்கிறது.



ஆனாலும், கடந்த மாத இறுதியில் ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று கையெழுத்திடப் பட்டிருக்கிறது. சீனாவின் இராணுவத் தலையீடுகளை தடுக்கும் அல்லது முறியடிக்கும் வகையில் இந்தியாவும் கூட இலங்கையுடனான உறவுகளை பலப்படுத்திவருகிறது.

இலங்கை கடற்படைக்கு அண்மையில் இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை வழங்கியிருந்த இந்தியா, பாரிய ஆழ்கடல் ரோந்துக் கப்பல் ஒன்றை இலங்கைக் கடற்படைக்கு சீனா வழங்கியதை அடுத்து, ஆழ்கடல் கண்காணிப்புக்கான விமானம் ஒன்றை வழங்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளது.

இந்திய கடற்படையின் முக்கியமான அங்கமாக இருப்பது, டோனியர் 228 விமானங்களாகும். ஆழ்கடல் கண்காணிப்புக்காக இந்த விமானங்களை இந்திய கடற்படை பயன்படுத்துகிறது. ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட இந்த விமானங்கள் தற்போது இந்தியாவிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கிழக்கு கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் விக்ரமசிங்க தலைமையிலான 5 அதிகாரிகளைக் கொண்ட குழு கடந்த மாத இறுதியில் கொச்சியில் உள்ள இந்தியக் கடற்படைத் தளத்துக்கு சென்றிருந்தது.

விமானிகள், பொறியாளர்களை உள்ளிட்ட இந்தக் குழுவினர், கொச்சியில் உள்ள இந்தியக் கடற்படையின் 550 ஆவது கடல்கண்காணிப்பு ஸ்குவாட்ரனின் செயற்பாடுகள், டோனியர் 228 கண்காணிப்பு விமானத்தின் திறன், உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

டோனியர் விமானத்தில் பயிற்சிகளைப் பெறும் விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

டோனியர் விமானம் ஒன்று கடந்த பெப்ரவரி மாதமும், கடந்த ஆண்டும், கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்து, இலங்கை கடற்படையினர், விமானப்படையினருக்கு பயிற்சிகளையும் அளித்திருந்தது.

தற்போது, இலங்கை விமானப்படையிடம் ஒரே ஒரு கடல் கண்காணிப்பு விமானமே உரிய கண்காணிப்பு வசதிகளுடன் உள்ளது. எனவே, டோனியர் கண்காணிப்பு விமானத்தை வழங்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

இலங்கை விமானப்படை அண்மையில், 3 ஆவது இலக்க கடல் கண்காணிப்பு ஸ்குவாட்ரனை மீண்டும் செயற்படுத்த ஆரம்பித்துள்ள பின்னணியில் தான், டோனியர்-228 விமானத்தின்திறன் குறித்த ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

1970களில் இலங்கை விமானப்படையில் 3 ஆவது இலக்க கடல் கண்காணிப்பு ஸ்குவாட்ரன் உருவாக்கப்பட்டிருந்தது. அதில் பீச் கிராப்ட் மற்றும் செஸ்னா ஆகிய கடல் கண்காணிப்பு விமானங்கள், இடம்பெற்றிருந்தன.

எனினும், 1980களின் பிற்பகுதியில் இந்த ஸ்குவாட்ரனைக் கலைத்த விமானப்படை, அதனை 8 ஆவது இலக்க இலகு போக்குவரத்து ஸ்குவாட்ரனுடன் இணைத்திருந்தது.

போர்க்காலத்தில் கூட, செயற்படுத்தப்படாத இந்த 3 ஆவது இலக்க கடல் கண்காணிப்பு ஸ்குவாட்ரன், அண்மையில் மீண்டும் திருகோணமலை சீனக்குடா விமானப்படைத் தளத்தில் இருந்து செயற்படத் தொடங்கியுள்ளது. இந்த அணியிலேயே இந்தியாவிடம் இருந்து பெறப்படவுள்ள டோனியர் கண்காணிப்பு விமானம் சேர்த்துக் கொள்ளப்பட வுள்ளது.

இவ்வாறான உதவிகள், ஒத்துழைப்புகளின் மூலமாக இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள், சீனாவின்பக்கம் இலங்கை சென்று விடாமல் தடுக்கவும், சீனாவின் செல்வாக்கு அதிகரித்து விடாமல் தடுக்கவும் முற்படுகின்றன. அத்துடன் இலங்கையின் கடல் கண்காணிப்புத் திறனை அதிகரிப்பதன் மூலம், தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும் முற்படுகின்றன.

ஆனாலும், சீனாவும் இவற்றுக் கெல்லாம் சளைத்தது அல்ல என்பதை அவ்வப்போது நிரூபித்து வருகிறது. இவ்வாறான நிலையில், சர்வதேச அதிகார சக்திகளின் போட்டிச் சூழலுக்குள் இருந்து விலகிக் கொள்ள முடியாத நிலைக்கு, இலங்கைத் தீவு தள்ளப்பட்டு விட்டது. இனிமேல் இலங்கை, இந்தச் சூழலில் இருந்து வெளியேறுவதற்கு நினைத்தாலும் அது சாத்தியமாகப் போவதில்லை. ஏனென்றால் வெள்ளம் தலைக்கு மேல் போய் விட்டது.

# டைட்டானிக்



டைட்டானிக் கப்பல் மூழ்கிய போது அதனருகில் மூன்று கப்பல்கள் இருந்தனவாம்.

அதில் ஒரு கப்பலின் பெயர் சாம்சன். அது டைட்டானிக் மூழ்கிக் கொண்டிருந்த இடத்திலிருந்து 7 கி.மீ தொலைவில் இருந்ததாம். டைட்டானிக் அனுப்பிய "காப்பாற்றுங்கள்" என்கிற சமிக்ஞை காட்டும் வெள்ளை விளக் கொளியைப் பார்த்தனர். ஆனால் அதில் இருந்தவர்கள், சீல் எனும் கடல் விலங்கைத் திருட வந்தவர்கள். அதனால் காப்பாற்றப்போய் மாட்டிக் கொண்டால் என்னாவது, நமக்கேன் வம்பு என்று எண்ணி டைட் டானிக்கின் எதிர்த்திசையில் விரைந்து விட்டனர்.

நம்மில் பலர், நமது பாவச்செயல்களில் மட்டுமே கவனம் செலுத்தி அடுத்தவரின் துன்பங்களைப் பற்றித் துளியும் கவலைப்படாமல் இருப்போம் இந்த சாம்சன் கப்பல் போல.


அடுத்து கலிபோர்னியன் என்ற கப்பல், டைட்டானிக் கப்பலிற்கு 14 கி.மீ தொலைவில் இருந்தது. அக்கப்பலின் கப்டனும் டைட்டானிக் அனுப்பிய ஆபத்து சமிக்ஞைகளைப் பார்த்தார். ஆனால் அவர்களின் கப்பலைச் சுற்றியும் பனிப் பாறைகள் இருந்தன. இருட்டாகவும், மோசமான சூழலும் இருந்ததால், திரும்பவும் கரைக்கே போய், காலையில் புறப்படலாம் என முடிவெடுத்தனர் மாலுமிகள். உதவி கோரிய கப்பலுக்கு ஒன்றும் ஆயிருக்காது என்று அவர்களே, அவர்களுக்குக் கூறித்தேற்றிக் கொண்டனர்.

இக்கப்பலைப் போன்றவர்கள் நம்மிடையே இருக்கும்,"நம்மால் ஒன்றும் செய்ய இயலாது. சூழல், சரியில்லை, நிலைமை சரியானதும் பார்த்துக் கொள்ளலாம்' என்று எண்ணுபவர்கள்.

மூன்றாவது கப்பல் கர்ப்பாதியா. அது, டைட்டானிக்கிலிருந்து 58 கி.மீ தொலைவில் தெற்கு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தது. அப்போது கப்பலின் கப்டனுக்கு டைட்டானிக் அனுப்பிய ஆபத்து சமிக்ஞை ரேடியோ மூலம் கேட்டது. அவர் உடனே, மண்டியிட்டு இறைவனிடம் "எனக்கு வழிகாட்டு" எனப் பிரார்த்தனை செய்து, கப்பலைத் திருப்பி, டைட்டானிக்கை நோக்கி, ஆபத்தான பனிப் பாறைகளிடையே செலுத்தினார். இந்தக் கப்பல்தான் டைட்டானிக்கில் சிக்கியிருந்த 705 பேரைக் காப்பாற்றியது.

தடைகளும், எதிர்ப்புகளும், ஆபத்துகளும், பொறுப்பைத்தட்டிக் கழித்திட காரணங்களும் நிச்சயம் குறுக்கிடும். ஆனால் அவற்றை மீறிச் செல்பவர்கள் மட்டுமே உலகில் உள்ள மக்களின் இதயங்களில் நாயகர்களாக வாழ்வார்கள்.

# அதிர்ஷ்டம்



ஒருவன் காலையில் தூங்கி எழுந்தான்...இரவு தூங்க வெகுநேரம் ஆனதால் காலை எழுந்து கொள்ள நேரமாகிவிட்டது.

சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தில் 9 ஆகி விட்டதை காட்டும் விதமாக 9 மணி அடித்து ஓய்ந்தது.

குளித்து முடித்து கலண்டரில் திகதியைக் கிழித்தான். 8ஆம் திகதி போய் இன்று திகதி 9 எனக்காட்டியது.

வங்கிக்கு சென்று வரலாம் என்று வங்கிக்குச் செல்ல ஆட்டோ பிடித்தார். அதில் ஆட்டோ எண் 9 என வட்டம் போட்டு எழுதியிருந்தது...

வங்கியில் இறங்கி வங்கியில் நுழையும்போதுதான் கவனித்தான் வங்கியின் கதவு எண் 99 என இருந்தது.வங்கியின் உள்ளே சென்று கணக்கரிடம் தன்னுடைய பாஸ்புக்கை காண்பித்து பண இருப்பை சரி பார்த்தான். அதில் 9 இலட்சங்கள் உள்ளது எனக் காட்டியது.

இவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. என்ன காலையில் இருந்து நமக்கு 9 எண் மட்டுமே கண்ணில்படுகிறதே என்று அப்போது தான் அவனுக்கு நினைவுக்கு வந்தது...

இன்று ஏதோ நமக்கு இந்த 9 என்ற எண்ணில் அதிர்ஷ்டம் இருக்கிறது என்று நினைக்கிறேன்...

இந்த அதிர்ஷடத்தை எப்படியாவது பயன்படுத் திக் கொள்ள வேண்டும் என்று நினைத்தான்...

அதன்படி அந்த 9 இலட்சத்தையும் எடுக்க செக் எழுதி கொடுத்தான். அவனுக்கு வந்த டோக்கன் எண் 999 அவனுக்கு மிகு ந்த ஆச்சரியம்.

பணத்தை எடுத்துக் கொண்டு வீதியில் நடந்து செல்லும்போது எதை எடுத்தாலும் 99 ரூபாய் என கடை கண்ணில் பட்டது.

அதில்ஒரு தொப்பி அவனை கவர்ந்தது. அதை 99 ரூபாய் கொடுத்து வாங்கினான்... அப்போதுதான் அவனுக்கு குதிரைப்பந்தயம் நினைவுக்கு வந்தது.

நேராக குதிரைப்பந்தயம் நடக்கும் அந்த இடத்துக்கு சென்றான்.வாயில் எண் 9 வழி யாக உள் நுழைந்தான். அங்கிருந்த முகவரை சந் தித்தான்.

ஐயா மொத்தம் எத்தனை பந்தயங்கள் நடக்க இருக்கிறது... மொத்தம் 10 போட்டிகள் என பதில் வந்தது... அப்படி என்றால் நான் 9 ஆவது போட்டியில் பாங்கெடுத்துக் கொள்கிறேன்.

பந்தயமாக நான் 9 இலட்சத்தை கட்டுகிறேன் என்று மொத்தப்பணத்தையும் கட்டினான்.எல்லாப் போட்டிகளையும் பார்த்த அவன் 9வது பந்தயம் வந்தவுடன் தானும் கலந்துகொண் டான்.

போட்டி தொடங்கியது. 10 குதிரைகள் ஓடியதில் குதிரை எண் 9 என எண் கொண்ட குதிரையின் மீது தன் மொத்தப் பணத்தையும் கட்டினான்.

இன்று எனக்கு 9ஆல் அதிர்ஷ்டம் இருக்கிறது.. இன்றைய போட்டியில் நாம் தான் ஜெயிப்போம் என்று முழுமனதுடன் நம்பினான்.

அந்த முகவரும் இவரை அணுகி வினவினார்... ஏன் 9ஆவது பந்தயம்.. 9 எண் கொண்ட குதிரை.. 9 லட்சம்... இப்படியாய்... என கேட்டார்...

அவன் மீண்டும் நம்பிக்கையுடன் சொன்னான் இன்று எனக்கு 9ஆல் அதிர்ஷ்டம் அதனால்தான் இப்படி என்று...

போட்டி தொடங்கியது. குதிரைகள் சீறிப்பாய்ந்து ஓடின. பந்தயம் கட்டியவர்கள் பரபரப்பாய் ஆரவாரம் செய்துகொண்டிருந்தார்கள்.

போட்டி முடிந்தது.இவன் பணம் கட்டிய குதிரை ஒன்பதாவதாக வந்தது.

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1798

Search for people, places and things

## அபிஷா



தனியாக இருக்கிறேன் என்று கவலைப்படாதே தன்மானத்தோடு வாழ்கிறேன் என்று பெருமைப்படு

## சாந்தினி

தன் மனைவியை மகிழ்வாய் வைத்து அவள் மகிழ்வதைப் பார்த்து ரசிக்கும் ஆண்கள் தான் கணவன் என்ற உறவுக்குத் தகுதியானவர்கள்



## ராஜன்

உண்மையான உறவு கிடைப்பது ரொம்பக் கஷ்டம். அதைச் சின்னச் சின்னக் காரணத்திற்காக இழந்துவிடாதீர்கள். அநாதையாக தனமையில் நிற்கும் போதுதான் அதன் வலி புரியும்...



## குமணன்

படிக்காம போய்ட்டோமே என்கிற காலம் போய்.... இந்த வேலைக்கு எதுக்கு அவ்வளவு செலவு பண்ணி படிச்சு தொலைச்சோம்னு நினைக்கிற காலத்தில வந்து நிற்கிறோம்



## விஷ்வா

காத்திருப்பதுகூட சுகம்தான் காதலிக்காக அல்ல... அம்மா செய்யும் கறிக்குழம்பிற்காக



## வேணி

அன்பான அம்மாவும் தோழமையான அப்பாவும் கிடைத்த குழந்தைகள் யாரும் தடு மாறியதும் இல்லை தடம் மாறியதும் இல்லை...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 193

# மாரடைப்பு

நமது உடலில் ஓய்வில்லாமல் கடிகாரம் போல் இயங்கும் உறுப்புக்களில் இதயமும் ஒன்று. இவ் இதயத்தைத் தாக்கும் மாரடைப்பானது (Heart Attack) உயிரைப் பறிக்கக் கூடிய அபாயகரமான நோயாகும். இவ் ஆக்கத்தில் நாம் மாரடைப்பு ஏன் ஏற்படுகின்றது? மாரடைப்பிற்கான அறிகுறிகள். சிகிச்சை முறைகள். மாரடைப்பின் பின் வாழ்க்கை முறையில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் பற்றி சுருக்கமாக ஆராயவுள்ளோம்.

**மாரடைப்பு என்றால் என்ன?**

இதயத்தசைக்கான ஒட்சிசன் நிறைந்த குருதியை முடியுரு நாடிகள் வழங்குகின்றன. முடியுரு நாடிகள் ஏற்படும் கொழுப்புப் படிவுகளாலும் அக்கொழுப்புப் படிவுகளில் ஏற்படும் வெடிப்புகளில் குருதிக்கட்டிகள் படிவதாலும் முடியுரு நாடிக்குழாய்கள் முற்றாக அடைக்கப்படும் போது இதயத்தசைக்கான ஒட்சிசன் நிறைந்த குருதி இல்லாது போகிறது.

இதனால் இதயத்தசை இறப்படைகின்றது. இதுவே மாரடைப்பு ஆகும். இதன்போது இதயத்துடிப்பின் போது சுருங்கி விரியும் செயற்பாடு பாதிப்படைகின்றது. இதயத் தசையின் இறப்படையும் பகுதியின் அளவு கூடும் போது இதயத் தொழிற்பாடு குறைவடைந்து இதயப் பலவீனம் ஏற்படுகின்றது. இதனால் இறப்பும் ஏற்படலாம்.

**மாரடைப்புக்கான அறிகுறிகள் என்ன?**

1. இடது பக்க அல்லது நடு நெஞ்சில் ஏற்படும் இறுக்கிப்பிடிப்பது போன்ற நெஞ்சுவலி.

2. நெஞ்சுவலியுடன் தாடைகள் இறுகுதல் அல்லது தோற்பட்டையில் ஏற்படும் நோ.

3. நெஞ்சுவலியுடன் வியர்த்தல், வாந்தி எடுத்தல், மூச்சுவிடச் சிரமம், தலை சுற்றுதல், மயக்கம், நெஞ்சு படபடப்பு போன்றன ஏற்படல்.

4. நடந்து செல்லும் போது அல்லது பாரமான வேலை செய்யும் போது திடீரென ஏற்படும் நெஞ்சு நோ.

5. நடுநெஞ்சில் ஏற்படும் எரிவு அல்லது மேல் வயிற்றுநோ. இது வயிற்றுக் கோளாற்றுடன் சம்பந்தமானதாக இருக்கலாம் என அநேகமான நோயாளிகள் புறக்கணிப்பதுண்டு.

மேற்கூறிய அறிகுறிகளின்றியும் மாரடைப்பு ஏற்படலாம். இது (silent myocardial infarction) பொதுவாக நீரிழிவு நோயாளிகளில் ஏற்படும். அதைவிட சில நோயாளிகள் நெஞ்சுப்பகுதியில் ஏற்படும் தசை நோவை தவறாக மாரடைப்பு என்று எண்ணி வைத்தியர் உதவியை நாடுவதும் உண்டு.

**மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பை அதிகரிக்கும் காரணங்கள் எவை?**

மாரடைப்புக்கான சரியான காரணங்களைத் தெளிவாக அறிந்து கொள்வதன் மூலம் மாரடைப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தைக் குறைக்கலாம். இக்காரணங்கள் இரு வகையாவனவை.

1) மாற்றமுடியாத காரணங்கள்.

அதாவது இவை இயற்கையான காரணங்கள். இவை பற்றி நாம் தெரிந்து கொண்டாலும் கூட மாரடைப்பு ஏற்படுவதை எம்மால் தவிர்க்க முடியாது.

1. ஆண்கள்
2. வயதானவர்கள் (65 வயது)
3. இதய நோயால் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களைக் கொண்டவர்கள். இவர்களுக்கு சாதாரணமான ஒருவரை விட மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

2) மாற்றக்கூடிய காரணங்கள்.

இவற்றை நாம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

1. நீரிழிவு நோய் :- இவர்களுக்கு மற்றவர்களுடன் ஒப்பிடும் போது மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு மூன்று மடங்கு அதிகம். இவர்கள் மருந்துகளை சரியான அளவில் ஒழுங்காகப் பாவிப்பதாலும் உணவுக்கட்டுப்பாட்டை மேற்கொள்வதாலும் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

2. அதிகரித்த கொழுப்பின் அளவு. இரத்தத்தின் கொழுப்பின் அளவு மரபு வழியாகவும் உணவுப் பழக்கங்களில் கவனம் செலுத்தாமையினாலும் தைரொயிட், சிறுநீரகக் கோளாறுகள் போன்ற நோய்களாலும் மதுப்பழக்கத்தாலும் அதிகரிக்கின்றது. இதனால் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கின்றது. அதிகரித்த கொழுப்பின் அளவு உள்ளவர்கள், சரியான உணவுப்பழக்க வழக்கம், உடற்பயிற்சி மருந்துகள் உட்கொள்வதன் மூலம் மாரடைப்பைக் குறைக்கலாம்.

3. அதிகரித்த இரத்த அழுத்தம்:- சரியான மருந்துகள் உட்கொள்ளல், உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு, புகைத்தல் மற்றும் மதுப்பாவனையை நிறுத்துதல் மூலம் அதிகரித்த இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாடாக வைத்திருந்து மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

4. அளவுக்கதிகமான மதுபாவனை, புகைப்பிடித்தல், சாதாரண ஒருவரை விட இவர்களுக்கு இரத்த அழுத்தம், இரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகம். புகைத்தல், மதுபாவனையை நிறுத்துதல் மூலம் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

5. மன அழுத்தம்:- மன அழுத்தம் உள்ளவர்கள் தியானம், மூச்சுப்பயிற்சி உள்ளிட்ட யோகாப் பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

6. அதிக உடற்பருமன்:- எப்போதும் உடல் எடையைக் குறைத்து வைத்திருப்பது மாரடைப்பு மட்டுமல்லாது வேறு உடல்நலப் பிரச்சினைகளில் இருந்தும் நம்மைக் காப்பாற்றும்.

இதனால் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் தமக்கு நீரிழிவு, அதிகரித்த இரத்த அழுத்தம், அதிகரித்த கொழுப்பு உள்ளதா? என ஆண்டு தோறும் பரிசோதித்துப் பார்ப்பதன் மூலம் கண்டறியப்படாத நோய்களினால் ஏற்படும் மாரடைப்பு வீதத்தைக் குறைக்கலாம்.



**மாரடைப்பு ஏற்ப்பட்டுள்ளதை வைத்தியர் எவ்வாறு இனங்காணுவார்?**

1) நோயாளியின் அறிகுறிகள் பூரண நோய் வரலாற்றை அறிந்து கொள்வதன் மூலமும் நோயாளியைப் பரிசோதிப்பதன் மூலமும்.

2) ECG எனப்படும் இருதய வரைபுப்பட்டி :-இது மாரடைப்பின் தொடக்கத்தில் மாற்றங்கள் எதனையும் காட்டாது தொடர்ச்சியாக எடுக்கப்படும் போது மாறுதல்களைக் காட்டுவதாக இருக்கலாம். பொதுவாக மாரடைப்பு ஏற்படும் போது ECG இல் உள்ள மாற்றங்களைக் கொண்டே ஆரம்ப சிகிச்சை முறை தீர்மானிக்கப்படும்.

3) இரத்தப் பரிசோதனைகள் :- குறிப்பாக ரொபோனின் - (Troponin-I) இது மாரடைப்பு ஏற்பட்டு 4-6 மணித்தியாலங்களில் அதிகரிக்கும்.

4) எக்கொ (Echo) பரிசோதனை:- இதன்மூலம் மாரடைப்பின் போது இருதயத்தசைகள் பலவீனமடைந்துள்ளதா? அல்லது இருதயத் தொழிற்பாடு குறைவடைந்துள்ளதா? என அறிந்து கொள்ளலாம்.

5) ETT எனப்படும் ரெட்மில் (Treadmill test)இது மாரடைப்பின் பின்னரும் மாரடைப்பு ஏற்படும் முன்னரும் கூட நடக்கும் போது ECG இல் ஏற்படும் மாற்றங்களை வைத்து மேலதிக பரிசோதனையான அஞ்சியோகிராம் பரிசோதனையைத் (Coronary Angiogram) தீர்மானிப்பதற்கு உதவியாக இருக்கும்.

6) அஞ்சியோகிராம் (Coronary Angiogram) பரிசோதனை இருதயத்திற்கான இரத்தக்குழாய்களில் ஏற்படும் அடைப்பு வீதத்தையும் அடைப்பு காணப்படும் குருதிக்குழாய்களையும் இனங்கண்டு கொண்டு சிகிச்சை முறையை (Angioplasty/CABG) தீர்மானிக்க உதவும்.

**வைத்தியர் மாரடைப்பின் போது உங்களுக்கு வழங்கும் சிகிச்சைமுறைகள் எவை?**

1. இரத்தம் உறைவதனைக் தவிர்க்கக் கூடிய மருந்துகள் வழங்கல்.

உ-ம் - அஸ்பிரின் (Asprin) குளோபிடோகிறல் (Clopidogrel)

2. நெஞ்சுவலியைக் குறைக்கும் மருந்துகள் வழங்கல்.

உ-ம் - ISMN ,GTN

3. இரத்த அழுத்தத்தை சீராக்கும் மருந்துகளும் இருதயத்துடிப்பைக் குறைத்து இருதயத்திற்கான இரத்த வழங்கலை அதிகரிக்கும் மருந்துகளும் வழங்கல்.

உ-ம்- கப்ரோபிறில் (Captopril) அடினலோல்(Atenolel)

4. ஒட்சிசன் இருதயப்பலவீனம் ஏற்பட்டவர்களுக்கு பெரிதும் உதவும்.

5. இரத்த குழாய்களில் உள்ள இரத்தக் கட்டிகளைக் கரைக்கும் (Thromolyis) மருந்துகளை வழங்கல் உ-ம்-ஸ்ரெப்ரோகைனேஸ் (Streptokainese), rtPA இதனால் இரத்தோட்டத்தை இயத்தசை மீளப்பெறும் வாய்ப்பு ஏற்படுகிறது. நோயாளி ஒருவர் நெஞ்சு வலி ஏற்பட்டு எவ்வளவு குறுகிய நேரஇடைவெளியில் சிகிச்சை பெற வருகின்றாரோ அவ்வளவு இம் மருந்துகள் பயன்படுத்தக்கூடியதாகவும் 12 மணித்தியாலங்களுக்குள் பலனைத் தருவதாகவும் இருக்கும்.

6. ஆரம்ப சிகிச்சையைத் தொடர்ந்து அன்சியோகிராம் பரிசோதனையின் பின்னர் அடைப்புகளுள்ள இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்யும் ஸ்ரெனட் (stent) இடப்படுதாலோ (Angioplasty) இருதயசத்திர சிகிச்சை (ABG)செய்யப்படுதாலோ மீள் குருதியோட்டம் பெறப்படும். இதனால் இருதயத்தசைகளுக்கு ஒட்சிசன் நிறைந்த குருதி வழங்கப்படும். இருதயத்தசை இறப்படைதல் தடுக்கப்படும். இதனால் மரணம் தவிர்க்கப்படும்.

**மாரடைப்பின் பின்னர் எமது வாழ்க்கை முறையில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் என்ன?**

1) உணவுப்பழக்கத்தில் ஏற்படும் மாற்றம்.

உணவில் கலோரி குறைந்த உணவுகளான காய்கறிகள், விற்றமின்கள், கனியுப்புக்கள், நார்த்தன்மை நிறைந்த உணவுகள், பழங்கள் என்பவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும். கொழுப்புச் சத்து குறைந்த தாவர எண்ணெய்களை, சூரியகாந்திஎண்ணெய், நல்லெண்ணெய். ஆடை நீக்கிய பால் என்பவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

மஞ்சட்கரு, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, நண்டு, இறால், கணவாய், பெரிய மீன்கள் என்பவற்றைத் தவிர்க்க வேண்டும்.

.3) மருந்துகளை சரியான அளவில் சரியான முறையில் பாவித்தலும் தவறாது கிளினிக் செல்வதன் மூலம் இரத்த அழுத்தம், இரத்தப் பரிசோதனைகளை கிரமமாகப் பார்த்துக் கொள்வதும் அத்தியாவசியம்.

4) மாரடைப்பினால் ஏற்படும் உடல், உளபாதிப்பை குடும்ப அங்கத்தவர்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும். சிலர் மீதமுள்ள ஆயுள் முழுவதும் பிறரில் தங்கி வாழும் நிலைமை ஏற்படும் போது ஏற்படும் மனச்சோர்வையும் மன அழுத்தத்தையும் நீக்க வைத்தியரின் உதவியையோ அல்லது உளவள ஆலோசகர்களின் ஆலோசனையையோ நாடலாம்.

5) உடற்பயிற்சி செய்வது மாரடைப்பினால் ஏற்படும் இருதயப் பலயீனத்தின் அளவைப் பொறுத்து தீர்மானிக்கப்படும்.

சாதாரணமாக நோயாளி தனக்கு களைப்பு ஏற்படாத வகையில் ஆரம்பித்து படிப்படியாக வேகத்தையும் நேரத்தையும் அதிகரித்து ஒருநாளில் 20-30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வதை வழக்கத்தில் ஏற்படுத்த வேண்டும்.

6) இளவயதில் மாரடைப்பு ஏற்பட்டவர்கள் சிக்கல்கள் அற்ற மாரடைப்பாயின் 4 கிழமைகளின் பின்னர் உடலுறவை மேற்கொள்ளலாம்.

7) மதுபாவனையையும் புகைப்பிடித்தலையும் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

8) உடற்பருமனை உயரத்திற்கு ஏற்ப குறைக்க வேண்டும்.

9) இருதய சத்திரசிகிச்சை அல்லது ஸ்ரெனட் (Stent) வைக்கத் தேவையானவர்கள் தமக்கு உரிய சிகிச்சை முறையை உடியாக தீர்மானிப்பதன் மூலம் மாரடைப்பின்பின்னான மரணத்தை தவிர்த்துக் கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி
பூ.லக்ஷ்மன்
இருதய வைத்திய நிபுணர்
யாழ்.போதனா
வைத்தியசாலை.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**